# வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள்

அ. மு. ப.

521

# வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள்

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம்
(1941—1966)

அ. மு. பரமசிவானந்தம்,
*தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பர் கல்லூரி,*
*சென்னை-30.*

**தமிழ்க்கலைப் பதிப்பகம்,**
தமிழ்க்கலை இல்லம்,
சென்னை-30

முதற் பதிப்பு—உரிமை ஆசிரியருக்கே
மார்ச்சு, 1966

விலை ரூ. 3-00

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**

59, பிராட்வே :: சென்னை-1.

ஈஸ்வரி பிரிண்டர்ஸ்

40, சீனிவாசப் பெருமாள் சன்னதித் தெரு,

இராயப்பேட்டை, சென்னை-14.

உ

சிவமயம்

*கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவில் பங்கு கொண்டு சிறந்த சொற் பொழிவுகளாற்றிய பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்களைப் பாராட்டியது.*

## நேரிசை வெண்பா

வங்கத் தலைநகரில் வாழும் தமிழர்க்குத்
துங்கத் தமிழின் சுவைதந்தார்—பொங்கும்
அரவா பரணன் அடியவராம் அ. மு.
பரமசிவா னந்தம் பரிந்து.

**ந. சிங்காரம்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தொல்காப்பியர் கண்ட வாழ்வியல் | 9 |
| 2. | காமமோ பெரிதே! | 31 |
| 3. | புறம் காட்டும் அறம் | 58 |
| 4. | தம்மை மறந்த அடியவர்—அமைச்சர் | 90 |
| 5. | தம்மை மறந்த அடியவர்—அரசர் | 117 |
| 6. | பாரதி என்றும் வாழும் கவி | 142 |
| 7. | நேற்று இன்று நாளை | 166 |

# முன்னுரை

வங்கத் தமிழ் மக்கள் உள்ளத்தால் தமிழ் வளர்ப்பவர்கள். தமிழெனின் தளராது உழைப்பவர்கள்; செல்வத்தை அள்ளி வழங்குபவர்கள். அவர்கள் இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் தோற்றுவித்த சங்கமும் 'பாரதி தமிழ்ச் சங்க'மாகும்.

பாரதி தமிழ்ச் சங்கம் வங்கத் தலைநகராம் கல்கத்தாவில் தோன்றிய நாள்தொட்டுத் தமிழ் வளர ஒல்லும் வகையிலெல்லாம் பாடுபடுகிறது; எளிய பாமர மக்கள் முதல் கல்லூரி மாணவர் வரை தமிழைக் கற்க வழிகளை வகுக்கின்றது. தமிழ் நாட்டு அறிஞர்களை 'வருக' என ஏற்று அந்நாட்டு மக்களுக்குத் தமிழார்வம் பெருகச் செய்கிறது.

பாரதி தமிழ்ச் சங்கத்தார் வெள்ளிவிழாவிற்கு வருகவென அழைத்தார்கள். வான்வழிச் சென்று விழாவிற் கலந்து திரும்பினேன். விழா நாட்களில் அவர்தம் 'தமிழ்க் காதல்' நன்கு புலனாயிற்று. அவ்விழாவில் நான் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்த நூல்.

தொல்காப்பியர் காலந் தொடங்கி இன்று வரை வாழ்ந்த புலவர் பலரை எனக்குத் துணையாக

வங்க நாட்டுக்கு அழைத்துச் சென்றேன். அவர் தம் வாக்குகளே இந்நூலை உருவாக்கிற்று என்பதைப் பயில்வோர் அறிவர். விழா முடிவில் இந்நூலை விரைவில் கொணர விரும்பிய சங்கத்தாரின் உணர்வை அறிந்தேன்; முடிப்பன முடித்தேன். இன்று இந்நூல் இந்த வடிவில் வெளிவருவதற்கு ஊக்கிய பாரதி தமிழ்ச் சங்கத்தாருக்கு என் நன்றி. அவர்தம் தமிழ்த் தொண்டு தழைப்பதாக! செல்லும் இடமெல்லாம் தத்தம் பல்வேறு பணிகளுக்கிடையில், ஒல்லும் வகையில் அன்னைத் தமிழுக்கு ஆக்கப் பணி புரியும் அனைவருக்கும் என் வணக்கமும் நன்றியும் உரியன.

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை-30
24-3-66

அ. மு. பரமசிவானந்தம்

## 1. தொல்காப்பியர் காட்டும் வாழ்வியல்

**வா**ழ்வுக்கும் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆதி மனிதன் ஒருவேளை மொழியற்று விலங்கொடு விலங்காகப் பேச்சற்று வாழ்ந்திருக்கக்கூடும். இன்று மொழியின்றேல் மனித வாழ்வு இல்லை என்ற நிலையில்தான் நாம் வாழ்கின்றோம். எனவே மொழியும் அதன்வழி எழுந்த இலக்கிய இலக்கணங்களும் மனித வாழ்வின் கண்ணாடி எனலாம். உலகில் எத்தனையோ மொழிகள் தோன்றி வாழ்ந்து மறைந்தன. தமிழும்-தோன்றிய கால எல்லையைக் கணக்கிட முடியா விட்டாலும், அத்தொன்மைக்குத் தொன்மையான மொழி-இன்றும் புதுமைக்குப் புதுமையாய்ப் புத்தொளி கொண்டு வாழ்வதைக் காண்கின்றோம்.

தமிழில் மிகப் பழங் காலந்தொட்டுப் பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. 'இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்புதல்' மரபாதலின் பல இலக்கண நூல்களும் எழுந்தன. தொல்காப்பியர் காலம் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் என்பர். கடைச் சங்க காலத்திற்கு முற்பட்டது என்பதில் யாருக்கும் ஐயமில்லை. இஃது ஓர் இலக்கண நூல். இவ்வாறாய தெளிந்த இலக்கண நூல் தோன்ற வேண்டுமானால் அதற்குமுன் எத்தனையோ ஆயிரமாயிர மாண்டுகளுக்கு முன்பே தமிழ்மொழி செம்மையுற்றிருக்க வேண்டும்.

தொல்காப்பியரும் தாமே முதல் நூல் செய்ததாகக் கூறுது 'என்ப', 'என்மனுர் புலவர்' என்று பல இடங்களில் தமக்கு முன் உள்ள இலக்கண அறிஞர்களைக் காட்டி அவர் எழுதிய நூல்களைச் சுட்டிச் செல்லுகின்றுர். எனவே தமிழ்மொழி மிகப் பழங்காலத்திலே செம்மை பெற்று, அமைதியுற்ற சட்ட திட்ட எல்லையுள் இயங்கி வளர்ந்த மொழி என்பது தேற்றம். இன்றைய மேலைநாட்டு மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் இவ்வுண்மையைக் கண்டு உணர்ந்து போற்றி உலகுக்கு உணர்த்தி வருகின்றனர்.

தொல்காப்பியம் மொழிபற்றிய ஓர் இலக்கண நூலே. எனினும் இதன் வழி அன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வியலை நன்கு உணர்ந்து கொள்ளக்கூடும். பொதுவாக இலக்கியங்கள்தாம் அவ்வக் காலத்தில் வாழ்ந்த மக்கள் வாழ்வியலைக் காட்டும் என்று ஆய்வாளர் கூறுவார்கள். ஆனுல் தொல்காப்பியம் இதற்கு விலக்காக அமைகின்றது. தொல்காப்பியம் வெறும் இலக்கண நூலாக மட்டுமன்றி இலக்கிய மரபினைக் காட்டி, அக்கால மக்கள் வாழ்வியலையும் சுட்டுகின்றது. இதற்குக் காரணம் பிறமொழி இலக்கணங்களைப் போன்று வெறும் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் கூறுவதோடு அமையாது, இது பொருளுக்கும் இலக்கணம் கூறுவதேயாம். நாட்டு நிலையை - உலக நிலையில் உள்ள பொருள்களின் அமைதியை-ஆய்ந்து அவற்றின் இயல்புகளைக் கூறுகின்றமையின் இந்நூல் அக்கால வாழ்வியலைக் காட்ட முடிகின்றது. மேலும் எழுத்தும் சொல்லும் காட்டுகின்ற நிலையிலும்கூட இஃது உயிரியலையும் வாழ்வியலையும் ஓரளவு தொட்டுக் காட்டுகின்றது. இப்பகுதியை நான் வேறெரு நூலில் விளக்கிக் காட்டியிருக்கின்றே ஞதலின் இங்கு ஒரு சிலவற்றை மாத்திரம் தொட்டுக் காட்டி மேலே செல்கிறேன்.

முதலாவது தொல்காப்பியர்தம் எழுத்ததிகாரத்தைக் காண்போம். எழுத்தென்பது என்ன என்பதைப் பற்றி யாருக்கும் ஐயமில்லை. எழுதப்படுவது எழுத்து எனச் சுருக்கமாகச்

சொல்லலாம். ஆயினும் தொல்காப்பியர் அதற்குரிய பிறப்பியல் வகைகளையெல்லாம் விளக்கி, தோற்றநிலைகளையும் அவற்றின் காரணங்களையும் பயன்களையும் விளக்கிக் காட்டும் போது ஒரு பெரிய அறிவியல் நூலாகவே இது காட்சியளிக்கின்றது. இன்று மேலை நாட்டில் இவ்வொலியியல் பற்றிய ஆராய்ச்சி அதிகமாக நடக்கிறது. அமெரிக்க நாடு அதற்கெனக் கோடிக்கணக்காகப் பணம் செலவு செய்கிறது. ஆயினும் அந்தப் பழங்காலத்திலேயே தொல்காப்பியர் இந்த ஒலிகளின் பிறப்பிடங்களையும் மாற்றங்களையும் சிறப்பியல்புகளையும் நன்கு விளக்கி, அவை அவ்வாறு அமையவேண்டிய ஒழுகலாற்றினையும் தெளிவுபடுத்தியுள்ளார். இத்துறையிலும் மேலை நாட்டார்தம் கருத்துத் தற்போது திரும்பியிருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

இனி, தொல்காப்பியர் எழுத்துக்கள் அடிப்படையில் மக்கள் வாழ்வின் அடிப்படையைக் காட்டும் நெறியினைக் காணலாம். மனித வாழ்வின் அடிப்படை உடலும் உயிரும் இரண்டும் இணைந்ததே-பிறப்பு - வாழ்வு - எல்லாம். இவையிரண்டும் பிரியின் வாழ்வு அற்ற நிலைதான். மேலும் இவ்வுடம்பொடு உயிர் கலப்பது இயற்கை. அவ்வாறு கலக்கும் போது உயிர் தன்நிலை மறைத்து மெய்யேதான் என்னுமாறு அதன் இயக்கமே தன் இயக்கமாகப் பல மாறுதல்களையும் பெறுகின்றது. அப்படியே மெய்யொடு உயிர் பொருந்தி, மெய்யேயாய் அது வாழ்க்கை நடத்துகின்றதென்றாலும், அதன் உயிரியல் திரியா நிலையிலே நின்று செயல்படும். அந்தச் செயலில் பண்பும் பயனும் உயிரைச் சார்ந்தே காலந்தொறும் பிறவிதொறும் பற்றிவரும். இவையே உயிர் உடலொடு பொருந்திய வாழ்வின் அடிப்படை. இவ்வுடலை 'மெய்' என்று காட்டுகின்ற மரபினை நாமறிவோம். இனி இந்த வாழ்வியல் அடிப்படையினையே மொழியியல் அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியர் மொழி அமைப்பை எவ்வெவ்வாறு காட்டுகிறார் என்பதையும் நோக்குவோம்.

தமிழில் உயிர், மெய் என்ற இருவகை எழுத்துக்களும் உண்டு. மெய் எழுத்தின்மேல் உயிர் வந்து சேர்வதுவே இயல்பான முறை. அம்மெய்களின் வழியேதான் உயிரின் தோற்றத்தை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. அவ்வாறு மெய் எழுத்தோடு உயிர் எழுத்துச் சேர்ந்தாலும் அதன் தன்மையும் மாத்திரையும் குறையா. 'மெய்' எழுத்துத் தன்னைக் காட்டவரினும் உயிரெழுத்தின் முதலாக உள்ள அகரத்தொடு தோன்றியே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும். இவைகளை, 'க்+அ' = 'க', க்+இ = கி. க்+ஊ = கூ என்ற வகையில் காணலாம். 'க' கரம், 'ச'கரம் என்று மெய்கள் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதையும் அறிய முடிகின்றது. தொல்காப்பியர் இவற்றின் இயல்புகளைப் பலவகையில் கூறுவர்.

உடன்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (நன். 204) என்று பவணந்தியார் சுருக்கமாக இலக்கண மரபொடு கூறி விட்டார். எனினும் தொல்காப்பியர் அதை வாழ்வொடு பிணைத்து, 'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலை' (நூன் மரபு, 18) என விளக்கங் காட்டிக் கூறுகிறார். மெய் எழுத்து இருப்பின் அதன் வழியே உயிர் எழுத்துத் தோன்றிச் சிறக்கும். உலகில் வாழும் உயிர்களும் அதே அடிப்படையில்தான் மெய்யின் இடையில் புக்குத் தோன்றி உலகில் நிலைபெற வாழும். அது மட்டுமன்றி நாம் மேலே கண்டபடி மெய்யொடு தோன்றினும் உயிருக்கு இயல்பாக உள்ள தன்மை மாறாது என்ற உண்மையையும் எழுத்து முறை காட்டி, 'மெய்யொடு இயையினும் உயிரியல் திரியாது' (நூன் மரபு, 10) என்பர், எனவே தொல்காப்பியர் வாழ்வின் அடிப்படையாக உள்ள உயிர்த் தோற்றத்தையே நம் இலக்கண மரபு கெடாவகையில் காட்டிவிட்டார் என்பதை அறிந்து போற்றக் கடமைப்படுகிறோம்.

இத்தொல்காப்பியத்தின் மற்றொரு சூத்திரமும் இங்கே எண்ணத் தக்கதாகும். அது,

மெய்உயிர் நீங்கின் தன்உரு வாகும் (புணரி. 37)

என்பது. இதன் வழி உயிர் தான் கொண்ட மெய்யினை விட்டு நீங்கினால் மெய் இயல்பான தன் உருவை அடையும் என் கிறார் தொல்காப்பியர். இவ்வுலகில் உயிரொடு கூடிய உடம்பின் நிலையும் அத்தகையதே. பஞ்சபூதச் சேர்க்கை யால் ஆகிய இவ்வுடம்பு உயிரொடு கூடியவழி எல்லா ஏற்றங் களையும் பெற்று அசைவுற்று ஆடிப் பாடித் திரியும். ஆனால் உயிர் நீங்கிவிட்டால் அதன்நிலை என்னை? ஒருசில மணி நேரத்துக்குமேல் அவ்வுடம்பை வைத்திருக்க இயலாது. அது தன் இயல்பான உருவாகிய பஞ்ச பூதங்களாக மாறத் தொடங்கிவிடும். இதை ஆங்கிலத்தில் 'Decompose' எனக் கூறுவர். எனவே உயிர் உடலொடு பொருந்தித் தோன்றும் தோற்றத்தை மட்டுமன்றி அது பிரியும் நிலையினையும் பிரிந்த பின் மெய் பெறும் நிலையினையும்கூட வாழ்வியல் அடிப்படை யில் தம் இலக்கண மரபு கெடாவகையில் தொல்காப்பியர் விளக்கிச் செல்லுகின்றார்.

இனி, தொல்காப்பியர் காட்டும் வேறு இலக்கண அமைதிகளை வாழ்வொடு பொருத்திக் காண்போம். எழுத்துக் களில் இனப் பிரிவு உண்டு என அறிவோம். என்ன? எழுத் திலும் இனப் பிரிவா என்ற வினா எழும். ஆம்! ஆனால் அந்த இனப் பிரிவு, மனித இனப் பிரிவுபோல ஒன்றோடொன்று போட்டியிட்டு மடிவதற்காக ஏற்பட்டதன்று. மொழியாகிய கூட்டுச் சமுதாயத்தை நன்கு செயல்படுத்தும் வகையில் வாழ வைப்பதற்கெனவே அவ்வெழுத்துக்கள் இனப் பிரிவை அமைத்துக் கொண்டன. வல்லினமும் மெல்லினமும் இடை யினமும் இயைந்து தம்முள் 'ஒலியாலன்றி' வேறாகிய வேறு பாடுகள் கொள்ளாது மொழிவளரப் பயன்படுகின்றன. ஆனால் மனிதன் தன் இனத்தையே அடிப்படையாகக் கொண்டு பிற இனங்களோடு மாறுபட்டு நிலை கெடுகிறான். இந்த இனப் பிரிவிலேயும் இலக்கண மரபில் ஒவ்வொரு வல்லினத் தோடு ஒவ்வொரு மெல்லினத்தை இணைப்பர். 'கங' 'சஞ' 'டண', 'தந', 'பம', 'றன' என அவைகள் இணைந்தே வாழும். இனத்தால் தம்மைப் பிரித்துக்கொண்டு வேறுபாடுகளைக்

கற்பிக்கும் வழக்கம் இவ்வெழுத்துக்களுக்கு இல்லை. இப்படிச் சில ஒலிகளின் இணைப்பும் அமைந்துள்ளன. வல்லின ஒலி தான் சாரும் மெல்லினத்துக்கு ஏற்ப வணங்கிக்கொடுக்க வேண்டிய நிலையினை மொழியியலில் காண்கின்றோம். கால்டுவெல் இந்த அடிப்படை உண்மையை, 'Convertability of Surds into Sonants' என்ற தலைப்பில் விளக்குவர். மனிதரில் வலிமையும் வன்மையும் பெற்றவர், தம்மினும் மெலியவருடன் சேர்வதும் கலப்பதும் தம் பெருமைக்குக் குறைவு என எண்ணும் மனப்பான்மையில் வாழ்வதைக் காண்கின்ற நமக்கு இம்மொழி அமைப்பு வழிகாட்டியாக அமைகின்றது. தொல்காப்பியர் இவற்றின் விளக்கங்களையெல்லாம் எழுத்ததிகாரத்தே நன்கு விளக்கி, அவை வாழ்வொடு பொருந்திய வகைகளையெல்லாம் புலப்படுத்துகின்றார். விரிவஞ்சி மேலே செல்லுகிறேன்.

இனி, சொல்லதிகாரத்திலும் தொல்காப்பியர் இலக்கண நியதிவழி நின்று வாழ்வியலைக் காட்டுகின்றார். இப்பகுதியில் மக்களை உயர்திணையாகக் கூறி, உடல் உறுப்புகளால் மக்களைப் போன்றிருந்தும் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உணராதிருக்கும் புல்லரை விலங்கொடு சேர்த்து அஃறிணையாக்கியும் காட்டும்நிலை வாழ்வில் வேண்டப்படுவதாகும். உயர்திணைக்கு மாறாகத் 'தாழ்திணை' என்னாது, 'அஃறிணை' என்ற சொல்லால் குறிப்பது மொழியின் பண்பாட்டை விளக்குவதாகும். இனி, இன்றைய மனிதன் தன் செயற்கை வண்ணத் திறனால் இயற்கைப் பொருளையும் தோற்கடிக்கும் நிலையில் பல பொருள்களைச் செய்கின்றான். அவற்றால் எது இயற்கை, எது செயற்கை என எண்ணவும் கூடுவதில்லை. ஆயினும் தொல்காப்பியர் அவற்றைச் சொல்லும் நெறியிலிருந்தே அவை இயற்கையா செயற்கையா என அறிந்து கொள்ளக்கூடிய வகையினைக் காட்டுகின்றார்.

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் (கிளவி. 19)
செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் (கிளவி. 20)

என்பன தொல்காப்பிய நூற்பாக்கள். இவற்றிற்கு உரை எழுதவந்த சேனாவரையர் இந்த வாழ்வியல் அடிப்படைத்

தேவையை நன்கு விளக்குகிறார். அவரது தர்க்கநெறி உலகறிந்த ஒன்று. ஈண்டு நாம் அவற்றை விட்டு மேலே செல்லலாம்.

இவ்வாறே சில சொற்களின் அமைப்புக்களையும் முடிபுகளையும் சேர்க்கைகளையும் தொல்காப்பியர் கூறும்போது அவற்றால் வாழ்வியல் நன்கு விளக்கமுறுவதை நம்மால் அறிய முடிகிறது. 'கள்' என்ற விகுதி இன்று எல்லாவற்றிற்கும் பயன்படுத்தப் பெறுகின்றது. ஆனால் தொல்காப்பியர் 'கள்' அஃறிணைக்குமட்டும் உரிய ஒன்று என்றும் உயர்திணைக்குத் தேவை இல்லை என்றும் வரையறுக்கும் நிலையினைக் காண்கின்றோம். விகுதியாகிய 'கள்' அன்றி, மயக்கும் 'கள்'ளும் உயர்திணைக்குத் தேவையற்றதென்றுதானே அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வாறே பெயர், வினை, இடை, உரிச்சொற்கள் மொழிவழி மக்கள் வாழ்வியலுக்கு உணர்த்திக் காட்டும் பண்பாடும் நெறிகளும் பலவாம். இவை பற்றியெல்லாம் நான் முன்னமே வெறொரு நூலில் (சமுதாயமும் பண்பாடும்) விளக்கியிருக்கின்றேனாதலின் இங்கு அவற்றை விடுத்து, பொருள் வழியில் தம் பொருளதிகாரத்தே வாழ்வியலை எவ்வாறு காட்டுகிறார் என்பதை மட்டும் தொட்டுக் காட்டலாம் எனக் கருதுகிறேன்.

பொருளை அகம் புறம் என இரண்டாகப் பிரித்தார்கள். அகம் என்பது உள்ளத்துள்ளே பெறும் இன்பம் என்பர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற வாழ்வியலின் சிறப்புக்களாகிய நான்கில் இன்பமே அகமாகத் திகழ்வது என்றும் மற்றவை மூன்றும் புறமென்றும் அறிந்தோர் அறுதியிடுவர். அவ்வக ஒழுக்கத்தே தலைவன் தலைவி என்ற இருவரே முக்கியமானவர். அவரைச் சேர்த்து வைக்கவும் சேர்ந்து வாழவும் பல துணையாளர் இடம் பெறுகின்றனர். அத்தலைவன் தலைவியரது காதல் ஒழுக்கமே உலக வாழ்வின் அடிப்படையாக அமைகின்றது. முதலில் தலைவன் தலைவியைக் களவியலில் கண்டு மகிழ்கின்றான். களவு நன்றாகுமிடமே அகம். ஒருத்தியை ஒருவன் களவில் புணரும் காலத்து எவ்வெவ் வகையில்

வாழ்வு அமைய வேண்டுமென்பதையும் அத்தலைவனும் தலைவியும் எத்தகைய பண்பாட்டில் சிறக்க வேண்டு மென்பதையும் தொல்காப்பியர் கூறுவர். (இவ்வகப்பொருள் பற்றிய தெளிந்த விளக்கத்தைப் பின் 'காமமோ பெரிதே' என்ற தலைப்பில் காட்ட இருக்கின்றேன்.) தொல்காப்பியர் காட்டிய தலைவன், தலைவியை நன்கு உணர்ந்து கொள்ளின் அவர்தம் களவிலும் கற்பிலும் ஐயம் ஏற்படக் காரணமே இல்லை. இவ்வகப் பொருளில் வரும் 'ஒத்த தலைவனும் தலைவியும், என்ற தொடருக்கு உருவு, திரு, ஏர், எழில் இன்ன பிறவற்றில் ஒத்தவர் எனப் பொருள் காட்டுவர் அறிஞர். ஆயினும் அவைகளை எவ்வாறு விளக்க இயலும்? சில ஒப்புமை அளவில் அமையுமேயல்லாது வரையறுத்துக் காட்ட இயலா. சிலவற்றைக் குறிப்பாகக் காட்ட இயலுமேயன்றி வெளிப்படையாகக் காட்ட இயலாது. இவை கேட்போர் அல்லது காண்போர் அல்லது உறுவோர் நெஞ்சு கொள்ளும் வகையில் அமையுமேயன்றி வரையறைக்குட்படா என்ற உண்மையைத் தொல்காப்பியர்,

> ஒப்பும் உருவும் வெறுப்பும் என்று
> கற்பும் ஏரும் எழிலும் என்று
> சாயலும் நாணும் மடனும் என்று
> நோயும் வேட்டையும் நுகர்வும் என்றுங்கு
> ஆவயின் வரூஉம் கிளவி யெல்லாம்
> நாட்டிய மரபின் நெஞ்சுகொளி னல்லது
> காட்ட லாகாப் பொருள வென்ப (பொரு. 53)

என்பர். எனவே இவற்றின் சிறப்பியல்புகள் அகவொழுக்க இன்பத்தை உள்ளத்துணர்வார் உற்று அறிவது போன்று அறிந்து கொள்ளத்தக்கன என்பது தேற்றம்.

தமிழில் அகவாழ்வினையும் புறவாழ்வினையும் 'திணை'யின் அடிப்படையிலேயே பிரித்தனர். முன்சொல்லுக்கு இலக்கணம் காணும்போது உயர்திணை அஃறிணை என்று இருவகையினைக் கண்டோம். ஈண்டு அதன் நிலை பொருள் பொதிந்ததாகும்.

ஐந்து திணை அகத்திலே ஒத்த உள்ள உணர்வால் சிறப்பன; அப்படியே புறத்தும். ஈண்டுத்'திணை' என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்றே பொருள். இந்த வகையில் ஒழுக்கத்தின் அடிப்படையில் வாழ்வினைப் பிரிப்பதை வேறு எங்கே காண முடியும்? அகவொழுக்கம், புறவொழுக்கம் என்ற விரிந்தஅடிப் படையில் அமைவதோடு, களவொழுக்கம் கற்பொழுக்கம் என்ற உட்பிரிவுகளையும் காண்கின்றோம். இன்னும் விரிவாகக் குறிஞ்சி ஒழுக்கம், பாலை ஒழுக்கம் என்று திணை ஒழுக்க நிலை களையும் காண்கிறோம். எனவே தமிழ் மக்கள் வாழ்வு—அக வாழ்வாயினும் சரி, புறவாழ்வாயினும் சரி ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைந்து நின்றது—நிற்கின்றது என்பது தேற்றம்.

அப்படியே ஒவ்வொருதிணைக்கும் நிலத்தையும் காலத்தை யும் அறுதியிட்ட சிறப்பும் எண்ணத்தக்கது. இன்னின்ன ஒழுக்கம் இன்னின்ன நிலத்தும் இன்னின்ன காலத்தும் சிறக்கும் எனக் கணக்கிட்டு அவற்றின் வழியே வாழ்வமைத் தனர். மேலும் அவ்வவ்வொழுக்கத்தின் அடிப்படையிலேயே அவ்வந் நிலத்துக்கும் பெயரிட்டனர். அவ்வந் நிலத்து ஒழுக்கத்தையே அதற்கு உரிமையாக்கி, அவற்றை உரிப் பொருள் எனவே அழைத்தனர். இதே வகையில் புறத் திணைகள் அமைவதையும் காணலாம். இவ்வகப் பொருளைப் பற்றி மற்றொரு முக்கியச் சிறப்பையும் இங்கே காணல் வேண்டும்.

> எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும் (பொரு. 27)

என்பது தொல்காப்பியம். இதற்கு உரை கூற வந்த நச்சினார்க் கினியர், 'ஆணும் பெண்ணுமாய்ப் போகநுகர்ந்து வருதலின் ஒருவனும் ஒருத்தியும் இன்பம் நுகர்ந்தா ரெனப் படாது அவ்வின்பம் எல்லா உயிர்க்கும் பொதுவென்பதும் இரு பாலாய்ப் புணர்ச்சி நிகழ்த்தும் என்பதூஉம் கூறியதாயிற்று' எனக் காட்டுவர். இதனால் இன்பம் புல் மர முதலாகிய ஓரறி

வுடைய உயிர் தொடங்கி அனைத்து உயிர்களுக்கும் உண்டு என வும் அதை, அவை இருபாலான நிலையில் இருந்தே துய்க் கும் எனவும் காண முடிகின்றதன்றோ? எனவே எல்லா உயிரி டத்தும் பால் வேறுபாடு உண்டு என்ற உயிர் தோற்ற வாழ் வியலின் அடிப்படையைத் தொல்காப்பியர் உணர்ந்து காட்டி யுள்ளார் என்பது தேற்றம். மேலும் இச் சூத்திரத்தின் வழி உலக இயலைக் காட்டும் நெறியில் 'உலகில் வாழும் எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடுகின்றன' எனப் பொருள் கொள்வதும் பொருந்தும். இந்தப் பொதுவகையான இன்பத் தைத் தனிப்பட்ட ஒருவன் ஒருத்தி பேரில் ஏற்றிச் சொல்லு வது தவறு என உணர்ந்து தானோ தொல்காப்பியர்,

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர் அகத். 54)

எனக் காட்டுகிறார். இதை மக்கள் சுட்டிக்காட்டுவ தல்லது தனிப்பட்டவர் பெயரைக் கூறவகையில்லை-முறையில்லை-வாழ் வியல் இல்லையென வரையறுத்துள்ளார்.இந்த உண்மையையே அகம், புறம் என்ற இரண்டையும் பிரிக்கக் காரணமாகவும் கொள்ளுவர் அறிஞர். யாருடைய பெயராவது குறிக்கப் பெற் றிருப்பின் அது புறம் எனவும் பெயர் குறிப்பிடப்பெறாமல் இருப்பின் அஃது அகம் எனவும் பிரிப்பர். இந்த அடிப்படை யிலேயே சங்க இலக்கியங்கள் அனைத்தும் பிரிக்கப்பெற்றுள் ளன. 'நெடுநல் வாடை' போன்று சில இலக்கியங்கள் அகமா புறமா என்ற ஆராய்ச்சிக்கு இடம் தருவதையும் காண் கின்றோம். எனவே அடிப்படை வாழ்வாகிய காதலில் பெயரும் உருவும் மறைய, தான் கெட்டுச் சிறக்கும் இன்பமே ஏற்ற முறுகின்றது என்பது தேற்றம். இந்த அடிப்படை தமிழி லுள்ள எல்லா இலக்கியங்களுக்கும் பொருந்துவதாகும்.

தொல்காப்பியர் தம் அகத்திணை இயலிலும் களவியலி லும் தலைவியும் தலைவனும் மேற்கொள்ள வேண்டிய செயல் ஒழுகலாறு முதலியவற்றை விளக்கிக் காட்டுகிறார். ஆணினும் பெண்ணைக் கட்டிக்காக்க விரும்புகின்றார்! அதுவே வாழ்விய

லாதலின் நாணும் மடனும் பெண்மைக்கே இயல்பாக அமை கின்ற காரணத்தினுலே பின்னுல் நாம் திருக்குறளில் காணு கின்ற பல ஒழுக்க நெறிகள் இத் தொல்காப்பியத்திலே இலக்கண மரபாகவே காட்டப்பெறுகின்றன. இந்த வாழ்வியலில் களவிலே இயற்கைப் புணர்ச்சி நிகழும் காலத்து நிகழும் மெய்ப்பாடுகளை எல்லாம் தொல்காப்பியர் முதலில் தொகுத்தும், பின் மெய்ப்பாட்டியலில் விரித்தும் கூறுகின்றார். உள்ளக் கருத்துக்களையும் உணர்வுகளையும் இம்மெய்ப்பாடுகள் எவ்வெவ்வாறு விளக்குகின்றன என்பதெல்லாம் எல்லையற்ற பெரு விரிவினை உடையன. 'மனங்காவல் கொண்டதெல்லாம் கண்களே சொல்லும் வாய் திறந்தே' என்ற அடிப்படையில் காதல் வாழ்வின் அடித்தளமாகிய பார்வை பரிமாறுதல் தொடங்கி, களவிலும் கற்பிலும் தலைவனும் தலைவியும் வாழும் வாழ்வின் எல்லைவரை எண்ணி எண்ணி நமக்கு எழுத்தில் வடித்துத் தருகின்முர் தொல்காப்பியர்.

களவியலில் தலைவி தன் கருத்தை வாயினுல் வெளிப்படச் சொல்லாளாயினும் கண்ணினுலும் பிற செயல்களாலும் காட்டுவாள் என்றாலும், அவள் உள்ளம் கற்புநெறி நடக்கும் நிலை ஏற்படின் என்னுவள் என்பதைத் தொல்காப்பியர் காட்டத் தவறவில்லை.

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே (கள. 22)

என்ற சூத்திரத்தில் தலைவிக்கு அனைத்தினும்—உயிரினும் மேம்பட்டது கற்பே என்றும், அக்கற்பின் நெறியில் தலைவி களவின்கண் தானே தலைவனிடத்துச் சேர்ந்தாலும், தலைவி பேசினும் அகப்பொருளாகவே கொண்டு அமைதி பெறத்தக்க

தென்கின்றார். ஆம்! அக்கற்பே தமிழர் வாழ்விய லாதலின்' கோவை பாடிய மணிவாசகர் இக்கருத்தை உள்ளடக்கி அழகிய கட்டளைக் கலித்துறையைப் பாடுகின்றார்.

தாயிற்சிறந்தன்று நாண்தைய லாருக்கந் நாண்தகைசால்
வேயிற்சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடும்எம் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே

என்பது அவர் வாக்கு. எனவே தமிழ்ப் பெண்ணுக் குரிய ஒப்பிலா வாழ்வியல் நெறியாகிய கற்பினை யாண்டும் கட்டிக் காக்கின்றார் தொல்காப்பியர்.

கற்பியலில் தலைவிக்குரிய வாழ்வியல் பண்புகளைத் தொல்காப்பியர் விளக்கிக் காட்டுகின்றார்.

கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (கற், 11)

என்று தலைவிக்குரிய மாண்புகளைத் தொடுத்துக் கூறுகின்றார். மேலும் தலைவன் தவறுசெய்த விடத்தும் தலைவி அவனைத் தாய்போல் தழுவிக்கோடல் வேண்டும் என்கின்றார்.

தாய்போல் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப (கற். 32)

என்ற சூத்திரத்தில் மனைவியாகிய தலைவி தாயாகிப்பரிவோடு தாங்க வேண்டிய நிலையினைக் காட்டுகின்றார். அந்த அடிப்படையில் தானோ, பின் பேரின்பத்தைப் பாடவந்த அடியவர்கள் இறைவனுக்கும் இறைவிக்கும் உள்ள தொடர்பினைப் பலப் பல வகையில் ஆராய்ந்து,

கனகமார் கவின்செய் மன்றில்
அனகநா டகற்கெம் அன்னை
மனைவி தாய் தங்கை மகள்' (சித-செய்-கோவை, 33)

என்கின்றனர். பின்வந்த சதகம் முதலியவற்றைப் பாடியவர்களும் இப்பண்புகளை யெல்லாம் தலைவிக்கு ஏற்றிக் காட்டுவர். எனவே தமிழ்ப் பெண்ணின் தளரா வாழ்வியல் தொல்காப்பியரால் நன்கு காட்டப் பெறுகின்றது.

இப்படியே தலைவனுக்கு உரிய பொருவிறந்த செயல்களையும் நிலைகளையும் பண்புகளையும் தலைவியைப் பிரியாது அவளொடு ஒன்றி வாழவேண்டிய சிறப்பினையும் பிரியநேரினும் உரியகாலத்தில்—அவளொடு இருக்கவேண்டிய பூப்பின் புறப்பாடீராறு நாளும்—பிரியலாகாநிலையினையும் இன்னும் பல வகையில் அமைந்த சிறப்புக்களையும் தொல்காப்பியர் ஆங்காங்கே சுட்டிக் காட்டுவார். அவை அனைத்தும் நன்கு அறியப்பெறும் நிலையினவாதலின் இந்த அளவில் 'அகத்'தை நிறுத்திப் புறத்திணை இயலில் தொல்காப்பியர் காட்டிய வாழ்வியலைக் காணலாம்.

புறம் என்றவுடன் தமிழ் இலக்கிய மரபில் போர் நிகழ்ச்சிகளே நம் நினைவுக்கு வரும். தமிழர்கள் ஒருவரோடொருவர் போரிட்டனர்; ஒற்றுமை அற்றவர்: எனவேதான் புறநானூறு போன்ற போர்பற்றிய இலக்கியங்கள் உண்டாயின என்பர் பலர். ஆயினும் ஆழ்ந்து நோக்கின் இக்கருத்துத் தவறு என்பது நன்கு புலனாகும். தமிழ்ச் சமுதாயம் போர் விரும்பாச் சமுதாயமே என்பது நன்கு தெளிவுறும். தொல்காப்பியப் புறத்திணை இயலின்படி ஆராய்ந்தால் எத்துணை அளவு இயலுமோ, அத்துணை அளவு போரைத் தடுக்கவே அரசரும் பிறரும் முயன்றிருக்கின்றனர் என்பது நன்கு விளங்கும். பிற்காலத்தில் வந்த புறம்பற்றிய இலக்கண நூல்களாகிய புறப்பொருள் வெண்பாமாலை முதலியவை போரையே வலியுறுத்தினலும்கூட, தொல்காப்பியம் போரைத் தடுக்கும் நெறியையே விளக்கித் தருகிறது.

இவற்றின் விளக்கமெல்லாம் எல்லையற்றுப் பெருகுமாதலின், ஓரளவு தொட்டுக்காட்டி மேலே செல்கிறேன்.

அகத்தைக் கூறிய ஆசிரியர், அதற்குப் புறமாகவே புறத்தைக் கூறுகின்றார். ஒவ்வோர் அகத்திணைக்கும் ஒவ்வொரு புறத்திணை அமைத்து, அகத்திணைகள் எவ்வெவ்வாறு புறமாக அமைகின்றன வென்பதையும் குறிப்பால் உணர்த்திச் செல்லுகின்றார் தொல்காப்பியர். உரையாசிரியர் நச்சினார்க்கினியர் அவற்றின் தொடர்புகளை யெல்லாம் விளக்கிக்காட்டுகின்றார். இங்கு அத்திணை அமைப்புக்கள் வழி அவை எவ்வாறு தமிழ்ச் சமுதாயம் போர் விரும்பாதிருந்ததை விளக்குகின்றன எனக் கண்டு அமைவோம்.

தமிழ் மரபில் முதலாவதாக வெட்சி அமைகின்றது. வெட்சி என்பது ஊர்ப்புறத்து இருக்கும் பசுக்களைக் கொண்டு வருதல் என்ற அடிப்படையில் அமைவது. ஏன் பசுக்களைக் கொண்டுவரவேண்டும்? ஊரின் புறத்துள்ள பசுக்களைக் கொண்டுவருவதும் ஒரு போராகுமா? ஆம், அது போரன்று— போரைத் தவிர்க்கப்பயன்படும் பெருநெறி. ஒரு மன்னன் மற்றொரு மன்னனொடு மாறுபட்டானாயின் அவன் எப்படிப் போர் செய்வது? போர் எதற்கு என்பதை அடுத்த சில திணைகளில் தொல்காப்பியர் விளக்குவர். அப்போர்களைத் தடுக்க அமைந்த அடிப்படைத் திட்டமே இவ்வெட்சி. இன்று எங்கோ ஒருசிறு நாட்டில் நடக்கும் போர் உலகை நடுங்க வைக்கிறது. ஆயினும் அன்று அந்த நிலையில்லை. நாட்டிலேயே போர் நடந்தாலும் அந்நாட்டு மக்களது அன்றாட வாழ்வியலில் யாதொரு மாறுபாடும் காணவியலாது. மாற்றான் ஊரின் புறத்துள்ள பசுக் கூட்டத்தைக் களவிடை ஒருமன்னன் கொண்டுவந்து விடுவானாயின் அவன் வெற்றிபெற்றவனாகின்றான். அன்றி மாற்று வேந்தன் அதை அறிந்து, தடுத்து, பசுக்களை மீட்பானாயின் அவனே வென்றவனாகின்றான். எனவே வெற்றி தோல்வி ஓரிரவில் ஒரு சிலருடன் நடைபெறும் சண்டையாக முடிவுறுகின்றது. வென்ற நாடும் தோற்ற நாடும் பின்னும் மாறுபாடு கற்பிக்காது மகிழ

வேண்டுவன. அகத்திணையில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் நடைபெறும் ஊடலும் கூடலும் போன்றே இஃது அமைந்து நாட்டில் நடைபெறத்தக்க பெரும் போர்களைத் தவிர்க்கின்றது.

மாற்றார் நாட்டிலிருந்து கொண்டுவந்த பசுக்களை என் செய்வது? பங்கிடுவதா? பொசுக்குவதா? வேறு வகையில் பயன்படுத்துவதா? அது தமிழ்நாட்டு அரசியல் வாழ்வன்று. அப்பசுக்களைக் கொண்டுவந்து 'ஓம்புதல்' வேண்டும். ஓம்புதல் என்ற சொல் உயர்ந்த நிலையில் பயன்படுத்தப் பெறுவது.

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற் றாகும் (புறத். 2)

என்பது தொல்காப்பியம். களவில் கொண்டு வருவதால் வீண் போரும் பிற கொடுமைகளும் இல்லை. இவ்வளவு எளிமையாக இம்முறை நாட்டுப் போர்களைத் தவிர்க்கின்றது. இந்த உயர் வாழ்வின் இறுதியில் போர் தவிர்க்க உடனிருந்த கொற்றவையைப் பரவிய காட்சியையும் காண்கின்றோம்.

அடுத்துவருகின்ற திணை 'வஞ்சி'யாகும். முன்கண்டபடி இரு மன்னரும் உள்ளத்து மாசு நீங்கி ஒன்றிவாழக் கடமைப் பட்டவர். ஆயினும் ஒருவன் மண்ணாசை கொண்டு போர் செய்யத் தொடங்குவானாயின் அவனைச் சென்று அடக்க நினைப்பதே 'வஞ்சி'யாகும். சீனரையும் பாகிஸ்தான் மக்களை யும் நாம் ஒடுக்க நினைத்த நிலையே அது. நாம் மண்ணாசை கொண்டவரில்லை. அதே வேளையில் மண்ணாசை கொண்ட மற்றவரை மடக்காவிட்டால் உலகில் அறம் தழைக்காது. எனவே வஞ்சி தேவைப்படுகிறது. இதனைத் தொல்காப்பியர்.

எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகச் சென்று அடல்குறித் தன்று (புறத். 10)

எனக் காட்டுவர். 'அடல்குறித்தன்று' என்று 'போர்க்குச் செல்லக்கருதல்' என விளக்குவர். அக்குறிப்பின் வழி மாற்றான்

அடங்குவானாயின் போர் நடைபெறாது என்பது தேற்றம். மன்னருக்கு மண்ணாசை தம் நாட்டளவில் அமையவேண்டுவதே. ஆயினும் அஃது இடையறாது வளர்வது கூடாது என்பதையே 'எஞ்சா மண்ணசை' என விளக்கினார். 'அடல்' என்னாது, 'அடல்குறித்தன்று' என்றதனால் போர்மேல் செல்லாது, போர்குறித்துப் பேசுதல் அன்றி ஆய்தல் எனவே குறித்து, அதன்வழி இவன் வலியறிந்த மாற்று மன்னன் தன் மண்ணாசையை விட்டு அமைதியாக நாடாள்வான் என்பது கருத்தாகும்.

அடுத்துவரும் உழிஞைத்திணை இதனினும் ஒருபடி மேலே செல்லுகின்றது. ஒருவேளை முன்கண்டபடி மாற்று வேந்தன் அமைதியுறாது தன் நடவடிக்கைகளைப் பெருக்கிப், போருக்குத் திட்டமிடுவானாயின் அவனைத் தடுத்தல் நல்லரசர் கடன். அப்பொழுது அவர்கள் மதிலை முற்றுகை இட்டு, யாதொரு சேதமும் உண்டாக்காமல், கொள்ளவேண்டுவதே உழிஞையின் பணி. புறநானூற்றில் மாற்றார் நாடும் அழிவுற்ற வகையில் பலபாடல்கள் இருப்பினும், தொல்காப்பியர் இந்த அமைதியையே சுட்டிக் காட்டுவர்.

முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற் றாகு மென்ப (புறத். 10)

என்பது அவர் வாக்கு. எனவே அரணில் யாதொரு சில குறைபாடும் அழிவும் உண்டாகாமல் முற்றுகையிட்டு, அதைக் கைக்கொள்ள வேண்டலே கடன் என்பது தெளிவு. பின் அந்த மாற்று வேந்தனுக்கு அறிவுறுத்தி, அவனுக்கே அந்நாட்டை அளித்தல் மரபு. இந்த மரபினைக் காத்த மன்னர்களைத் தமிழ்நாட்டு இடைக்கால வரலாற்றிலேயும் நாம் காண்கிறோமே.

அடுத்துவரும் 'தும்பை' போரைப்பற்றிக் கூறுவது. மேற்கூறிய நிலைகளிலெல்லாம் மண்ணாசை உடைய வேந்தர் பணியவில்லையாயின் கடைசியில் போர்தானே. ஆயினும்

அப்போரிலும் கருணையே காட்டப்பெறுகிறது. 'இன்று போய் நாளைவா' என்று காட்டிய கருணையை மதிக்காத இராவணன் பட்ட நிலையினையே போர்மேற் செல்லும் வேந்தர் அடைவர். தன் பலம் பெரிது- பலம் அளவிடற்கரிது எனக் கருதி, மாற்றுரை அழிக்கத் திட்டமிட்டுப் படை எடுத்து வருவ னுயின், அப்போது ஆற்றியிருத்தல் அரசரின் வாழ்விய லாகாது. அப்போது அரசன் சென்று மாற்றுன் படை நிலையைக் கெடுத்து, வெற்றிகண்டு, அவனுக்குக் கருணை காட்டுவதே 'தும்பை.' பிற்காலத்தார் 'பொருவது தும்பை' எனப் போரே குறிக்கோளாகக் கூறினர் ஆயினும், தொல் காப்பியர் அவ்வாறு காட்டாது,

மைந்து பொருளாக வந்த வேந்தனை
சென்று தலையளிக்கும் சிறப்பிற் றன்று (புற. 15)

எனவே காட்டுவர். இதில் 'தலையளி' என்பதை, 'தலைஅழி' என்றும் பாடம் காட்டுவர். ஆயினும் தொல்காப்பியரது உள்ளக்கிடக்கையை ஆராயின் அது பொருந்தாது. மாற்று வேந்தனைப் போர் நெறியில் செல்லாது மடக்கி வெற்றி கண்டு பின் அவரிடம் கருணைகாட்டி அவனை வாழ்விப்பது தமிழர் வாழ்வியல்.

'பேர்க்களத்து மிக்கோர் செருவென்றது வாகை' என்பர் பிற்காலத்தார். ஆனல் தொல்காப்பியர் போரையே நிறுத்து கின்றவராதலின், அதில் வெற்றி யெங்கே தோல்வி யெங்கே? ஆகவே,

தாவில் கொள்கை தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தலே (புறம் - 14)

வாகை எனக் காட்டுவர். காட்டி, வெறும் போரில் மட்டும் அல்லாது வாழ்வியலில் வரும் ஒவ்வொரு துறையாளரைப் பற்றியும் காட்டி, அவரவர் 'வாழ்வாங்கு வாழும்' வகையில்

சிறக்கும் நெறியை மிகுதிப்படுத்தலையே காட்டுவர் தொல் காப்பியர். பார்ப்பனப்பக்கம், அரசர்பக்கம், அறிவன்தேயம், தாபதர்பக்கம் என்று வாழ்வார் முறையும் வகையும் காட்டி அவ்வத்துறையில் அவரவர் சிறக்கும் நிலையினை விளக்கி மிகுதிப்படுத்தலே வாகை என்பர். இந்தச் சிறந்த வாழ்வியல் நிலையைப் பின் வந்தோர் எப்படியோ மாற்றி அமைத்துவிட்டார். உண்மையில் தொல்காப்பியர் ஓர் அமைதி உலகைச் சமைக்கின்றாரேயன்றிப் போராட்ட உல கைக் காண விரும்பக்கூட வில்லை.

இறுதியாகக் காஞ்சியைப் பற்றிய தொல்காப்பியனார் கருத்தும் எண்ணத்தக்கது. 'எதிரூன்றல் காஞ்சி' என்று பிற் காலத்தார் போரில் எதிரூன்றி நிற்றலை விளக்குவர். ஆனால் தொல்காப்பியரோ 'காஞ்சி' என்றால் நிலையாமை என்ற பொருள் காட்டி, அந்நில்லா உலகில் நிலைக்கும் வகையில் அறமாற்றி நலம் துய்த்துச் சிறக்க வேண்டிய வகையையும் விளக்குகிறார். தொல்காப்பியர் காட்டிய புறத்தின் அமைதிப் படி நாம் வாழின் இன்பமன்றி வேறு எதைக் காணமுடியும்?

'பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே' (புறத். 23)

என்பர் அவர். எனவே நில்லா உலகில் நிலைபெற்று இன்பம் துய்த்து வாழ வேண்டுமாயின் மாறுபாடு நீங்கி, ஒன்றிய உணர்விலே சிறக்க வேண்டும்; வாழ்வாங்கு வாழ வேண்டும்; வளம் கொழிக்க வழிகாண வேண்டும் என்பது தொல்காப் பியர் புறம் வழிக் காட்டும் வாழ்வியலாகும்.

இனித் தொல்காப்பியர் மரபியலில் உயிர்கள் வாழ் வினையும் அவற்றைப் பகுக்கும் முறையினையும் அவற்றால் அமையும் பிற சிறப்பியல்புகளையும் காணலாம். தொல்காப் பியர் காலத்தில் தெய்வம் இல்லை என்பர் சிலர்; பாவம், அவர்கள் அறியாதவர்கள். தெய்வம் எதற்காக என்பதையும் அதன் நிலைபற்றியும் தொல்காப்பியர் காட்டுவர். 'தெவுக்

கொளற் பொருட்டே' (உரி. 46) என்ற சூத்திரத்தால் மக்கள் வாழ்வியலில் வேண்டுவன பெறும்பொருட்டு வேண்டி வரங் கிடக்கும் நிலையில் போற்றப்படுவதே தெய்வம் எனக் காட்டி விட்டார். இன்னும் கொடிநிலை, கந்தழி என்ற சூத்திரத்தும் கருப்பொருள் பற்றிய சூத்திரத்தும் தெய்வங்களை முதலாகக் காட்டுவர். எனவே தொல்காப்பியர் கால வாழ்வியலில்—அவர் காட்டும் வாழ்வியலில்—தெய்வம் முதலிடம் பெற்றுள்ளது தேற்றம். இக்கடவுள் அருள்நெறி பற்றியே அகமும் புறமும் அவற்றின் வழி அமைந்த பிற வாழ்வியற் கூறுபாடுகளும் இருந்தன என அறிகிறோம்.

மரபியலில் தொல்காப்பியர் அக்கால மரபில் உள்ள பல வகைகளை விளக்கிக் காட்டுகிறார். நாம் மேலே கண்டபடி புல்லும் மரமும் தொடங்கி, மனித இனம் வரையில் படிப்படியாக உயரும் வகை, வளம், வாழ்க்கை இவற்றின் மரபுகளை நமக்குக் காட்டுகின்றார். ஒவ்வொன்றையும் எப்படி எப்படி அழைக்க வேண்டும் என எடுத்துரைக்கின்றார். விலங்கிலும் பறவையிலும் பிற உயிரினத்தும் உள்ள ஆண் பெண் வேறுபாடுகளை நுண்ணிதின் ஆராய்ந்து, அவற்றின் பெயர்களையும் காட்டுகின்றார். ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐயறிவு, ஆறறிவு பெற்ற உயிர்களையும் அவற்றின் இனங்களையும் பகுத்துக் காட்டுகின்றார்; புல்லுக்கும் மரத்துக்கும் உரிய வேறுபாட்டை விளக்குகின்றார். இவை ஒவ்வொன்றையும் தனித் தனியாக விளக்கின் எல்லையற்றுப் பெருகும். எனவே அவைபற்றிய சூத்திரங்களைத் தொடுத்து ஈண்டுத் தருகிறேன்

குழவிகளைக் குறிக்கு வரும் மரபு:—

மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்று
ஒன்பதும் குழவியோடு இளமைப் பெயரே (மரபு. 1)

ஆண்பால் குறிக்க வருவன:—

ஏறும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்
சேவும் சேவலும் இரலையும் கலையும்

மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த ஆண்பாற் பெயரென மொழிப (மரபு. 2)

பெண்பால் குறிக்க வருவன:—

'பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகும் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தஞ் சான்ற பிடியோடு பெண்ணே (மரபு. 3)

இவற்றுள் இன்னின்ன பறவை விலங்கு பிற உயிர்களுக்கு உரியன என்றும் மரபியல் நன்கு விளக்குகின்றது. ஓரறிவுயிராகிய புல் மர வகைக்கு உரிய இளமைப் பெயர்களை,

பிள்ளை குழவி கன்றே போத்தே
கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே (மரபு. 24)

என வரையறுக்கின்றார். எனினும் இவற்றால் நெல்லும் புல்லும் அழைக்கப்படா என அடுத்த சூத்திரத்தால் விளக்குகிறார்.

இனி அறிவுடை உயிர்கள் படிப்படியாக வளரும் வகையினை,

ஒன்ற றிவதுவே உற்றறி வதுவே
இரண்ட றிவதுவே அதனொடு நாவே
மூன்ற றிவதுவே அவற்றொடு மூக்கே
நான்க றிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்த றிவதுவே அவற்றொடு செவியே
ஆற றிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே (மரபு. 27)

என்று விளக்கிக் காட்டுகிறார். இவை ஒவ்வொன்றற்கும் உரிய உயிர்களையும் காட்டுகின்றார்.

இவையன்றி அந்தணர் அரசர், வணிகர், வேளாளர் என் வகைப் படுத்திவாழ்ந்த மக்களினத்துக்கு உரிய வாழ்க்கை முறைகளையும் நன்கு காட்டுகிறார். இவற்றைக் கூறிய தொல் காப்பியர் இப்பகுப்பினைக் காட்டிய ஆரியர் வருகைக்குப் பின்னரே இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ளல் வேண்டும். இக் கொள்கைக்கு மாறுபட்டோர்-தொல்காப்பியர் ஆரியர் வருகைக்கு முன்னே இருந்தவர்-எனவே இவை பிற்சேர்க்கை என ஒதுக்குவர். பின்னது அவ்வளவு வலியுடைத்தன்று.

மேலும் ஒவ்வொரு துறையிலும் வாழ்வார் தம் வாழ்க்கை முறைகளையும் தொல்காப்பியர் எடுத்துக் காட்டியுள்ளார். புல்லுக்கும் மரத்துக்கும் வேறுபாடு காட்ட எண்ணிய ஆசிரியர்,

புறக்கா ழனவே புல்லென மொழிப
அகக்கா ழனவே மரமென மொழிப' (மரபு. 85)

இப்புல்லும் மரமும் பெற்றுள்ள பல்வேறு சிறு சிறு பகுதி களுக்கு உரிய விளக்கம் காட்டுவர். மெலும் உலக நிலையை எண்ணி,

நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமை
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும் (மரபு. 89)

என்று உலகத் தோற்றத்திற்கே அடிப்படை கூறி, இவ்வுலகம் பஞ்சபூத அமைப்பில் தோன்றி வாழும் தன்மையை விளக்கி, இதில் தோன்றிய உயிரினங்களை எவ்வெவ் வகையில் அழைக் கவோ அமைக்கவோ வேண்டும் எனக் காட்டி, இறுதியில் இந்தத் தொல்லோர்வகுத்த அடிப்படையில் வாழ்ந்தால்தான் உலகம் என்றென்றும் நலம் பெற்று வாழும் எனக் காட்டி, உலக வாழ்வியலையே வரையறை செய்கின்றார். இவ்வாறு ஓரறிவுயிர் தொடங்கி ஆறறிவுடைய மனிதன் வரையில்

வாழவேண்டிய வகைகளையும் முறைகளையும் மரபு நெறியினையும் விளக்கியவர் தொல்காப்பியர். அவர் காட்டிய நெறி வழி நின்று உலகம் வாழுமாயின் நலமுண்டு மனிதன் தவிர மற்ற உயிர்கள் அனைத்தும் அந்நியதிப்படி - மரபு கெடாமல் வாழ்வதை அறிவோம். மனிதன் மட்டும் மாறிவிட்டான். ஏன்? நாம் இவ்வினாவிற்கு ஏற்ற விடையினை ஆய்ந்து அறிந்து தொல்காப்பியர் காட்டிய வாழ்வியலின்படி வாழ முற்பட வேண்டுமெனக் கேட்டு அமைகின்றேன்.

## 2. காமமோ பெரிதே!

இத்தலைப்பைக் கண்டதும் சிலருக்கு வியப்புத் தோன்றுதல் இயல்பு. 'இதைப் பற்றிப் பேச ஆயிரம் கல் தாண்டி ஒருவர் வரவேண்டுமா?' என்று கேட்கவும் தோன்றும்? அதுவும் தமிழ்ச் சங்கத்தில் அதுபற்றிப் பேசவேண்டுமா' என்ற ஐயம் எழும். எனினும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற வாழ்வின் பலன்களைக் கூறும்போது, அவற்றுள் ஒன்றை விட எனக்கு விருப்பமில்லை. மேலும் எவ்வளவுதான் வெளியில் பேசக் கூசினாலும் எல்லா மக்களும்—ஏன்?—எல்லா உயிர்களும் இக்காமத்தைச் சார்ந்தே வாழ விரும்புகின்றன. எனவே அதுபற்றியும் எண்ணல் ஏற்புடைத்தே.

காமம் என்ற சொல்லைப் பற்றியும் அதன் பொருளைப் பற்றியும் வெறுக்கும் வகையில் சிலர் எண்ணுகின்றனர். இச்சொல் தமிழ், வடமொழி இரண்டிலும் பயின்று வருகின்றது. இரண்டிடத்தும் வேறு வேறு பொருள்களிலே இச்சொல் எடுத்தாளப் பெறுகின்றது என்பர் அறிஞர். 'காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக் கெடும் நோய்' என்று மிக வெறுப்பொடு அக்காமமே நோய்களுக்கு அடிப்படையான கொடுமை வாய்ந்தது என்று காட்டிய அதே வள்ளுவனார், தமது மூன்றாவது பாலைக் 'காமத்துப்பால்' என்றே

நிறுத்திக் 'காமம்' என்ற சொல்லையும் உயர்ந்த பொருளில் பலவிடங்களில் வழங்குகிறார் என்பதை அறிவோம். எனவே திருவள்ளுவர் முன்னுக்குப் பின் முரணான வகையில் இரு வேறு வகைப் பொருள்களில் அச்சொல்லினை எடுத்தாளுகின்றார். மேலே நாம் காட்டிய குறள் வள்ளுவரது துறவற இயலில் துறவுக்கு அடுத்த நிலையில் 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்து இறுதிக் குறளாக வருகின்றது. துறவு மனப் பான்மையே தமிழர் வாழ்வில் அருகிக் காண்பது. எனினும் வள்ளுவர் காலத்தில் வடமொழிவாணர்தம் கொள்கைகளும் நால்வகை ஆச்சிரம வாழ்க்கை நெறிகளும் தமிழ் நாட்டில் கால் கொண்டதோடு, பல சொற்களும் அப்படித் தமிழ் மொழி வழக்கில் இடம் பெறவுமாயின. 'காமம்' என்ற சொல்லும் அவற்றுள் ஒன்று. அது வடமொழியில் 'பிறவி நோய் தருவது' என்ற இழிந்த பொருளில் வழங்குகின்றது. வள்ளுவர் வடநூலார் மதம் பற்றிப் பல கருத்துக்களைக் காட்டுகிறாராதலின் இதையும் அந்த அடிப்படையில் விளக்கினார். ஆனால் பின்வரும் 'காமத்துப்பால்' என்ற தலைப்பும் அதில் பலவிடங்களில் வரும் 'காமம்' என்ற சொல்லும் தமிழுக்கே உரிய சிறப்புப் பொருளைக் கொண்டுள்ளன. (இவ்வாறு ஒரே வகையான சொல் இருவேறு மொழிகளில் வந்து வழங்கின் உண்டாகும் இடர்ப்பாடுகளைப் பற்றியெல்லாம் பின் வந்த புலவர்கள் வேடிக்கையாகப் பாட்டிசைத்துள்ளனர்.) தமிழில் உள்ள 'காமம்' என்ற சொல் 'கமம்' என்ற சொல்லடியாகப் பிறப்பது என்பர். 'கமம்' என்றால் 'நிறைவு' எனப் பொருள்படும் எனவே 'காமம்' என்பது நிறைவு தருவதாகும். உயிர் வாழ்க்கை, மண்ணில் பிறந்த உயிர்கட்கெல்லாம் நிறைவு தரும் ஒன்றேயாய் உயர்ந்துள்ளமையின் இஃது இப்பெயரொடு வழங்குதல் பொருந்துவதுதானே. தம்முள் ஒத்த அன்பால் பிணைந்த இருவரும் - தலைவனும் தலைவியும் - மனநிறைவுடையவராய் மற்றவைகளை மறந்து இருதலைப் புள்ளின் ஒருயிராக இயங்கும் வாழ்வினை வேறு எந்தவகையில் அழைப்பது? தொல்காப்பியரும் இதைக் காமக் கூட்டம் என்றே சொல்வார். இவ்வாறு நிறைவு பெறாது நிற்பது

காமமாகாது என்ற உண்மையையும் அது பொய்யாய்க் கழியும் என்பதையும் அள்ளூர் நன்முல்லையார் என்னும் புலவர் அழகுபடக் காட்டுகின்றார். ஒன்றான இறையருளில் பொருந்தும் பேரின்ப வாழ்வையும் தலைவன் தலைவியர் தம்மை மறக்கும் சிற்றின்ப வாழ்வையும் இணைத்துப் பார்க்கும் தமிழ் மரபை இந்த உண்மை நன்கு விளக்கும்.

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்
பொழுதிடைத் தெரியின் பொய்யே காமம் (குறுந். 32)

என நன்முல்லையார் பொழுதிடைத் தெரியாத பேரின்பத்தையே காமம் என்றும் அல்லாததைப் பொய்யென்றும் கூறுவர். இதே உண்மையைத்தான் தம்மை மறந்த மணிவாசக அடிகளார்,

இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு

என்று தாம் விரும்பும் கணவரைப் பெற்ற 'எங்கொங்கை நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்ற வரம் வேண்டிப் பெற்ற மங்கையர் பாடியதாகக் காட்டுவர். எனவே வள்ளுவர் காமம் என்ற சொல்லைத் தெள்ளிய நல்ல நிலையிலேயே எடுத்தாளுகிறார் என்பதும் அவர் வடமொழி பற்றி அதே சொல்லையும் ஆண்டாளும் காமத்துப்பாலில் அச்சொல் சிறக்கின்றது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்குவதாகும்.

'இதுவோ அன்னாய் காமத் தியற்கை' என்று அக்காமத்தின் இயற்கையைப் பாடிய புலவர் பலருளர். நாம் அக்காமத்தின் இயல்பை அறிந்து மேலே செல்லலாம். காமம் என்பது என்ன? நிறைவு தருவது என்பது பொருளாகக் கண்டோம். சங்ககாலப் புலவர்கள் இக்காமத்தைப் பல

வகையில் விளக்க முற்பட்டுள்ளனர். ஈண்டுக் குறுந்தொகைப் புலவருள் ஒருசிலரை மட்டும் கண்டு கொள்வோம்.

காமம் காமம் என்ப, காமம்
அணங்கும் பிணியு மன்றே. நினைப்பின்
முதைசுவற் கலித்த முற்றா இளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே (குறுந். 204)

என்று மிளைப்பெருங்கந்தன் என்ற புலவர் அதன் புதுமையைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். உவமையின் வழி அப்புதுமை எப்படிச் சிறக்கின்றது என்பது தெளிவு.

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் (குறள், 1106)

என்றும்,

தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு (குறள், 1107)

என்றும் வள்ளுவர் இக்காம இன்பத்தை அமிர்தமாகவும் பாத்துண்ணும் விருந்தாவும் கண்டு வியக்கின்றார். மேலும் இக்குறுந்தொகைப் புலவர் இதை 'அணங்கும் பிணியு மற்றது' எனக் காட்டி இதன் தெய்வத் தன்மையைத் தெளிய வைக்கின்றார். இதே புலவர் மற்றொரு குறுந்தொகைப் பாடலில் அதே குறிஞ்சித் திணையில்,

காமம் காமம் என்ப, காமம்
அணங்கும் பிணியு மன்றே. நுணங்கிக்
கடுத்தலும் தணிதலு மின்றே, யானை
குளகுமென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே (குறுந். 136)

எனக் காட்டுவர். எனவே இவர் இக்காமத்தின் இயல்பை நன்கு உணர்ந்து நமக்கு உணர்த்துகின்றார். உணர்த்த முடியாது உள்ளத்துணர்வாலேயே அனுபவிக்கும் இந்த அக வொழுக்கத்தால் அரும்பும் இன்பத்தை இதனினும் தெளிவாக எப்படி எடுத்துக்காட்ட முடியும்? இந்த ஈர் உவமைகளையும் உற்று உணர்ந்தால் 'காமமோ பெரிதே' என்ற உள்ளுணர்வு நமக்குள் அரும்பும்.

இத்தகைய இன்பக் காமம் சில காலத்தில் துன்பம் ஆதலும் உண்டு. இதன் விளக்க இயல்பினையெல்லாம் பின் வள்ளுவர் வழியே காண்போம். ஈண்டுக் குறுந்தொகைப் புலவர் அதன் துன்ப நிலையைக் காட்டும் வகையினைக் காண்போம். தலைவனைப் பிரிந்த தலைவி வாடுகிருள். அவ்வாட்டம் அளவிடற்கரிது. எனினும் தோழி அவளை 'ஆற்றியிரு' என்று தேற்றுகிருள். எப்படி அவளால் ஆற்றியிருக்க முடியும்? 'காமம்' ஆற்றியிருக்கும் வகையில் அத்துணை எளிமையாக அமைந்ததன்று? தன் தலைவனொடு கூடியிருக்குங்கால் பெரிதாகத் தலையளி செய்த அக்காமம் அவனைப் பிரிந்த நிலையில் மெல்ல மெல்ல மறைகின்றதே என நைகின்ருள் தலைவி. எதுபோல் இல்லாகின்றது? ஈண்டும் குறுந்தொகைப் புலவர் உவமையைக் கையாளுகின்ருர். ஆம்! அந்த உவமைத் தொடரே 'தம்மை மறந்து தம் நாமம் கெட்ட' அப்புலவர் தம் பெயராகவும் அமைந்துவிட்டது. மொழி, பண்பாடு, வாழ்க்கை நெறியில் தம்மை மறந்து பாடிய புலவர் இயற் பெயர் அறியவில்லை. எனவே பின்னவர் அவரைக் கல்பொறு சிறுநுரையார்' என்றே அழைத்து விட்டார்கள். இதன் கருத்தென்ன? தலைவனைக் காணுத் தலைவியின் காதல் ஒரு கல்லின்மேல் மோதிய சிறு நீர்நுரை எப்படி மெல்ல மெல்ல இல்லாகின்றதோ, அதுபோல மெல்ல மறைகின்றது. இதைத் தேற்றுவோர் உணரவில்லையே - உணர்ந்து தலைவனைக் காட்டவில்லையே எனக் கவல்கின்ருர். ஆம்! அது முற்றும் மறையுமுன் தலைவன் கூட்டம் இன்றேல் அவள் இறந்துவிடவுங் கூடுமல்லவா? இவற்றையெல்லாம் உள்ளடக்கிய அப்புலவர்,

காமம் தாங்குமதி' என்போர் தாமஃது
அறியலர் கொல்லோ அனைமது கையர்கொல்
யாம்,எம் காதலற் காணே மாயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு, பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா கும்மே (குறுந். 290)

என்று அப்புலவர் காமத்தின் இயல்பு காட்டி அதனுள்ளே தாமும் ஒடுங்கிக் காமமாகிவிட்டார்.

இவ்வாறு கூடினரை எல்லையற்ற மகிழ்வே மகிழ்வாகத் திளைக்க வைத்தும் பிரிந்தாரை அதுவே முடிவாகச் செய்யும் நிலை தந்தும் உயர்த்தியும் தாழ்த்தியும் புணர்த்தியும் பிரித்தும் நலமும் அவலமும் காட்டும் இக்காமத்தின் இயற்கை நன்கு உணர்ந்த அறிவறிந்த சிறந்த புலவராகிய கபிலர் இதன் பண்பினைத் தெள்ளத் தெளிய விளக்க முற்பட்டு விட்டார்.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை யாகுமதி
யார்அஃ தறிந்திசி னோரே—சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்குஇவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே (குறுந் 18)

எனக் காட்டுகின்றார் கபிலர். இதைத் தோழியின் கூற்றாக காமத்தை ஆராயும் இயல்பற்றிய நிலையிலே—கூடின் எல்லையற்றும் பிரிவின் கல்பொரு சிறுநுரையாயும் மாறும் இக் காம நிலையிலே—தலைவன் தலைவியைப் பிரியின் ஏதம் நேரு மென்று காட்டி அவன் விரைவில் தலைவியை மணந்துகொள்ள வேண்டுமென்கிறாள் தோழி. இங்கே அவனை விளிக்கும் நிலையிலும் உவமை அளவிலும் அக்காமத் தியல்பினைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை கபிலர். வேர்ப்பலாவின் இனிய சுளை முயல்வார்க்குப் பயனளித்தல் போன்று இக்காமமும் முயன்று

முயங்குவார்க்குப் பயனைத் தரும் என்றார். இந்தக் காமத்தியல்பினை என்னென்பது? எனவேதான் அனைத்தும் அறிந்த கபிலரே 'காமமோ பெரிதே' எனக் காட்டிவிட்டார். நாமும் இன்றைய பேச்சுக்கு அவர் வாய்ச் சொல்லையே தலைப்பாகக் கொண்டுள்ளோம். எனவே இத்தலைப்பைப்பற்றி ஐயம் கொள்வோர் என்னை விடுத்து, கபிலரையே அதுபற்றி வினவலாம் எனக் காட்டி மேலே செல்கின்றேன்.

இக் காமத்தைப் பெரிது என்றால் பின் 'எப்படித்தான் அறிவது?' என்ற வினா எழுதல் இயல்பன்றோ! திருவள்ளுவனார் இக்காதலைச் சில உவமை வழி நமக்குக் காட்ட நினைக்கின்றார். அவற்றுள் ஒன்றிரண்டு காண்போம். நல்ல மெல்லிய முல்லைமலர் செடியில் மொட்டாகிப் பின் மலர்கின்றது. அம் மலர் மணம்வீசுகின்றது; பார்வைக்கும் அழகாக அமைந்துள்ளது. அம்மலரை நாம் பெற விழைகின்றோம்—விரும்புகின்றோம்—பார்க்கின்றோம்—பறிக்கவும் செய்கின்றோம். ஆனால் மலரின்நிலை என்ன? அதன் மென்மைத் தன்மை எத்தகையது! அதைப் பறித்து முகர்ந்து கசக்கினால் சீக்கிரம் வாடிவதங்கி விடும். பறிக்காது அப்படியே செடியில் விட்டாலும் ஒருபோது வாடித்தான் போகும். எனவே அதைப் பறிப்பதா? அன்றி விட்டுவிடுவதா? அப்படியே முகர்வதா? நமக்கே உரிமையாக்கிக் கொள்வதா? அனைவரும் அதைப் பொதுவாகக் காணவிடுவதா? யாரே இதற்குப் பதில் கூறமுடியும்? வள்ளுவராலும் இதற்குப் பதில் கூறமுடியவில்லை. என்றாலும் அம் மலரின் செவ்வியை - சிறப்பை- அழகை - அமைதியான தோற்றத்தைச் சிலரால்தான் அனுபவிக்க முடியும் என்கிறார். மலரின் நிலையே அதுவாயின் காமம் அதனினும் மெல்லியதாயின் அதன் நிலை என்ன? எண்ணத்தான் வேண்டும். அதன் செவ்விகாணும் சிலர் யாரோ? எங்கே தேடுவது? ஒருவேளை வள்ளுவர் கண்டிருப்பார். அச்சிலருள் ஒருவராக அவர் இருந்திருப்பார். எனவேதான் அவர் வாய்,

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார் (குறள், 1278)

எனப்படுகின்றது. இதே கருத்தைக் கொண்டுதான் போலும் பேரின்ப வாரிதியில் திளைத்த தாயுமான அடிகளார் மலரைக் கண்டபோது 'பார்க்கின்ற மலரும் நீயே இருத்தி' எனப்பாடிப் பரவசமுற்ருர் என எண்ண வேண்டியுள்ளது.

வள்ளுவர் மற்ருெரு வகையாகவும் காமத்தை நமக்குக் காட்டவிரும்புகின்ருர்; அதற்கு அவர் மற்ருெரு பொருளைக் கையாள விரும்புகின்ருர். அப்பொருள் எல்லாராலும் விரும்பப்படாததுதான். எனினும் அதன்வழிச் செல்வார் அதன் தன்மை உணர்வதையும், அதை உணராது தம்மை மறந்து அவர் ஆடுவதை மற்றவர் காண்பதையும் நாடறியுமல்லவா! அதை வைத்து வள்ளுவர் காமத்தைக் காட்ட விரும்புகின்ருர்.

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது (குறள், 1201)

என்றும்,

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்துக் குண்டு (குறள், 1281)

என்றும் கள்ளொடு சார்த்திக்காட்டி, அக்கள்ளினும் பல வகையில் மேம்பட்டது என விளக்கி உரைக்கின்ருர். கள்ளினை உண்டால் மட்டும் மகிழ்வூட்டும். காதலோ நினைப்பினும் காணினும் பெருமகிழ் வூட்டும் என்கின்ருர். எனவே கள்ளொடு காதலைக் காட்டினுலும், வள்ளுவருக்கு 'கள்' உடன்பாடன்று. உவமைக்கு மட்டும் இதைக் கொள்ள வேண்டும். 'கள்ளுண்ணுமை' என்றே ஓர் அதிகரத்தில் பத்துப் பாடலைப் பாடியுள்ளார் அவர்.

பெரிதாகிய காமத்தை இவ்வாறு ஒரோவழி உவமத்தாலும் பிறவகையாலும் காட்ட முடியுமேயன்றி 'அஃது இன்ன

வகைத்து' என அறுதியிட்டுக் காட்ட இயலாது. ஆயினும் அக்காமமே உவகை ஆகுகின்றது. அக்காம ஆட்சி செம்மை யாக அமையின் நாடு நாடாகும். அன்றேல் மேலை நாட்டு நிலையில் 'மணமும் விலக்கும்' பொருந்த, மக்கள் வாழ்வு விலங்கு வாழ்வாகவே கழியும் என்று ஒருதலை. பிற உயிர்கள் அனைத்துக்கும் மேலாக மனிதனுக்கு நல்லதன் நலனும் தீயதன் தீமையும் ஆய்ந்தறிகின்ற பகுத்தறிவை இறைவன் அளித்துள்ளமைதான் அவனை 'வாழ்வாங்கு' வாழவைக் கிறது. அவ்வாறு வாழ்வதற்கு இக்காமம் முதற்படி— இடைப்படி—இறுதிப்படி—எல்லாம். எனவே இந்த வாழ் வின் அடிப்படையை உலகம் மதிக்கவில்லையானால் வேறு எந்த வளனாலும் வையத்தை வாழவைக்க முடியாது. விலங் குணர்ச்சி பெற்ற சில மேலை நாட்டு மக்களிடமும் இன்று இந்த நல்லுணர்ச்சி அரும்புவது நற்காலத்துக்கு அறிகுறியே யாம். இனி இக்காமத்துக் குரியாரைப் பற்றிச் சில காண் போம்.

ஒருவனும் ஒருத்தியும் சாடிப் பெறும் இன்பமே காம இன்பம். அவ்வொருவனையும் ஒருத்தியையும் பற்றிப் பாடு வனவே அகப்பொருட் பாடல்கள் அனைத்தும். ஆயினும் அவ்வொருவனும் ஒருத்தியும் யார் என்று பெயர் சுட்டப்படா மலேயே அகப்பொருள் அமைகின்றது. சுட்டிப் பெயர் காட்டப் பெறின் அது புறமாகும்.

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர் (அகத். 54)

எனத் தொல்காப்பியர் காதல் நெறிப்பட்ட ஐந்திணை ஒழுக் கத்து வரும் தலைவனும் தலைவியும் பெயரால் அழைக்கப்பட மாட்டார் என்கின்றார். இஃது எத்துணைப் பொருத்த மானது? 'தந்ததுன் தன்னைக் கொண்ட தென்றன்னை' யென்று இறையொடு கலக்கும் அடியவர் 'தம்மை மறந்து தம் நாமம் கெடுவது' போன்றே இக் காம வாழ்விலும் தம்மை மறந்து

தம் நாமம் கெட்டவரே இன்பத்தின் எல்லை காணமுடியும். தம்மை மறந்த தலைவனும் தலைவியுமே 'இருவரல்லர் ஒருவர்' என்ற உணர்வில் கலந்து மகிழமுடியும். மேலும் இக்காம இன்பம் எல்லா உயிர்களுக்கும், சிறப்பாக மக்கள் இனத்துக்குப் பொதுவாக அமைகின்றமையின் இதிற் கலப்பாரைப் பெயரிட்டு அழைத்தல் பொருந்தாது என விட்டனர் போலும்.

ஒருவனும் ஒருத்தியும் என்றோம். அவர்தம் இயல்பு பற்றியெல்லாம் இங்கே நாம் ஆராயப் போவதில்லை. அது தேவையற்றதும் கூட. தேடும் அவரவரே ஆய்ந்து தேர்ந்து கொள்வர். எனினும் பொதுவாக அவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார் என்பதைத் தொட்டுக் கண்டு மேலே செல்லலாம்.

ஒன்றே வேறே யென்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை யின்றே (களவு. 2)

என்று தொல்காப்பியர் உருவும் திருவும் பிறவும் ஒத்தவர்களாக இருக்கவேண்டுமெனவும் அவருள் தலைவன் சில நிலைகளில் உயர்ந்திருந்தாலும் தவறில்லை எனவும் காட்டுவர். பின்வந்த இலக்கிய இலக்கணப் புலவர்களும் இந்த அடிப்படையிலேயே தம் இலக்கண இலக்கியங்களை ஆக்கிச் செய்வதைக் காண்கின்றோம். இவ்வாறு ஒத்த கிழவனும் கிழத்தியும் கண்டுகலந்து சிறக்கும் காதலின்பத்தைக் களவு, கற்பென இருவகையாகப் பிரித்துள்ளனர் ஆன்றோர். அவற்றின் வழியே நாமும் ஆய்ந்து காண்போம்.

தமிழ்நாட்டு மணமுறை களவின் வழி வந்ததேயாகும். 'கற்பெனப்படுவது களவின் வழித்தே' என்பது தொல்காப்பியம். தலைவனும் தலைவியும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தம்முள் தாமே எதிர்ப்பட்டுக் கூடுவது களவாகும்.

அவர்தம் களவொழுக்கத்தைப் பின் பாங்கன், பாங்கி என்ற இருவருமே அறிவர். இவ்வொழுக்கத்தையே அகம் எனவும் அதன் கால அளவு இரண்டே திங்கள் எனவும் அறுதியிடுவர். 'திங்கள் இரண்டின் அகமென மொழிப' என்பது தொல்காப்பியம். எனவே அந்த இரண்டு திங்கள் எல்லையில் தலைவன் தலைவியைப் பலமுறை தானாகவும் பாங்கன் பாங்கியர் துணை வழியும் எதிர்ப்பட்டுக் கூடும் நிலையினைக் காண்கின்றோம். இதுவே காமத்தின் முதற்படி. இம்முதற்படி இப்படிக் களவினால் ஆகவேண்டுமா? களவு நன்றாகுமா? என்ற வினாக்களுக்குப் பண்டைக் காலத்திலே அறிஞர் பலர் விடைகூறியுள்ளார்கள். இறையனார் களவியலுரை இக்களவு ஏற்புடைத்து என்பதற்குப் பெருவிளக்கங் கூறியுள்ளது. அறிஞரால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டதே இஃது என்பது உண்மை. சில செயல்கள் கொடியன அல்லது தவறுடையனவாகத் தோன்றினும் அவை நன்றாகுமாறு உண்டு. கல்லால் அடித்த சாக்கியருக்கு இறைவன் வீடளித்த நிலையும் இதன் பாற்பட்டதேயாகும். எனவே இவ்வகப் பொருள் களவு ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான்.

இனி இக் களவுக் காலத்தில் தலைவன் தலைவியோடு கூடிக் களித்தானா என்ற கேள்வி இன்று சிலரிடம் எழுகின்றது. தொல்காப்பியத்தும் அதன் உரைகளிலும் பின் வந்த இலக்கண நூல்களிலும் களவில் மெய்யுறு புணர்ச்சி உண்டு என்றே குறிக்கப்பெற்றுள்ளது.

கலந்த பொழுது காட்சியு மன்ன (அகத்திணை இயல், 16)

என்ற சூத்திரத்தால் தொல்காப்பியர் தலைவன் தலைவியர் களவுக் காலத்தில் கலந்தார் என்றே குறிப்பிடுகின்றார். இதற்கு உரை எழுதவந்த நச்சினார்க்கினியரும், 'கலத்தலும் காட்சியும் உடனிகழு மென்றுணர்க. கலத்தலின்றிக் காட்சி நிகழ்ந்ததேல் உள்ளப் புணர்ச்சியேயாய் மெய்யுறு புணர்ச்சி இன்றி வரைந்து கொள்ளுமென்க' என விளக்கம் தருகின்றார். எனவே களவில் மெய்யுறுபுணர்ச்சி இருந்தும் இல்லாமலும்

மண நிகழ்ச்சி நடைபெற்றது என்பர். மேல் களவியலுள் (11ஆம் சூத்திரத்தில்) 'கூடுதலுறுத்தல், சொல்லிய நுகர்ச்சி' என்று தொல்காப்பியர் கூறுதலாலும் மெய்யுறுபுணர்ச்சி அமைத்தல் ஒருதலை என்று தெளியப்பெறும். பின்வந்த நம்பி அகப்பொருள் ஆசிரியர் வெளிப்படையாகவே,

உள்ளப்பு ணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும்
கள்ளப்பு ணர்ச்சியுட் காதலர்க் குரிய (34)

என்று விளக்கிச் சென்றுள்ளார். திருவள்ளுவரும் புணர்ச்சியின் மகிழ்தல் என்ற அதிகாரத்தின்வழி இருவரிடையும் களவில் மெய்யுறு புணர்ச்சி உண்டு எனக் கொள்ள வகை செய்கின்றார்.

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு (குறள், 1103)

என்று காட்டி அத்தலைவியின் தோள்மேல் துயிலும் பெரு நிலையைக் காட்டுகின்றார். இதே உணர்வைப் பின் கற்பு நிலையில் தலைவியின்மேல் ஏற்றி,

துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து (குறள், 1218)

என்கின்றார். இந்தக் கருத்தை விளக்கமாகப் பின்வந்த ஆண்டாள்,

நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்

எனக் காட்டுகின்றார். இந்த நிலையையே சங்ககாலப் புலவரும் வள்ளுவரும் நாகரிகமாகத் தோள்மேல் துஞ்சியதாகக் காட்டினர். எனவே மெய்யுறு புணர்ச்சி களவில் இருந்தது எனக் கோடல் பொருந்தும்.

எனினும் அக்களவுப் புணர்ச்சிவழித் தலைவிக்கு மாசு உண்டாகுமே என அஞ்சியே அதைத் தடுக்க நினைப்பவர் கருதுவர். அவர் கருத்துச் சாலச் சிறந்ததே. எனினும் அவர் மெய்யுறு புணர்ச்சி உலகத்தாருக்கு நன்கு வெளிப்படுமுன் மணவினை நடந்தே ஆகவேண்டும் என்ற திட்டவட்டமான விதியினை அமைத்துத்தான் தொல்காப்பியர், 'திங்கள் இரண்டின் அகமென மொழிப' என வரையறுத்துள்ளார் என்பதை அறியாததே அக்கருத்துக்குக் காரணமாகின்றது. ஆகவே அவ்விரண்டு திங்களுக்குள் எப்படியும் மணம் நிகழ்ந்தே ஆக வேண்டும். மேலும் கற்பிற் புணரும் புணர்ச்சியைத் தொல் காப்பியர்,

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொளக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே
(கற்பியல், 1)

என்றும்,

கொடுப்போர் இன்றியும் கரணமும் உண்டே (கற். 2)

என்றும் கற்பிற் புணர்ச்சி கரணத்தொடு கூடியதே எனக் காட்டி, களவிற் புணர்ச்சிக்குக் கரணம் இல்லை என்பதையும் விளக்கினார். களவில் இருவரும் உள்ளம் ஒன்றி ஒருவராகி விட்டபின் கரணம் எதற்கு என்ற வினா எழலாம். அதற்கும் தொல்காப்பியர் காரணம் காட்டியுள்ளார்.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப (கற். 4)

என்பது தொல்காப்பியர் காட்டும் காரணமாகும். நாட்டில் களவியலில் பொய்மை கலவாதபோது கரணம் தேவையில்லை. ஆயினும் மக்கள் வாழ்வில் பொய்யும் வழுவும் புகுந்த பின்னர் வெளிப்படையாக யாவரும் கண்டுகொள்

ரும் கரணங்கள் அமைந்தன என்பது அவர் கருத்து. எனவே களவு நிலையில் உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும் இருந்தன என்பதும் அதன் கால எல்லை 'இரண்டே திங்கள்' என்பதும் உணரல் வேண்டுவதாகும். மெய்யுறு புணர்ச்சி யைத் தடுக்க நினைப்பவரும் மனைவியைக் கன்னியாகவே மண மேடை ஏற்ற விரும்பும் நல்ல குறிக்கோளே உடையவராத லின் அவர் கருத்திற்கும் நாம் பிழை கற்பிக்கக் கூடாது. எனினும் தமிழ் நாட்டு முறைப்படி 'நினைத்தலும் செய்தலோ டொக்கும்' என்ற பரிமேலழகரின் 'உள்ளத்தால் உள்ளல்' என்ற தொடரின் உரைப்படி, எண்ணமும் செயலும் இரண் டும் ஒன்றே என உரையில் மெய்யுறு புணர்ச்சியால் காணும் குற்றம் உள்ளப் புணர்ச்சிக்கும் பொருந்தும் என உணர்ந்து உள்ளத்தால் நினைத்தபோது அவள் கன்னித் தன்மை அகன்றது எனவே இருவகைப் புணர்ச்சியும் ஏற்புடைத்து எனக் கொள்ளல் பொருந்தும். எப்படியாயினும் அத்தலைவன் இரண்டு திங்களின் எல்லைக்குள் தலைவியை மணந்தே ஆதல் வேண்டும். ஊரறியக் கரணங் காட்டிக் கடிமணம் செய்தே ஆதல் வேண்டும். இதுவே தமிழ்முறை காட்டிய காமத்துப் பகுதி. இதன் விரிவெல்லாம் ஈண்டுரைப்பின் பெருகும்.

இனி இந்தக் களவு கற்பெனும் இருநிலையிலும் தலைவன் தலைவியர் தன்மைகளுள் ஒரு சிலவற்றைக் காணல்வேண்டும். வள்ளுவர் குறள்வழிக் காணும்போது களவு நிலையில் தலைவன் உள்ள உணர்ச்சியையும் கற்புநிலையில் தலைவியின் உள்ள நெகிழ்வையும் நன்கு காண முடிகின்றது. இரண்டிடத் தும் இருவரும் உள்ள நெகிழ்வும் உணர்வும் பெறுகின் றார்களாயினும் களவு நிலையில் அதைத் தலைவன் அதிகமாக வாய்விட்டு விளக்கலைக் காண முடிகின்றது. அப்படியே கற்பில் தலைவனைப் பிரியும் நேரமெல்லாம் அதன் கொடுமை யைத் தலைவியே பெரும்பாலும் வாய்விட்டுக் கூறும் வகை யினைக் காண முடிகின்றது. பெரும்பாலும் என்றமையின் சிறுநிலை களவில் தலைவியும் கற்பில் தலைவனும் பேசுவதையும் உணர முடியும்.

களவில் ஏன் தலைவி வாய் திறந்து தன் வருத்தத்தைக் காட்ட முடியவில்லை என்பதற்குத் தொல்காப்பியர் தக்க காரணம் காட்டுவர். களவியலில் தலைவி தன் உணர்வனைத்தையும் குறிப்பால் உணர்த்துவாளேயன்றி வாய் திறந்து விளக்குவதோ அல்லது தலைவனைத் தேடிக்கொண்டு செல்வதோ கிடையாது என்கின்றார். ஆனால் அந்த நிலையறிந்து தலைவன் ஓடோடி வருவான் என்பதையே வள்ளுவர் அவர் கூறுவதாக அமைந்த பல குறள்வழி விளக்கிக் காட்டுகிறார்.

காமத் திணையிற் கண்ணின்று வரூஉம்
நாணு மடனும் பெண்மைய வாதலின்
குறிப்பினு மிடத்தினு மல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி னான (களவி. 17)

என்று காட்டுவர் தொல்காப்பியர். நச்சினார்க்கினியர் இதை நன்கு விளக்கினார். எனவே குறள் வழியும் பிற இலக்கியங்கள் வழியும் தலைவி கூற்று அதிகமாக நிகழவில்லை போலும்.

தலைவன் தலைவியினும் உயர்ந்தோன் என்ற நிலையிலும் இக்காமத்துப் பாலில் தலைவி உயர்நிலைக்கும் இடனும் உண்டு. உளத்தால் ஒன்றி இருவருக்கும் உயர்வு தாழ்வு கற்பிக்க விரும்பவில்லையாயினும், புலவர்கள் பண்புவழி உயர்வு தாழ்வு காட்டவேண்டிய நிலையில் காட்டித் தீரத்தானே வேண்டும். 'மிக்கோனாயினும் கடிவரை இன்றே' எனத் தலைவன் உயர்வு காட்டிய நெறியிலே தலைவன் ஏற்றம் அறிகின்ற நாம் மனைவியின் உயர்வையும் காணவேண்டாமா? ஆம்!

மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய (பொருளி. 33)

என்று தொல்காப்பியர் புலவியாகிய ஊடலுள் மனைவி உயரத் தலைவன் தாள்பணியும் தகைமையைச் சொல்லுகிறார். ஆனால் வள்ளுவர் அப்பணிவும் முடிவில் தலைவனுக்கு வெற்றியையே தேடித் தரும் என்ற விந்தையை,

ஊடலுள் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலுள் காணப் பெறும் (குறள், 1228)

என்று காட்டுவர். தலைவிக்கு என்றும் தலைவனை வழிபடு நிலையும் கடப்பாடும் உண்டென்றும் சிறுதுனியன்றிப் பெரு துனி வரக்கூடாது, வந்தால் தலைவர் பணிதல் தவறில்லை என்றும் காட்ட விழைந்த தொல்காப்பியர் இரண்டையும் இணைத்து,

காமக் கடப்பினுள் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான (கற். 19)

எனக் காட்டுவர். இவற்றின் விளக்கமெல்லாம் மனைவாழ் மக்கள் தம் அனுபவத்தில் கண்டு தெளிய வேண்டுமேயன்றிக் காட்சி வகையால் கொண்டு காட்ட இயலாது எனக் கூறி மேலே செல்கின்றேன். இனி, வள்ளுவர் பெரிதாகிய இக்காமத்தை எப்படி நுணுகி ஆராய்கின்றார் எனக் கண்டு அமைவோம்.

காமம் கண்ட உடனேயே மகிழ்ச்சியைத் தருவது எனக் கண்டோம். இதைத் திருவள்ளுவனார் காமத்துப்பாலின் முதல் அதிகாரத்திலேயே விளக்கிக் காட்டி, கடைசியாக நாம் மேலே காட்டிய கள்ளோடு பொருந்திய குறளைக் கூறிமுடிக்கின்றார். குறிப்பறிதல் என்னும் அதிகாரத்தில் இருவரும் வாய்ச் சொல்லானன்றிக் குறிப்பாலேயே தம் உள்ளத்து உணர்வைப் புலப்படுத்திக் கொள்ளும் நிலையைக் காட்டியுள்ளார். இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தும் நிலையை இக்குறிப்புக்களே நன்கு உணர்த்துகின்றன.

யானோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும் (குறள், 1094)

என்றும்,

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும் (குறள், 1095)

என்றும் அக்குறிப்பினைக் காட்டுவர். குறிப்பிற் குறிப்புணரும் திறன் வாய்ந்த அவரிடை மற்றவருக்கு என்ன வேலை?

அடுத்துவரும் புணர்ச்சியின் மகிழ்தலில்தான் வள்ளுவர் 'காமமோ பெரிதே' என்பதைக் காட்ட நினைக்கிறார். அவர் அதில் வெற்றி பெற்றார் என்று கூறமுடியாது. யாருமே சொல்லால் காட்டி வெற்றி பெறமுடியாது என்பது ஒருதலை. தலைவியின் முயக்கத்தால் பெற்ற புதுப்புது நலன்களைத் தலைவன் எண்ணி எண்ணி மெள்ள மெள்ள வெளியிடுகின்றான்.

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள (குறள், 1101)

என்றும்,

வேட்டபொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள் (குறள், 1105)

என்றும்,

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் (குறள், 1106)

என்றும் தலைவன் பாராட்டுக்கள் சொல்லுகின்றன. இந்த அதிகாரத்தில் வள்ளுவர் இப்பெருங்காமப் பயனையும் வற்புறுத்துவர். காலம் மறந்து எல்லை மறந்து நாம் முதலில் கண்ட 'எங் கெழிலென் ஞாயிறு எமக்கு' என உலகை மறந்து தம் கூடல் இன்பத்தில் உள்ள தலைவன் தலைவியருக்குக் கடமையும் உண்டல்லவா? ஆனால் அவர்கள் மறப்பார்களாயின் எப்படித் தலைவர்களாக முடியும்? எனவே அவர்தம் காதல் இன்பத்துக்கு இடையில் கடமை இன்பத்தையும் உணர்த்துகின்றார். இவ்வாறு உணர்த்த வல்லவரை உடன் கொள்ளாத

காரணத்திஞல்தான் சச்சந்தன் விசயையொடு காலமும் எல்லேயும் பிறவும் மறந்து 'காமமோ பெரிதே' என வாழ்ந்து கடமை மறந்து இடர்ப்பட்டான். எனவே வள்ளுவர் தெள்ளியவர் ஆதலின் காதலோடு கூடிய கடமையை உணர்த்துகின்ருர். அதுதான் அவர்கள் இல்லறத்தியைந்து 'விருந்து புரக்கும்' பெரும் பொறுப்பு. இதைத் தலேவன் வாக்கிலேயே காட்டுவர் வள்ளுவர். தலேவி தந்த இன்பத்தை எண்ணும் தலேவனுக்கு அவளோடு பின் கூடிவாழும்கால் ஆற்ற வேண்டிய அறவாழ்வோடு பகுத்துணரும் விருந்து புரந்தரும் விளக்கம் தெரிகின்றது. இரண்டையும் இணேத்து வள்ளுவஞர்,

தம்மில் இருந்து தமது பாத்துண்டற்ருல்
அம்மா அரிவை முயக்கு (குறள், 1107)

எனக்காட்டுவர். ஆம். அக்காதல் இன்பம் பின் இல்லற வாழ்வில் புதுப்புதுக் கடமைகளே அவர்களுக்கு உணர்த்தப் போகின்றது. இளேயராய் மற்றவர் பொறுப்பில் வாழ்ந்த அவர்கள் இருவரும் தனியராய் இல்லறம் ஏற்கும்போது எத்தனேயோ புதுப்புது உண்மைகளே அறிய வேண்டியிருக்கும். புதிது புதிதாகப் பலப்பல உண்மைகளே அறியா அவர்தம் அறியாமையை அவர்களே எண்ணி வியக்க வேண்டியுள்ளது. காமத்தோடு அந்தக் காட்சியும் தலேவனுக்குப் புலஞகிறது. பெரிதாகிய காமம் இந்தப் பேருண்மையையும் அவனுக்கு உணர்த்துகிறது. அவன்வாய் வழியே வள்ளுவர்,

அறிதோ றறியாமை கண்டற்ருல் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு (குறள், 1110)

என்ற குறளே நமக்குத் தருகின்ருர். 'காமமோ பெரிதே' என்பதை இதனினும் வேறு எப்படி விளக்கமுடியும்?

யார்க்கென வரையறுக்கப் பெருதிருந்த தலேவி, ஒருவனுக்கு உரியவளாகிவிட்டாள். எனவே அவள் பலர்

காணத் தோன்றத் தேவையில்லை. தோன்றினும் காண்பர் 'அவள் ஒருவனுக்கு உரியவள், எனவே நமக்குத் தாய்' என, நினைக்கும் வண்ணம் அமைய வேண்டும். இதை எண்ணிய வள்ளுவர், முதலில் அவள் முகத்துக்குச் சந்திரனை உவமை கூறிய வள்ளுவர், அவ்வுவமை சந்திரன் பலர் காணத்தோன்ற வழியேதான் சிறக்கும் என உணர்ந்து,

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி (குறள், 1119)

எனக் கூறுகின்றார். ஆம்! தலைவனுக்கு இத்தகைய தலைவி தனக்கே உரியவளாகிவிட்டாள் என்றபெருமிதம்–மகிழ்ச்சி–இன்பம் எல்லாம்.

இதே நிலையில் வாய்திறந்து பேசமுடியாத தலைவனைப் போல் தன் காதலைப் புறத்தே காட்டமுடியாத காதலியும் தன் செயலாலும் குறிப்பாலும் தன் காதல் இன்பத்தைப் புகழ்ந்தும் எண்ணியும் மகிழ்கின்றாள். கணவன் அவள் உள்ளத்து இடம் பெற்றுவிட்டான். கண்ணுள்ளும் கருத்துள்ளும் நிறைந்த கணவனை எண்ணியெண்ணிப் பார்க்கிறாள். கணவன் கண்ணுள் இருப்பதால் கண்மூடி மைதீட்ட விரும்பவில்லை. ஏன்? அதுவரை அவனை மறைத்து வைக்கவேண்டுமே என்ற எண்ணம். வெய்தாக உண்ண விரும்பவில்லை, ஏன்? உள்ளத்திருக்கும் அவரைச் சுடுமே என்ற உணர்விலே. இவையெல்லாம் அதன் செவ்வி தலைப்படுவார்க்கே தெரியும் நுண்ணிய பொருள்கள்.

கண்ணுளார் காத லரவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து (குறள், 1127)

என்பதும்,

நெஞ்சத்தார் காத லரவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து (குறள், 1128)

என்பதும் வள்ளுவர் வாக்கு: இத்தனை உள்ள உணர்வு இருந்தும் பெண்தன்மை மேலானது என்பதை வள்ளுவர்,

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில் (குறள், 1137)

என்று காட்டுகின்றார். 'பெண்ணிற் பெருந்தக்கயாளவு கற்பென்னும் திண்மையுண்டாகப்பெறின்' என்ற இல்லற இயலில் காணும் குறளை இங்கே இணைத்துக் காணுங்கள். பெண்மை பெருமதிப்புடையது. அது கற்பின்வழிச் சிறப்பது. அவ்வாறு சிறத்தல்தான் பெண்மை வாழ வழி. கற்பில் மட்டுமன்றிக் களவிலும் அப்பெண்மை போற்றப் பெறுகின்றது; காப்பாற்றப்பெறுகின்றது. நாம் மேலே கண்டபடி எத்துணை உணர்வுமிகினும் குறிப்பினாலன்றித் தலைவி தன் பெருங்காமத்தை-கடலன்ன காமத்தைக் காட்டமாட்டாள். பின் கற்பியலில் அவள் வாக்கிலே பல குறள் காட்டும் வள்ளுவர் இங்கே அஞ்சுகின்றார். தலைவியின் அச்சம் அவரச்சமாகின்றது. தலைவன் மடலேறுதலைக் கூறலாம்; தலைவி நினைக்கலாமா? அந்த நினைக்காத பெருநிலையைப் 'பெருந்தக்க' தாகப் போற்றுகின்றார் வள்ளுவர். நாண்துறக்கும் நிலையினில் காமம் கடலெனப்பெருகிய காலத்தும் அக்கடலுள் மூழ்கி ஆழ நேருமோ என்ற நிலையிலும் பெண்மை காப்பாற்றப்படுகின்றது. இதன் நுண்மையை உணர்ந்தோரே 'காமமோ பெரிதே' என்ற உண்மையை உணர்ந்தவராவார்.

தலைவனும் தலைவியும் நெருப்பிற்குச் சமமாகின்றார்கள். நெருப்பு நெருங்கினால் சுடும்; விலகினால் தண்ணென்றிருக்கும். இது மற்றவருக்கு. அத்தலைவனையோ தலைவியையோ அவரன்றி-அவருள் ஒருவருக்கொருவரன்றி மற்றவர் சுடின் வெம்மைத் தீயால் வேகவேண்டியதுதான். ஆனால் அவர்களுக்குள் அத் தீ எப்படி உள்ளது? அதிலேயும் வள்ளுவர் காமத்தின் நுண்மையைப் புகுத்தியுள்ளார். பிற பெண்களைக் காணின், தொடின் வெம்மை விளைவதுஇருக்க, காதலர் ஒரு

வரை ஒருவர் தொட்டு விலகின் வெம்மை விளையும்; கூடி யிருப்பின் அத்தீத் தணிந்துவிடும். இதுதான் கற்பு நிலை. இந் நிலையை வள்ளுவனார் இருவர் மேலும் ஏற்றிக் கூறுகின்றார்.

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ (குறள், 1159)

என்று தலைவி கூற்றிலும்,

நீங்கிற் றெறூஉங் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள் (குறள், 1104)

என்று தலைவனின் கூற்றிலும் வைத்து வள்ளுவர் காட்டு கின்றார். இதன் வழி வள்ளுவர் தலைவி தலைவன் இருவருமே மற்றவர் அணுக அஞ்சத்தக்க நெருப்பினைப் போல்வார் என்ற உண்மையை விளக்கிவிட்டார். கற்புநிலையினை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுமை யாக்கிவிட்டார். பின் புலவிமுதலிய அதிகாரங்களாகவே 'யாரினும் காதலர்' முதலிய குறள்களிலே வேற்று வரைவு தலைவனுக்கு உண்டு என்னுமாறு வள்ளுவர் காட்டினும், அவர் உள்ளம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற அளவில்தான் அமைகின்றது. அதனாலே மற்றப் புலவர்களைப் போன்று பரத்தையிற் பிரிவையே வள்ளுவர் தொடவில்லை. 'வரைவின் மகளிர்' என்று நாட்டிலிருந்த ஒருவழக்கத்தை–பொருந்தா நெறியினை எங்கோ ஒழிபியலில் காட்டிச் சென்றார். இங்கும் புலவியில் 'ஒருத்தியைக் காட்டி நீ சூடினிர்' 'யாருள்ளித்தும்மினிர்' 'யாருள்ளி நோக்கினிர்' என்பன போன்ற தொடர்கள் ஐயத் தின் பாற்பட்டு எழுந்தனவாக அமைகின்றனவே யன்றித் தலைவன் ஒழுக்கங் கெட்டவனாக யாண்டும் வள்ளுவர் காட்ட வில்லை. எனவே வள்ளுவர் காட்டிய காமவாழ்வு 'நீயுநானு மாய் ஏகபோகமாய்' அமைந்த தெய்வ வாழ்விலும் ஏற்ற முடைத்து. அதனாலன்றோ இதனினும் 'இனிதுகொல் தாமரைக் கண்ணான் உலகு' என அவரே கேட்கின்றார்?

ஆம்! அந்த இன்ப உலகினைக் காட்டிலும் இருவரும் உள்ளத்தால் இயைந்த இந்தக் 'காமமோ பெரிதே' என எண்ணிப் போற்ற வேண்டுவதே.

களவியலில் பெண்மையைக் கட்டிக்காத்த தலைவி, கற்பியலில் பெண்மை உடையுமோ என அஞ்சுகின்றாள். ஆயினும் அந்நிலை தன் கணவன் வாழ்வோடு பிணைந்துள்ளமையின் பெருமிதமே கொள்ளுகின்றாள். பெண்களுக்கே உரிய 'நாணம்' கற்பினை நோக்கச் சிறிய தன்றே. இதை மணிவாசகரோ கோவையில்,

தாயிற் சிறந்தன்று நாண்தைய லாருக்குஅந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் தோளிதிண் கற்பின் விழுமிதன்று

எனக் காட்டுவர். எனவே கற்பின் வழி நாணழிதலை வள்ளுவனார்,

நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின் (குறள், 1257)

என்று கணவனோடு கலந்து மகிழும் நிலையிலும் அதை எண்ணும் நிலையிலும் கற்பின் பொற்பால் நாண் உள்ளதை அறியாதவளாகின்றாள் தலைவி. அவள் தன் பெண்மையை உடைக்கும் படையாகக் கணவன் பணிமொழியைக் கொள்ளுகிறாள். தலைவன் பணிவு யாண்டு எவ்வாறு அமையுமென்று கண்டோம். அந்த நிலையில் பெண்மை கணவன் மாட்டுக் கலந்து குலைகின்றது. இந்த உண்மையைத்தான் வள்ளுவர்,

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை (குறள், 1258)

எனக்காட்டி மாயப் பெண்மையைத் தன்னுள்ள மாய்க்க வழி செய்த தலைவனைத் தலைவிவாயிலாகவே 'பன்மாயக்

கள்வஞக' நமக்குக் காட்டுகின்ருர். அத்தலைவனை நினைந்து நினைந்து நெஞ்சுநெக்குருகும் தலைவி, அந்தநினைவுக் கெல்லாம் தன்னைக்காயாத தலைவனின் பெருந்தன்மையை எண்ணிவியக் கின்ருள். அவனைக் கனவிடைக் கண்டு களிக்கின்ருள். அவன் பிரியும்போது தன் நினைவே இல்லையாயின் கனவிலேயே கண்டு கண்டு களிக்கலாமே எனஎண்ணுகின்ருள் அவள். துஞ்சுங்கால் தன் தோள் மேல் இருந்த தலைவர் விழித்தவுடன் எப்படி நெஞ்சத்துள் புகுந்தார் என வியக்கிருள். வள்ளுவர் இவைகளைப் பலகுறள்வழிக் காட்டுகின்ருர். அவற்றுள் ஒரு சில இவை.

காமம் விடுஒன்ரே நாண்விடு நன்னெஞ்சே
யானே பொறேன்இவ் விரண்டு. (குறள், 1247)

நனவென வொன்றில்லை யாயின் கனவினுன்
காதலர் நீங்கலர் மன் (குறள், 1216)

துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தா ராவர் விரைந்து (குறள், 1218)

எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்ரே
காதலர் செய்யும் சிறப்பு (குறள், 1208)

வாழ்வார்க்கு வானம் பயந்தற்ருல் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி (குறள், 1192)

இவ்வாறு தலைவன் தலைவியர் வாழ்க்கை முறையைக் 'காமமோ பெரிதே' எனக் காட்டிய வள்ளுவர், தம் காமத் துப் பாலின் இறுதியில் புலவி, ஊடல், நெஞ்சொடு புலத்தல் முதலிய அதிகாரங்களால் அவர்தம் தெய்வப் பிணைப்பை நன்கு விளக்குகிருர். நாமும் அது கண்டு அமைவோம்.

தலைவன் தலைவியைக் கட்டித் தழுவி 'இம்மையில் உன் னைப் பிரியேன்' என்று கையடித்துச் சொல்லுகிருன். அதைக் கேட்டு மகிழவேண்டிய தலைவி வாடுவதாக—அழுவதாகக்

காட்டுகிறார் வள்ளுவர். ஏன்? அப்போது தலைவன் மறுமையில் பிரிந்துவிடுவானோ என்ற ஏக்கம் அவளைப்பற்றிக் கொள்ளுகின்றது போலும். என்றும் பிறியா உறவன்றோ தமிழ்க் காதல் உறவு? பாரதியார் இக்காதல் உறவு பிறவி தொறும் பல வகையில் பற்றிவரும் எனக் காட்டியதை, மேலே கண்டோமல்லவோ? எனவே என்றென்றும் 'என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ' என்றபடி பற்றும் காதல் வாழ்வில் திளைத்த தலைவி,

இம்மைப் பிறப்பின் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள் (குறள், 1315)

என்ற குறளுக்கு இலக்காவது பொருத்தந்தானே?

மற்றொரு குறளில் திருவள்ளுவர் அழகான காதற் கற்பனையைக் காண்கின்றார். தலைவன் தலைவியையும் அவள் அவனையும் இடைவிடாது நினைத்துக் கொண்டிருக்கக் கடமைப் பட்டவர்கள். நினைத்துக் கொண்டும் இருக்கின்றனர். ஆயினும் அந்த இடைவிடா நினைப்பை 'நினைப்பு' என்று எப்படிக் கொள்வது? எப்போதாயினும் மறந்தால் தானே பின்னர் நினைப்பு அரும்பும். எனவே தலைவன் இடையில் மறந்தான்கொல் எனத் தலைவியை எண்ணவைத்து வேடிக்கைக் காட்டுகிறார் வள்ளுவர்.

உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றுஎன்னைப்
புல்லாள் புலத்தக் கனள் (குறள், 1316)

என்பது குறள். இதனால் இருவரும் ஒருவரை ஒருவர் என்றும் மறந்தறியாதவர் என்ற காமப் பெருநிலையை உலகுக்கு வள்ளுவர் உணர்த்தத் தவறவில்லை. இப்படியே சிறு சிறு செயல்களிலெல்லாம் கூட-தும்மலும் விம்மலும் பெறும் நிலையிலும் கூடக் காதல்-காமம் சிறக்கின்றது. நம் நாட்டில் தும்மல் வந்தால் 'யாரோ நினைக்கிறார்கள்' என்று எண்ணுவது மரபு. தும்மினால் 'வாழ்க' என்று வாழ்த்துவதும் மரபு.

இவற்றைக் கருத்தில் கொண்ட வள்ளுவர் காதல் வாழ்விலும் இவற்றைப் புகுத்துகின்றார்.

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று (குறள், 1317)

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று (குறள், 1318)

என்ற குறள் இரண்டும் நுனிந்தறிந்து நோக்கி உணர்ந்து மகிழற்பாலனவாகும். இப்படியே,

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று (குறள், 1319)

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யார்உள்ளி நோக்கினீர் என்று (குறள், 1320)

என்றும் வள்ளுவர் காமச் சிறப்பை அதன் உச்ச நிலையில் வைத்துக் காட்டுகின்றார். இவையெல்லாம் நாம் முதலில் கண்டபடி இன்பவளர்ச்சியைப் பெருக்கத்தான் அமைந்தனவே ஒழியத் தலைவனின் வேற்று நட்பால் விளைந்ததென்று கூறமுடியாது. பிரிவுத் துன்பத்தை நீக்கும் பிரிவின் நிலையில் இவை அமைந்தன என்று கொள்ளுவதே பொருத்தமாகும். ஏனெனில் இவை இல்லையாயின் காமம் சிறந்ததாகாது என்பதை வள்ளுவரே,

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல் (குறள், 1302)

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று (குறள், 1306)

என்று காட்டுவர். எனவே காமம், இன்பம் பெருகவே இவை பயன்பட்டனவேயன்றி வேறு தலைவனுக்கோ தலைவிக்கோ மாசு கற்பிக்க இவை அமையவில்லை என்பது தேற்றம்.

வள்ளுவர் தம் காமத்துப்பாலின் கடைசி அதிகாரத்தால் 'ஊடுதல் காமத்துக்கு இன்பம்' என்றே கூறித் தம் நூலை முடிக்கின்றார். எனவே காமத்தின் பெருமையை அறிதற்கு ஊடுதலும் பயன்படும், உயர்ந்ததாக எண்ணப்படும், ஏற்கப் படும் என்பது துணிபு.

புலத்தலின் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து (குறள், 1323)

என்ற குறளில் இதன் பெருமையை விளக்குகின்றார். இதில் வரும் உவமையும் மேலே பல குறட்பாக்களில் கண்ட உவமையும் வள்ளுவர் தலைவனும் தலைவியும் பெற்ற காம இன்பத்தைக் காட்டுவதோடு அதன் வழி உலகத்தார் பெறவேண்டிய சிறப்புக்கள், வாழ்க்கை நெறிகள், உலகியல் அமைப்புக்கள் அனைத்தையுமே உணர்த்துகின்றார் என்பதை அறியல் வேண்டும். ஆம்! அத்தகைய உலகியலை உணர்த்தும் நெறியே இக்குறளை என்றும் வாழ வைக்கிறது.

உணலினும் உண்டல் அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது (குறள், 1326)

என்ற குறளில் ஊடலும் கூடலும் காட்டிய அதே நெறியில் அக்காம வாழ்விற்கு நோயற்ற வாழ்வே அடிப்படை என்ற உண்மையையும் உணர்த்தி விட்டார் வள்ளுவர். இவ்வாறு 'காமமோ பெரிதே' என்று கூற இயலாத நிலையை உடையது காமம் எனக் கூறிய குறுந்தொகைப்புலவர் வாக்கினையும் ஓரளவு அதை உணர்த்திய வள்ளுவர் வாக்கையும் கலந்து நாம் எண்ணுவோமானால் இவ்வுலக உயிர்வாழ்வும் இன்ப நெறியும் புலனாகும் என்று கூறி அமைகின்றேன்.

காமம் என்ற தலைப்பின் சிறப்பையும் அச்சொல்லுக் கமைந்த பொருளையும், அதன் வழக்காற்று நிலையையும், சங்க கால இலக்கியமாகிய குறுந்தொகையும் தொல்காப்பியமும் அது பற்றித் தந்த விளக்கங்களையும் அக்காமத்துக்கு உரியார்

யார், அவர் நிலையும் செயலும் பண்பும் பிறவும் யாவை என்பதையும் அவர்வழித் தெய்வத்தன்மை பொருந்திய காமம் சிறந்து விளங்குவது எவ்வாறு என்பதையும், அக்காமத்தின் திறத்தையெல்லாம் வள்ளுவர் நேர்முகமாகவும் குறிப்பாகவும் உவமை வாயிலாகவும் எவ்வெவ்வாறு விளக்கினர் என்பதையும் அவற்றின் சிறப்புநிலைகள் எவ்வாறு போற்றப் பெற்றன என்பதையும் கண்டோம். அக்காமம் வாழ்க! சிறக்க! செழிக்க! என்று நாமும் வாழ்த்துவோம். வாழ்க 'காமம்'! வளர்க காமம்! இன்பம் இயைக! எழில் பெருக! வாழ்வு தழைக்க! வளம்கொழிக்க!

## 3. புறம் காட்டும் அறம்

மனிதன் பிற உயிர்களினும் வேறுபட்டவன் என்பது நாடறிந்த உண்மை. அவ்வேறுபாட்டை விளக்குவது அவனது பகுத்தறிவும் வாய்மொழியுமேயாம். வாய் திறந்து பேசித் தான் கொண்ட கருத்தில் பிறருக்குப் புரிய வைக்கவே மொழி பயன்படுகின்றது. இம்மொழியே மனிதனைப் பிற உயிரினங்களினின்றும் பிரித்து மனிதனாக வாழ வைக்கின்றது. பகுத்தறியும் உணர்வு மனிதனே அன்றி வேறு சில பறவை விலங்கினங்களிடத்தும் இருப்பதை இன்றைய விஞ்ஞானிகள் ஆய்ந்து கண்டுள்ளனர். இந்த அடிப்படையிலேதான் நம் நாட்டுப் பழம்பெரும் புலவர்கள் பிற உயிரினங்களைக் காட்டி மனிதனுக்குப் பல உண்மைகளையும் வாழ்வின் அடிப்படைகளையும் அறிவுறுத்தினர் போலும். எனவே அவையும் ஒரு வேளை வாய் திறந்து பேசின் அவை மனிதனினும் மேலாக விளங்குமோ என எண்ண வேண்டியுள்ளது. ஆகவே மனிதனை மனிதனாக வாழ வைப்பது பேச்சும் அதன் வழியே தோன்றிய மொழியும் அதன்வழி உருவான இலக்கியங்களுமாம்.

மனிதன் தன் கருத்தை மற்றவருடன் பரிமாறிக் கொள்ளும்போது பேசுகிறான். அப்பேச்சுச் சாதாரணமாக—தனி நிலையில் உள்ளதாக அமையுமாயின் அது காற்றோடு காற்றாகக் கலந்து மறைகின்றது. ஆனால் அதுவே மனித சமுதாயத்தை வாழ வைக்கும்—என்றென்றும் ஏற்ற

முறச் செய்யும் நிலையில் வெளிப்படுமாயின் அது இலக்கிய மாக அமைகின்றது. உலக மொழிகளிலுள்ள எல்லா இலக் கியங்களும் இந்த அடிப்படையில் தோன்றியனவே என்பதை முன்பு கண்டோம். புறநானூறும் இவ்வாறுய உலகச் சமு தாயத்தை வாழவைக்கும் பண்பாட்டு நெறியில் முகிழ்த்த ஒரு தமிழ் இலக்கியம்—தொகை நூல். இப்புறப் பாடல் கள் எழுந்த அதே நாட்களில் எத்தனை எத்தனையோ பாடல் கள் எழுந்திருக்கும். அவையெல்லாம் மாய இந்த நானூறு மட்டும் நிலைபெற்று வாழ்கின்றனவென்றால், இவை மக்கட் சமுதாய வாழ்வை என்றென்றும் வாழவைக்கும் அடிப்படை யில் அமைந்த பாடல்கள் என்பது சொல்லாமலே அமையும். ஏறக்குறைய இன்றைக்கு இரண்டாயிர மாண்டுகளுக்குமுன் தோன்றிய இந்த நானூறு பாடல்களும் காலத்தை வென்று வாழ்கின்றன என்றால், அதற்குக் காரணம் அவை உலகுக்கு உணர்த்தும் நல்ல நீதிகளேயாம். இப்பாடல்கள் பெரும் பாலும் அக்காலத்தில் வாழ்ந்த மன்னரையும் மற்றவரையும் முன்னிறுத்தி, அவரவர்தம் இயல்புகளையும், பண்புகளையும், வீரம் விளைக்கும் ஆற்றலையும், பிறவற்றையும் விளக்கும் பாடல்களேயாயினும், அவற்றின் இடையில் பாடிய புலவர் கள் தம்மை மறந்து, உலக நலம் ஒன்றையே உணர்ந்து, உலகம் என்றென்றும் வாழத்தக்க வகையில் நல்ல அறநெறி முதன்மை பெற்ற பல சமுதாய உண்மைகளை உரைத்து விட் டார்கள். இங்கே நாம் சேர சோழ பாண்டியரையும் சிற் றரசர்களையும் மட்டும் காணவில்லை. இப்பாடல்கள்வழி அக்கால மக்கட் சமுதாயத்தை மட்டும் காணவில்லை. இவற் றால் உலகம் உள்ளளவும் மக்கள் வாழவேண்டிய தெய்வநெறி களையும் செம்மைப் பண்புகளையும் பிற வாழ்வியல் நெறி களையும் காண்கின்றோம். எனவேதான் இப் புறநானூற்றுப் பாடல்கள் காலத்தை வென்று வாழ்கின்றன—வாழும் என்பது உறுதி.

புறநானூறு என்று கூறியவுடனே பலர் 'இது போரைப் பற்றியதாகும். எனவே இதில் என்ன புதுமை இருக்கப்

போகின்றது?' என்று கேட்பர். அதுமட்டுமன்றித் தமிழர் ஒருவருக்கொருவர் சண்டை இட்டுக்கொண்ட பெருமையைத்தானே இது காட்டுகின்றது என்றும் சாடுவர். தமிழ்ச் சமுதாயம் போர் விரும்பாச் சமுதாயமாக எப்படி அமைந்திருந்தது என்ற உண்மையை, முன் 'தொல்காப்பியர் கண்ட வாழ்வியலில்' விளக்கமாகக் கண்டோம். அதே தொல்காப்பிய அடிப்படையில் அமைந்த இப்புறப்பாடல்களும் மக்களை அமைதி வாழ்வில் செலுத்த வழிகாட்டியாக நின்றன என்பதும், அவ்வாறு அமைதி காணமுடியாத நிலையிலேயே போர் பற்றிய விளக்கங்கள் தந்துள்ளன என்பதும் எண்ணிப் பார்க்கத்தக்கன. மக்கள் வாழ்வுக்கு வேண்டிய பொதுவான அறநெறி பற்றியும் தனித்த சமுதாய வாழ்வு பற்றியும் பிற பண்பாடுகள் பற்றியும் புறம் பாடுகின்ற காரணம் ஒன்றே அதைச் 'சிரஞ்சீவி'யாக்கி விட்டது என்பது உறுதி.

மனித வாழ்விற்கு இம்மையில் தேவையான அறம், பொருள், இன்பம் பற்றியும் மறுமையில் அடையக்கூடிய வீடு பற்றியும் புறம் நன்கு விளக்குகின்றது. 'இன்பம் இன்ன வகைத்தென விளக்க முடியாதது' எனப்பொருள் கூறினும் அந்த இன்பத்தை அறத்தாறு பெறும் வழி இது எனப் புறம் சுட்டிக் காட்டுகிறது. அப்படி 'வீடு' சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆயினும் அடைய வழி இது எனப் புறம் சுட்டத் தவறவில்லை. மற்றைய பொருள் நலம் பற்றிய விளக்கம் தந்து, அனைத்தும் அறத்தின் வழியே அமைவன என்பதைப் புறம் பலவிடங்களில் விளக்கிக் காட்டுகின்றது. எனவே உயிர் வாழ்விற்குத் தேவையான அனைத்தும் அறத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன என்ற உண்மை ஈண்டு வலியுறுத்தப் பெறுகின்றது. உண்மையும் அதுதானே!

இவ்வறநெறியைப் பகுத்து உணர்கின்றவன் மனிதன். அவன் அறத்தாறு வாழ்கின்றான் என்றால், அதற்கு அடிப்படையாக அமையும் சில நியதிகள் உள. அவற்றை அவன்

மேற்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறன். ஊரும் நாடும் நிலமும் பிறவும் செழிக்க இருப்பினும் சிறக்க ஓங்கினும் அவற்றல் எல்லாம் பயன் விளையாது என்பதையும் அவற்றின் இடையில் அவற்றை வளர்த்து, காத்து, துய்க்கும் மனிதனை செம்மனத்துடன் தண்ணளியாளனய் வாழ்தல் வேண்டும் என்பதையும், அவ்வாறு வாழாவிடில் எல்லா வளனும் வற்றியதாகிவிடும் என்பதையும், அவன் அறவாழ்வு வாழ்வானயின் காடும் நாடாகும் என்பதையும் அறம் உரைத்த ஔவையார் நன்கு விளக்குகின்றர். ஔவையார் என்றவுடன் தமிழ் நாட்டுப் பிள்ளைகளுக்கு 'அறஞ் செய விரும்பு' என்ற தொடர் உள்ளத்தே தோன்றும் என்பது உறுதி. இன்றைய கல்வித் திட்டத்தில் இந்தத் தொடருக்கு முதல் இடம் இல்லையாயினும் தமிழ் நாட்டுக் கல்வி முறை 'அறஞ் செய விரும்பு' எனவே ஆரம்பிக்க வேண்டும் என்ற கொள்கை இன்னும் மறைந்துவிடவில்லை. ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நல்வழியே மாணவர்களுக்கு நல்வழி காட்டும் முதல் நூல்கள். அவற்றை இன்றைய பள்ளிப் பிள்ளைகள் முதலில் கற்கும் பேறு பெறவில்லை. காரணம் இதோ நாம் காண இருக்கின்ற பாட்டே காட்டும். நானும் இங்கே பிற அறிஞர்கள் காட்டும் அறங்களைத் தொடுமுன் அனைவருக்கும் அறிமுகமான ஔவைப் பாடலையே காட்ட விரும்புகிறேன்.

'ஔவை' தமிழகத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர் வாழ்ந்துள்ளனர். பிற்காலத்து வாழ்ந்த 'ஔவை' யாரே நாம் மேலே கண்ட அறநூல்களை இயற்றியவர். எனினும் சங்க காலத்து ஔவையும்—சான்றண்மை குன்ற அச்செல்வியும் - அறங் கூறுவதில் சளைத்தவர் இல்லை என்பது நாம் காண இருக்கும் ஒரு சில பாடல்களாலேயே நன்கு விளங்கும்.

நாடா கொன்று காடா கொன்று,
அவலா கொன்று, மிசையா கொன்று,
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறம். 187)

என்ற ஔவையாரின் பாடல் மக்கள் வாழ வேண்டிய அற நெறியை நன்கு காட்டுமன்றோ! மக்கள் எப்படி வாழ்கின்றார்களோ அப்படியேதான் அந்நாட்டுப் பெயரும் புகழும் சிறக்கும் என்பது அவர் வாக்கு. 'இந்தியா புண்ணிய பூமி' என்றால் அதில் உள்ள மண்ணும் நீரும் நாடும் ஊரும் காடும் களரும் அவ்வாறு போற்றற்குரிய அல்லவே? அதிலுள்ள மக்கள் பண்டு தொட்டு அறத்தாறு ஒழுகிய காரணத்தாலன்றோ இந்தியா 'புண்ணிய பூமி' யாயிற்று. அப்படியே ஒரு நாடு கொடியது என்னும்போது, பாவம் அந்த நாட்டு மண் என்ன செய்யும்? மக்களின் கொடுமை அந்த மண்ணின் மேல் ஏற்றப்படுகிறது. எனவே உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் நகரும் ஊரும் பிறவும் அங்கங்கே வாழும் அறநெறி பிறழா மக்களாலேயே ஏற்றம் பெறுகின்றன. அவற்றை உணர்ந்து மக்கள் தம் வாழ்வைச் செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

மக்கள் செம்மை வாழ்வு வாழச் செய்ய வேண்டுவன யாவை? தமிழ் மொழியில் பல அறநூல்கள் உள்ளன. பிற மொழிகளிலும் எத்தனையோ அறவோர் பல பல ஏடுகளைத் தந்துள்ளனர். சமயத் தலைவர்கள் அன்று தொட்டு அற நெறி வாழ்வை வற்புறுத்தியுள்ளனர். நாம் இங்கே புற நானூற்றுப் புலவர் அவற்றைப் பலவகையில் கூறும் பண்பினைக் காண்போமே!

முதலாவதாக அனைத்தும் அறத்தின் வழியே அமையும் என்ற உண்மையை அறுதியிட்ட புலவர்களைக் காணலாம், அறம் பொருள் இன்பம் மூன்றும் வாழ்வில் இயைந்தன. பின்னவை இரண்டும் வேண்டாத உயிரே-சிறப்பாக மனிதனே- இருக்க முடியாது. அவற்றை எத்தனையோ 'நெறியல்லா நெறி' நின்றெல்லாம் பெற நினைக்கும், பெறுகின்ற மக்கள் நாட்டில் உள்ளனர். ஆயினும் அவை அறத்தின் வழி அமைதலே ஏற்புடைத்து என்பதையும் அவற்றை அறத்தாறு பெறுகின்றவனே மனிதனவன் என்பதையும் கோவூர் கிழார் அழகாகக் காட்டுகின்றார்.

சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல (புறம். 31)

என்ற உவமை வாயிலாக, அவர் சோழன் நலங்கிள்ளியைப் பாராட்டுகிறார். பொருளும் இன்பமும் சேர பாண்டியராக அவன் அறமாக அமைகின்றான் எனக்காட்டி, அதன்வழித் தமிழ் நாடு முழுவதும் இவன் குடைக்கீழ் உள்ள பெருமையையும் விளக்குகிறார். அதுபற்றிய விளக்கம் நமக்கு இங்கே தேவையில்லை. நேரியமுறையில் சிறப்பாக வரும் பொருள், இன்பம் இரண்டும் அறத்தாறு அமைவனவே என்ற உண்மை இதனால் நமக்கு விளங்குகின்றது ஒன்றே சாலும். அதே மன்னனைப் பாடிய மற்றொரு புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் இம்மூன்றும் இயைந்ததே அவன் செல்வம் என்ற உண்மையை,

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம் (புறம். 28)

என விளக்கிக் காட்டியுள்ளார். எனவே உலகவாழ்விற்கு அறம் அடிப்படை என்ற உண்மை விளக்கப் பெற்றது.

இவ்வறம் யாது? எத்தகையது? எவ்வாறு செயல்படுவது? என்பனபோன்ற வினாக்கள் எழுவதும் இயல்பே! சாதாரணமாகக் 'கொடுப்பது அறம்' என்ற கொள்கை நாட்டில் உண்டு. ஆனால் தமிழில் இவ்வறம் என்றும் அதனினும் மேம்பட்டு மறைவாழ்வின் அடித்தளமாக அமைந்து 'வாழ்வாங்கு வாழ' வழி அமைப்பது என்பதைப் பல அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள். மக்களும் மன்னரும் பிறதுறையாளரும் இவ்வற நெறியை எவ்வெவ்வாறு கைக்கொள்ள வேண்டும் என்பதையும் தனிமனிதனும் சமுதாயமும் இவ்வறத்தை ஓம்பும் நெறி யாது என்பதையும் பல அறிவறிந்த புலவர்கள் தொட்டும் சுட்டியும் காட்டியுள்ளார்கள்.

உலகம் வாழ்கிறது என்றால் அதிலுள்ள உயிர் அனைத்தும் துன்பமற்று வாழ்கின்றது என்பதுதான் பொருள். எல்லாரும்

எல்லாரும் துன்பமற்று வாழ்ந்தால் அதனினும் சிறந்த வாழ்வு வேறொன்று இருக்கத் தேவையில்லை. இந்த அடிப் படையை நாடித்தான் உலக அரசியல் தலைவர்கள் குடி யரசு, பொதுவுடைமை என்ற பல தத்துவங்களைப் பற்றி விளக்கித் தம் தம் நாட்டு ஆட்சியை அமைத்துக் கொள்ளு கின்றனர். கொள்கை அளவில் எவ்வளவுதான் இவை பேசப் படினும் இவற்றை அறமுணர்ந்த மக்கள் தம் வாழ்வில் மன தார மேற்கொள்ளாக் காரணத்தினால்தான் இன்னும் உலகில் கொடுமைகளும் உணவுப்பஞ்சங்களும் போர்களும் பிற தீமை களும் தோன்றுகின்றன. இவற்றை நன்கு ஆய்ந்த தமிழ் நாட்டு மன்னன் ஒருவன் இக்கொடுமைகளுக்குரிய கார ணத்தை ஆராய்ந்தான். உண்மை உணர்ந்தான்-உலகுக்கும் உணர்த்தினான். அவன் உணர்த்திய உண்மையை உணராத காரணத்தில்தான் நம் நாட்டில் 'நிதிமந்திரிகள்' தம் பதவியை விட்டுவிட வேண்டிய நிலையும் பிறநாடுகளில் நாட்டு முதல் வர்கள் கொலை செய்யப் பெற வேண்டிய நிலையும் உண்டா கின்றன. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற மன்ன னாகிய அப்புலவன் இவ்வுலகம் இருப்பதற்குக் காட்டும் ஒரே காரணம், 'தமக்கென வாழாப் பிறர்க் குரியாளர்' இருப்பதே யாம். தனிமனிதனும் பொது நலங்காக்கும் பொறுப்பேற்ற மனிதனும் இந்த அடிப்படை உண்மையை உணர்வாரானால் பின் உலகம் செம்மையில் வாழாதுபோகுமா? இதோ அவர் வாக்கையே காண்போம்

உண்டால் அம்ம இவ்வுலகம்—இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர், பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே (புறம். 182)

என்ற பெருவழுதிப் பாட்டை ஒவ்வொருவரும் உதட்டால் அன்றி உள்த்தால் சொல்லித் தமக்கு அத்தகுதி உண்டா என எண்ணிப் பார்க்க வேண்டும். பார்த்து உண்டாயின் ஆட்சிப் பொறுப்பையோ அறப்பொறுப்பையோ வேறு எந்தத் தனிப் பொறுப்பையோ ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும். இன்றேல் அமைதியாக விலகி ஒதுங்கி வாழவேண்டும். இது தான் நியதி. இது அனைவருக்கும் பொதுவான நியதி. இந்த அடிப்படையிலே ஆளும் மன்னனுக்கு அறமுரைத்த புறப் பாடல்களும் பல. அவற்றுள் ஒருசிலவற்றைப் பின்பு காண் போம்.

'உலகம் பொல்லாதது' என்று வேதாந்தம் பேசுவோர் பலர். எனினும் நல்ல அறநெறி பற்றிய உள்ளம் அதற்கு இடங்கொடுப்பதில்லை. 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று காட்டிய வள்ளுவனார் இன்பத்துள் துன்பம் காணும் மக்களை விளித்து, 'துன்பத்துள் இன்பம் காண்பதே' மக்கட் பண்பு என்கிறார். 'இடுங்கண் வருங்கால் நகுக' என்கின்றார். எனவே எதையும் இன்பமாக்கும் உள்ளம் நம்மிடமேஉள்ளது. இதனால்தான் சமணர்களால் பலதொல்லைக்கு உள்ளான அப்பரடிகளார் அவற்றையெல்லாம் இன்பமாக்கி, தம் வாழ் வையே இன்பமாகக் கண்டு 'இன்பமே எந்நாளும் துன்ப மில்லை' என்று வாயாரப் பாடினார். இதையே சங்ககாலப் புலவர் பக்குடுக்கை நன்கணியர் என்பவர்,

> இன்னு தம்ம இவ்வுலகம்
> இனிய காண்கஇதன் இயல்புணர்ந் தோரே (புறம். 194)

எனப்பாடினர் இப்பாட்டில் புலவர் உலக இயல்பினைக் காட்டி, அவ்வியல்புக்குகிடையில் இனிமை காண்பதே அறம் எனக் காட்டி மகிழ்கிறார்.

இவ்வாறு இனிமை காண்பதற்கு வேறு சில புலவர்கள் வழியும் காட்டுகின்றனர். நாம் வாழும் வகையில் நம்மைச் சுற்றி உள்ளவர்களைச் செம்மை உடையவர்களாக இருக்கப்

பார்த்துக் கொள்வது ஒருவகை. அவ்வகையில் அனைவரும் செம்மை நலம் சான்றவர்களாயின், நம்மை முதுமையும் பற்றாது. 'என்றும் இளையர்' என்னுமாறு வாழலாம். வீடும் நாடும் செம்மை நெறியில் திகழின் தனிமனிதனும் சமுதாயமும் என்றென்றும் முதுமை அடையாது, இளமை கொழிக்கும் எழிலார் வாழ்வில் திளைக்கும் என்பது உறுதி. இந்த உண்மையினையே பிசிராந்தையார் என்னும் புலவர் தம் மேல் சாற்றிக் கூறுகின்றார்.

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியர்என வினவுதி ராயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர்என் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும், அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே (புறம். 191

என்று அவர் கூறும் போது அந்த ஊரையும் நாளையும் எண்ணி எண்ணி ஏங்க வேண்டியுள்ளதல்லவா? இதில் புலவர் நல்ல மனைவிமக்களையும் பணியாளரையும், அல்லது செய்யா வேந்தனையும், சான்றாண்மை மிக்க தக்காரையும் பெற்றமையே தம் இளமைக்குக் காரணம் என்பதைக் காட்டி, எந்த நாட்டில் இவர்கள் இணைந்து அறத்தாறு வாழ்கின்றார்களோ அவர்கள்வழி அந்த நாடும் பிற இயற்கைகளும் என்றும் வற்றாவளம் வாழும் எனக் குறிக்கின்றார். மற்றொருபுலவர் அச் சான்றாண்மை பெறத்தக்கவழி அனைவரையும் ஒத்து உற்றவராகவே நோக்குதலும் வியத்தலும் இகழ்தலும் இல்லாச் செம்மை நெறியும், இனியதையும் இன்னாததையும் வேறுபடுத்தாது எதிலும் இனிமை காணும் இயல்பும் என்பதை நன்குகாட்டியுள்ளார். அப்புலவர் அனைவருக்கும் அறிமுகமான கணியன் பூங்குன்றனாரே ஆவர். ஆம்! உலகைப்பற்றியும் மக்கள் செம்மை வாழ்வினைப் பற்றியும் அது சிறக்கும் நெறிபற்றியும் நன்கு கணித்துள்ள அவர் 'தாம் பெற்ற

*இன்பம் வையகம் பெறுக' எனப் பாட்டாக நமக்கு வடித்துத் தந்துள்ளார். இதோ அவர் வாக்கு:*

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே, முனிவின்
இன்னு தென்றலு மிலமே, மின்னெடு
வானந் தண்துளி தலைஇ ஆனது
கல்பொரு திரங்கும் மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பதைத் திறவோர்
காட்சியில் தெளிந்தன மாதலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே *(புற. 192)*

*இதில் 'திறவோர் காட்சியில் தெளித்த' கணிப்பை நன்கு விளக்கிக் 'கணியன்' ஆகிச் சிறப்புப் பெற்றாரல்லரோ! வினை பற்றி வரும் என்பதை ஆலூர் மூலங்கிழார் என்ற புலவரும் காட்டி மறுமைக்கு இம்மை வழிகாட்டியாவதை விளக்குகிறார். இந்நிலை,*

பொலம் பூங்காவின் நன்னாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்த லல்லதை
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவதன் மையின் கையற வுடைத்து *(புறம். 38)*

*எனக்காட்டி இதன்வழி உலகநிலையையும் ஒருவாறு தெளியக் காட்டியுள்ளார்.*

*இந்த உண்மையை ஔவையார் ஒருவன் செய்த நல்வினையே அவனுடன் வரும் என்று ஆருயிர் முறை வழிப்படூஉம் தன்மை வகையால் விளக்குகிறார்.*

வாழச் செய்த நல்வினை யல்லது
ஆகுங் காலைப் பிறிதொன் றில்லை (புறம். 367)

என்பது அவர் வாக்கு. இதில் அவர் மக்கள் எவ்வாறு இல்லறத்தில் சிறப்போடு பொருந்தி வாழவேண்டும் எனக் காட்டுகின்றார். அதைப் பிறகு காண்போம். இங்கு அற மாற்றும் வகைபற்றி வேறு சில புலவர்கள் பாடும் வகை கண்டு மேலே செல்லலாம்.

'இருப்பது பொய் போவது மெய்' என்ற தொடர் வாழ்வில் பொய்ப்பதில்லை. எனவே வாழும் நாட்களில் நாம் நல்லது செய்தால் அதுவே நம்மொடு கூடிவரும் என ஔவையாரும் பிற புலவர்களும் கூறியுள்ளமை கண்டோம். எனவே நல்லது செய்தல் இம்மையில் எல்லோரும் உவப்பது; மறுமை வாழ்வை மலரவைப்பது. மனிதப் பிறவியின் பயனே அது தான்-அறமும் அதுவே. ஆயினும் 'அந்த நலமாற்று நிலை ஒரு வேளை பல்வேறு சூழல்களுக்கிடையில் அமையுமாயின் என்ன செய்வது?' என்ற எண்ணம் தோன்றின் அதற்கும் நரிவெரூஉத் தலையார் என்ற புலவர் பதில் தருகின்றார். நல்லது செய்ய முடியா விட்டாலும் அல்லதையாவது செய்யாதிருங்கள் என்பதே அவர் வேண்டுகோள். அவ்வாறு செய்யாதார் 'இயமன் வருங்காலை என்செய்வர்?' என இரக்கப் படுகிறார் அவர்.

நல்லது செய்தல் ஆற்றிரா யினும்
அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே (புறம். 195)

என்ற அவர் வேண்டுகோளை உங்கள் முன் வைத்து மேலே செல்கின்றேன்.

புறம் பாடிய புலவர்கள் சில தனிப்பட்ட அறங்களைத் திட்டவட்டமாக வற்புறுத்துவதையும் காணல் ஏற்புடைத்

தாகும். பொதுவாக அறஞ் செய்க, நலஞ் செய்க எனக் காட்டுவதோடு, இன்னின்ன அறங்கள் வாழ்வில் இன்றியமை யாதன என்று கூறும் புலவரும் பலர் உள்ளனர். அவருள் ஒரு சிலரை இங்கே அறிமுகம் செய்து வைக்க நினைக்கிறேன்.

உலகில் உயிர் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது. இன்றைய நாட்டு உணவுப் பஞ்சத்தின்வழி இவ்வுண்மையை நன்கு உணர்ந்துள்ளோம். சாத்தனார் தம் மணிமேகலையில் இவ்வுணவளிக்கும் சிறப்பினைக் கதை வாயிலாகவே நன்கு காட்டியுள்ளார். ஆக, உலகின் அறங்கள் அனைத்திலும் உண வளிக்கும் அறமே உயர்ந்தது. இதைத்தான் 'ஏ'காரங் கொடுத்து, குடபுலவியனார் என்னும் புலவர் பாண்டியன் நெடுஞ்செழியனை முன்நிறுத்தி, உலகுக்கு உணர்த்துகின்றார்.

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே (புறம். 18)

என்று காட்டி இவ்வடிகளோடு கூடிய புறப்பாட்டில் புலவர் உணவு பெருக்க வேண்டிய கடன் அரசருக்கு முதலாவது என்பதை வலியுறுத்துகின்றார். இந்தக் குடபுலவியனார் சொல்லை இன்றும் நாம் கேளாத காரணத்தினால்தான் இன்னும் நம் உணவுக்கு நாம் 'குடபுல' த்தை நோக்க வேண்டி யுள்ளது. அமெரிக்கக் கோதுமையும் பிறநாட்டு அரிசியும் என்று வரும் என்று வரும் என ஏங்குகின்றோம் நாம். ஏன்? குடபுலவியனார் கூறியதைக் கேட்க மறுத்தோமல்லவோ? அவர் என்ன கூறினார்?

பரந்த பாரதநாட்டில் தண்ணீருக்குப் பஞ்சமில்லை. ஏன்? நிலத்துக்கும் அப்படியே. நீரிருப்பின் நிலம் பயிராவதில் குறையில்லை. இருந்தும் ஏன் பஞ்சம்? அத்தண்ணீரை நாம் நன்கு பயன் படுத்தவில்லை. முக்கால் பகுதி நீர் கடலில் வீணாகச் சென்று சேர்கிறது. ஒருமைநாடு நம்முடையது என்று பேசிக் கொண்டே, ஆற்றுநீரின் ஒருபகுதியை வரண்ட மற்றொரு பகுதிக்குத் தரமறுக்கின்றோம். அதை வீணாகக் கடலில் விழக்கண்டு மகிழ்ச்சி கொள்ளுகின்றோம். இந்நிலையில்

ஒருமை உணர்வு காண்பதெங்கே? குடபுலவியனூர் இந்நீரை வீணுக்காது அணையிட்டுத் தடுக்கச் சொல்லுகிறூர். தடுத்து வயல்பக்கம் திருப்பச் சொல்லுகிறூர். அவர் வாக்கை நீங்களே கேளுங்கள்.

நிலனளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்மா இவண்தட் டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே (புறம். 18)

என்று நீரை நிலத்துக்கு அருகில் கொண்டு வரச் சொல்லுகின்றூர். கோதாவரி கிருஷ்ணு ஆற்றுநீர் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சித்தூர் பகுதிகளில் பாயவேண்டும். கங்கைநீர் மத்தியப் பிரதேசத்தில் பெருக்கெடுத் தோடவேண்டும். இதைச் செய்யாது சிறு சிறு எல்லையில் பூசலை வளர்த்து, உள்ளத்தைச் சிறியதாக்கி,உதட்டால் ஒருமை உணர்வு பேசிக் கொண்டிருக்கும் வகையில் நாட்டில் பஞ்சம்தான். குடபுலவியனூர் பிறந்த அதே தமிழ் மண்ணில் பிறந்த—தமிழ் நாட்டுக் குடபுலத்தில் பிறந்த-கோவையில் பிறந்த-இன்றை உணவு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இதை உணர்ந்து நாட்டை நீர்வழி ஒருமைப் படுத்துவாராக! ஜெய் ஜவான் ஜெய்கிசான்' என்ற தொடர் செயலில் வரவேண்டும்.

இன்னும் பல பொது அறங்களை வற்புறுத்தும் புலவர்களையும் காண்போம். கோப்பெருஞ் சோழன் சிறந்த மன்னன்; அறிவறிந்த புலவனும்கூட. அவன் தன் மக்களிடம் உண்டான மாறுபாட்டின் காரணமாக வடக்கிருந்தான் எனக் காண்கின்ருேம். அதுகாலை இடைநின்ரூர் பலர் பல எடுத்துரைத்தனர். எனினும் மன்னன் தன் செயல் எத்தகையது என எடுத்துக் காட்டுகின்ருன். நெஞ்சத்துத் துணிவு இல்லோர் ஆற்றல் வீரத்தோடு பொருந்திய அறச் செயல் தரும் பயன்களையும் அவர் தொகுத்துத் தரும்போது நம்மை நாம் மறக்கத்தான் வேண்டும். மறுமையில் பெறும் வீட்டின்பமும் இன்றேனும் இம்மையில் புகழ் பெறுதலும் தீதில் யாக்கையொடு விளிதலும் நல்லறமாற்றும் வல்லவ

ருக்கு ஒல்லுவதல்லவா? இதை அவன் வாய் உலகுக்கு உணர்த்துகின்றது. இதுதான் அவன் பாடல்.

'செய்குவங் கொல்லோ நல்வினை' எனவே
ஐயம் அருஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவுஇல் லோரை
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால் உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டுஎனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்
தொய்யா உலகத்து நுகர்ச்சி இன்றெனின்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்
மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம்இசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே (புறம். 214)

என்ற இப்பாடல் தனித்த விளக்கம் பெற வேண்டுவது. காலம் கருதி மேலே செல்லலாம்.

'கண்ணுக்குக் கண்ணெதிரே கட்டையில் வேகக் கண்டும் என்றும் திறமாய் இருப்போம்' என்று எண்ணித் தருக்கி வாழ்வோர்தான் நாட்டில் மிகப் பலர். இடுகாடு நமக்கு எண்ணற்ற நீதிகளை உணர்த்துகின்றது. அந்த நீதிகளை உணர்ந்து நலமாற்றத் தடுமாறுகின்றது மனித உள்ளம். அத்தகைய மனித சமுதாயத்து, பிறர் வேவதைக் கண்டு, நமக்கும் அதுவழியே என உணர்ந்து நல்லறமாற்றும் வல்லவரைக் காண முடியவில்லையே என்று தடுமாறுகின்றது தாயங் கண்ணனாரது பேருள்ளம். அவர் வாய் பாடுகிறது. நமக்குப் பேரறம் கிடைக்கின்றது.

எல்லார் புறனும் தான்கண்டு, உலகத்து
மன்பதைக்கு எல்லாம் தானாய்த்
தன்புறம் காண்போர்க் காண்பறி யாதே (புறம். 356)

என்ற அடிகளில் புலவர் எத்துணையோ பேருண்மையை விளக்கிக் காட்டிவிட்டார். இதற்குமுன் அடிகளில் அழல் வாய் சுடலேயில் உள்ள அவலநிலேயைக் காட்டியுள்ளார். அதன் வழி எல்லார் புறனும் கண்டும் மனிதன் உள்ளம் மாற வில்லேயே என வருந்துகின்ருர். ஆம்! புறம் காண்பது காஞ்சிநிலே. நிலேயாமை உணர்ந்தால் என்ன செய்ய வேண்டும்? உலகைவிட்டு ஓடுவது தமிழர் மரபு அன்று. நீண்ட மதுரைக் காஞ்சியைப் பாடிய மருதஞர் உலக நிலேயாமை யைப் பல அடிகளில் உணர்த்தி, இந்த நில்லா உலகத்து நிலேக்குமாறு புகழொடு பொருந்தி இல்லற வாழ்வில் வாழ வேண்டுமெனவே நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்துகிருர். அவ்வாழ்விலேயே உலகெலாம் ஒத்து நோக்கும் அன்பு மலரும். அவ்வன்பே வாழ்வின் அடிப்படை. அந்த ஞானம் வந்தால் பின் வேறெது வேண்டும்? இதைத்தான் தாயங் கண்ணஞர் 'மன்பதை எல்லாம் தாஞய்த் தன்புறங் காணல் வேண்டும்' எனக் காட்டுவர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று முன் கண்டதும் இந்த அடிப்படையில் முகிழ்த்ததேயாகும். இவ்வாறு எல்லாரையும் ஒத்து நோக்கித் தன்னுயிர்போல் மன்னுயிரை ஓம்புவதே அன்புநெறி. அந்த அன்புநெறியில் வாழ வகையில்லேயாயினும், இடுகாட்டில் எல்லோரும் மறைவதைக் கண்டு அஞ்சியாகிலும் உளம் செம்மை பெருதா என ஏங்குகின்ருர் புலவர். எப்படியாயி னும் எல்லாரையும் எல்லாவற்றையும் தாமாக ஒத்து நோக்கி, உற்ற அன்பால் அனேவரையும் பிணேத்து வாழ வழி காண் பதே சமுதாயத்தை வாழவைக்கும் வழி என்பதை உணர்ந்த புலவர்கள் வேறு என்ன சொல்ல முடியும்?

சோழன் நலங்கிள்ளியைப் பாடிய முதுகண்ணன் சாத்தஞர் மற்றெரு பாட்டிலே அம்மன்னனே முன்னிறுத்து, நல்லவர் யாரோடு நட்புடையராக வேண்டுமென்றும் யாரோடு கூடலாகாது என்றும் கூறுகின்ருர். அவற்றுள் ஒன்றை எண்ணலாம். உலகில் நன்மை தீமை இரண்டும் விரவியே நின்கின்றன. நல்லது செய்தார் நன்மை பெறு

வதும் அல்லது செய்தார் வீவதும் உலகியற்கை. சிலர் இந்த அடிப்படைச் சட்டத்தை இல்லை என மதியாது மனம் போன போக்கெல்லாம் போய்க் கெடுகிறார்கள். அவர்தம் உறவே வேண்டாம் என்கிறார் புலவர். ஆம், கூடுபவர் தன்மையிலேயே மக்கள் வாழ்வு அமைகின்றமையின் அக்கூட்டம் எப்படி இருக்கவேண்டும் என எண்ணுவது இயல்புதானே? அந்த எண்ணத்தில் அப்புலவர்,

நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை என்போர்க்கு இனனு கிலியர் (புறம். 29)

எனப் பாடுகின்றார். உலக மக்கள் இந்நெறி செல்லின் பல கொடுமைகள் அகலுமே. செல்லுமா?

இனி இவ்வுலகில் புகழுடம்பு பெற்றவரே மறுமையிலும் பேரின்ப நெறி எய்துவார் என்பதே அறம் வகுத்த மேல் வரிச் சட்டம். ஆயினும் பிறந்த அத்துணையோரும் அந்தப் புகழுக்கு உரியவராதல் இல்லை. ஆகவே உயர்ந்தோர் சிலராக அல்லார் பலராக அமைகின்றனர். இதையே அதே முது கண்ணன் சாத்தனார்,

உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரைஇலை போல மாய்ந்திசினோர் பலரே (புறம். 27)

என உவமை நயம் தோன்றக் கூறுகின்றார். மோசிகீரனாரோ, முரசுகட்டிலில் உறங்கிய அளவில் தம்மை வாள் கொண்டு ஒறுக்காது, கையில் கவரிகொண்டு வீசிய பெருஞ்சேரல் இரும்பொறையைப் பாராட்டு முகத்தான்,

இவணிசை யுடையோர்க் கல்லது அவணது
உயர்நிலை யுலகத் துறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வளம்படு குரிசில்நீ ஈங்கிது செயலே (புறம். 50)

எனப்பாடுவர். பொதுவாக அக்காலப் புலவர்கள் மறம் கடிந்து அறம்காத்த காரணத்தால் அவர் வாய்வழி அரும்பும் புகழுக்கு அவனி காவலர் ஏங்கினர் என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் உள. இப்புலவர் பெருமக்களும் இவ்வாறு பல்வேறு அறநெறிகளைப் பொதுப்படவும் தனிவகையிலும் பல மன்னரை முன்னிறுத்திக் காட்டி விளக்கி அவரையும் நாட்டையும் மொழியையும் பண்பாட்டையும் பிற நல்லியல்புகளையும் வாழவைத்துள்ளனர். இதுவரையில் பலரையும் முன்னிறுத்திப் பொதுவாகக் கூறிய அறவகைகளைக் கண்டோம். இனித் தனித்தனி ஒவ்வொரு மன்னனையும் முன்னுக்கி நேருக்குநேர் அறம் கூறி, அவ்வறத்தைப் பின் பொது நிலையாக்கிய புலவர் வாய்ச் சொற்களில் ஒரு சில காணலாம் என அமைகின்றேன்.

நாடாளும் மன்னவரே நாட்டு நலன் அனைத்துக்கும் பொறுப்பாளி. அவர் கோடின் அனைத்தும் கோடும், மன்னனையே உலகம் உயிராக உடையது. உடல் ஓம்பலின்றேல் உயிர் வாழ்வில்லை. இதைப் பொதுவாக அரசர்மேல் ஏற்றிய மோசிகீரனுர்,

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனுல், யான்உயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே (புறம். 186)

எனப் பாடுகின்ருர். இப்புலவர் தம் முந்திய பாட்டோடு தொடர்புள்ள இப்பொதுப்பாடலை இங்கே கண்டு, பின் தனிப்பட்டவரை முன்னிறுத்திய பாடல்களைக் காணலாம்.

ஆய், கொடை வள்ளல். ஆனுல் கொடுத்தலை அவன் பண்டமாற்ருகச் செய்யவில்லை; அறத்தை விலை கூறவில்லை. உண்மையில் அறஞ்செய்வோர் இயல்பே இதுதான். ஆண்டவனைப் பாடிய அப்பரடிகள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அளவில் தொண்டு செய்தாரேயன்றி அத்-

தொண்டால் இன்ன பயன் வேண்டுமென்று இறைவனிடம் பண்டமாற்று வாணிபம் செய்யவில்லை. ஆனால் இறைவனே அத்தகைய நல்லோருக்குத் தாமே வந்து அருள்கின்றான் என்பது சமய உண்மை. அறம் ஆற்றும்போது பயன் கருதாது செய்தலே சாலச் சிறந்தது. வடமொழிவாணர் 'நிற்காமிய கர்மம்' என்றே இதைச் சிறப்பிப்பார். அத்தகைய செம்மைவழி ஆற்றப் பெறும் அறமே காலத்தை வென்று வாழும். 'முன்னோர் அறஞ் செய்தார். பின்னோர் அறம் செய்ய வேண்டும்; அதுவே மக்கள் கடன். எனவே நான் அறஞ் செய்கின்றேன்' என்ற உள்ளத்தோடு செய்யப்பெறுவதே அறம். இந்த உண்மையை உணராது இன்றும் பலர், ஆண்டவனிடத்தில் ஓர் அறமாற்றிவிட்டு. அதற்குப் பதிலாகப் பலன் வேண்டி நிற்பதைக் காண்கிறோம். வேங்கடவன் சந்நிதியில் இவ்வேண்டுகோள் முறைகளை நன்கு காணலாம். ஆயினும் எண்ணிக் காணில் இவையெல்லாம் அறமாகாது என்ற உண்மையைத்தான் ஆயின் செயலையே சான்றாக வைத்து, புலவர்,

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன்
பிறரும், சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப்பட் டன்றுஅவன் கைவண் மையே (புறம். 134)

என்கின்றார். எனவே இதனால் அறம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது நன்கு புலனாகின்றது.

தமிழ்நாட்டு மன்னர்கள் கூடிலர் என்பது ஒரு கொள்கை. ஆயினும் பலகால் அவர்கள் இணைந்து வாழ்ந்துள்ளனர். அவர்கள் பிரிந்திருந்தார்களெனின் அதற்குக் காரணம் இடையிலிருந்தார் கட்டிவிட்ட இல்லாத பொய்க் கதைகளேயாகும். திறஞ்சால் மன்னர் அவர்தம் வாய்மொழி கொள்ளார்; கூடி இருந்து மகிழ்வர். இந்நிலை தமிழ் நாட்டை உயர்த்திற்று. இந்த வகையில் பாண்டியனும் சோழனும் கூடியிருப்பதைக் கண்ட புலவர் காரிக் கண்ணனார்

'இன்றே போல்க நும்புணர்ச்சி' என்று வாழ்த்தி அப் புணர்ச்சி இடையறுது இருந்து சிறக்க வேண்டுமாஞல் அவர்கள்,

காதல் நெஞ்சின் நும் இடைபுகற்கு அலமரும்
ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளாது (புறம். 58)

என்கின்ருர். இப்படியே மற்ருெரு புலவர் சாத்தஞர் 'தேற் ருய் பெரும பொய்யே' (புறம். 59) என்று மன்னன் பொய் கடிய வேண்டிய திறனைச் சுட்டிக் காட்டுகின்ருர்.

முரஞ்சியூர் முடிநாகராயர் மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த பெரும்புலவர். அவர்சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப் பாராட்டியவர். அவன் பாரதப் போரில் சோறளித்தவன் எனப் பேசப்பெறுகிருன். எனவே அப்பழங்காலத்தில் வாழ்ந்த இப்பெரும் புலவர் அவனிடம் நேருக்கு நேராக நின்று நிலைகெடாத நடுக்கற்ற உள்ளத் தைப்பெற வேண்டிய நற்றிறனை வலியுறுத்துகின்ருர். 'எது வரினும் வருக, அல்லது எது போயினும் போக'என அஞ் சாது, உளந்தடுமாறி நடுக்காது எந்த இடர்ப்பாட்டினும் அஞ்சாதிருப்பதே ஆண்மை.' இந்த உண்மையை ஆண்ட வனைப் பாட வந்த அப்பரடிகள்,

மண்பா தலம்புக்கு மாகடல்மூடி மற்றே ழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே

எனக் காட்டுவர். இதையே முரஞ்சியூர் முடிநாகராயர், அம்மன்னர் இல்லறத்தில் இனிதிருந்து கடமை மறவாது வாழ வேண்டும் என்ற அடிப்படையில்,

பாஅல்புளிப்பினும் பகல்இருளினும்
நால்வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ (புறம். 2)

எனப் பாராட்டுகின்றார். நடுக்கற்ற நிலைக்கு உவமையாக அவர் 'பொற்கோட்டு இமயத்தையும் பொதியத்தையும்' காட்டுவர். ஆம். மலை குலைந்தாலும் மனம் குலையாத உள உரம் மக்களுக்கு அறமாற்றுவதில் தேவையன்றோ! இதே கருத்தைச் சொல் தவறா வாய்மையின் அடிப்படையில் புலவர் இரும்பிடர்த் தலையார்,

நிலம்பெயரினும் நின்சொல் பெயரல் (புறம். 3)

என வற்புறுத்துகிறார்.

அரசியல், அறத்தின் அடிப்படையாக அமைய வேண்டுவது. அரசியல் வேறு அறம் வேறு என வாதிப்பவரும் உண்டு. அதற்குச் சான்றாகக் கண்ணன் கீதையினைக் காட்டுவாரும் உண்டு. அரசன் அறத்தைக் கொள்வனாயின் நாட்டு மக்களை எப்படி 'அறம் காத்து மறம் தடிந்து' ஓம்ப முடியும் என்பர். அதனாலேயே வள்ளுவர் அரசியலை அறத்துப் பாலில் வைக்கவில்லை எனவும் கூறுவர். ஆராய்ந்து பார்ப்பின் அவர்தம் கூற்றுக்கள் அனைத்தும் தவறெனக் காட்ட முடியும். 'வையத்து வாழ்வாங்கு' வாழ்தல் அறநெறி. அரசன் களைகட்டு நற்பயிர் 'ஓம்பும்' உழவனாக இருத்தல் அறம். அதுவும் பெரும்பாலும் பொருள் பற்றிய இடர்ப்பாட்டிலே அவன் செயல் மிகுதி. அதுவும் அறம் பற்றியே எழும் என்பதையே இன்று முதலில் கண்டோம். எனவே அரசனும் அவனுக்குரிய அறநெறி பிறழாது வாழக் கடமைப் பட்டவனேயாவன். இதையேதான் மதுரை மருதன் இளநாகனார்,

நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால், நமரெனக் கோல்கோ டாது
பிறர்எனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்

திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி இல்லோர் கையற
நீநீடு வாழிய! (புறம். 55)

என இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை வாழ்த்து கின்றார். இதில் அறநெறி என்று முதலில் சுட்டிக் காட்டிய தையே பின்னால் பெரிதும் விளங்க வைக்கின்றார். இவர் வாய் மொழியை நன்கு உற்று அறியின் மேலே காட்டியோர் கூற் றுக்கள் அனைத்தும் பயனற்றுப் போம். இந்த அறநெறி அரசர் வாழ்கின்ற காலத்தில் மட்டுமன்றி வீழ்கின்ற காலத் தும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதை ஔவை யார் அதிகமானைப் பாடுங்கால் விளக்குகிறார். மன்னர் போர்க் களத்தே புறமுதுகிடாது போரிட்டு மடிந்து வீர மரணம் எய்துதலே அறத்தாறு. அவ்வாறு அன்றி, நோய்வழி மடி வார்களாயின் அவர்களை என் செய்வது? அவர்களை அறநெறி பிறழா வகையில் வீரமரணம் எய்தியவராகவே அடக்கம் செய்யப் பெறுதல் வேண்டும். அதற்கென அவர் காட்டிய வழி எண்ணற்பாலது. புல் பரப்பி, அதில் உடலைக் கிடத்தி 'வீரர் செல்வுழிச் செல்கென' வாளால் வெட்டி அடக்கம் செய்யும் மரபினை அவர் அறநெறியாகக் காட்டி, அரசர் மறைந்தும் அறம் மறையா வகையினை விளக்குகின்றார்.

நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்துஅவர் தீதுமருங்கு அறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
'மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்'கென
வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ
(புறம். 93)

எனச் செம்மை நலம் காண ஔவையார் காட்டியுள்ளார்.

நாடாளும் மன்னவர் யாருக்கும் பணியவேண்டியவ ரல்லர் என்பது நியதி. அவர் யாருக்கும் சிற்றரசராக இருப் பின் அவர் முடியுடை வேந்தராகார். யார் யாருக்கோ அஞ்சி அஞ்சி அரசோச்சும் வாழ்வு பற்றிய வாழ்வாகவே முடியும். தம்மை மறந்த அப்பரடிகளார் 'நாமர்க்கும் குடியல்லோம்' என்றார். மணிவாசகர் 'நாமார்க்கும் குடியல்லோம் யாது மஞ்சோம்' என்று வீறு பேசினார். அரசர் இந்நிலையில் இருக்க வேண்டியவர்களே. அவர்கள் ஆண்டவன் ஒருவனுக்கே பணி யக் கடமைப்பட்டவர்கள். இதைக் காரிகிழார் என்னும் புலவர் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை முன் நிறுத்திக் காட்டுகிறார்.

பணியியர் அத்தைநின் குடையே—முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே (புறம். 6)

என அம்மன்னன் பிறவா யாக்கைப் பெரியோனாகிய மூன்று கண்களை உடைய சிவனையன்றி வேறு யாரையும் பணிய லாகாது என வற்புறுத்துவர். இங்கே மற்றொன்றும் கூறக் கடமைப்பட்டுள்ளேன். சங்க காலத்தே கடவுள் வழிபாடும் வணக்கமும் தமிழ் நாட்டில் இருந்ததில்லை எனவும் அவை பிற்காலத்தில் பிறர் கலப்பால் தோன்றியவை எனவும் சிலர் எண்ணியும் பேசியும் வருகின்றனர். அதைப் பொய்யாக்க இவ்வடிகள் பயன்படும் என்பது உறுதி. இவை மட்டுமன்றி இறைவனைத் திரிபுரம் எரித்தவனாக, ஆலமர் செல்வனாக, பிறை சூடிய பெருமானாக, நீலமணிமிடற் றொருவனாக, மேருவை வில்லாக வளைத்தவனாகப் போற்றிய பெருமை அக்காலத்தா ருக்கு உண்டு.

பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல (புறம். 91)

என்பதும்,

ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்

பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல (புறம். 55)

என்பதும் புறநானூற்று அடிகள். இப்படியே இப்புறத்தில் வடநாட்டுப் பெருங் காவியங்களாகிய இராமாயணமும் பாரதமும் நன்கு எடுத்தாளப் பெறுகின்றன. அவை ஈண்டுத் தேவை இல்லையாதலின் விட்டு மேலே செல்கின்றேன்.

இனி, இத்தகைய மன்னர்தம் செங்கோல் எப்படி அறத்தாறு அமைய வேண்டும் என்பது பற்றிய புறத்தின் விளக்கத்தையும் காணல் நலம் பயப்பதாகுமல்லவா? கம்பர் 'வறியவன் ஓம்பும் செய்யென' ஓம்ப வேண்டுமென்கின்றார். நாம் முன்னமே, தான் உயிர் என உணர்ந்து அரசன் உலகை ஓம்பவேண்டிய நெறியைக் குறித்தோம். ஈண்டுப் புலவர் காட்டும் வேறோர் உவமையை எண்ணிப் பார்த்தல் நல்லது. பெற்ற தாயரை நினைக்கின்றனர் புலவர். அம்மகளிர் தம் குழவியை எப்படி எப்படிக் கண்ணும் கருத்துமாக - கண்ணுள் மணிபோலக் காத்தோம்புவார்கள் என்ற எண்ணம் புறம் பாடிய புலவர்கள் உள்ளத்தே அரும்புகின்றது. மாற்றார் நாடு அழிய—அது காப்பார் இன்மையின்—தாயில் தூவாக் குழவிபோல அந்த நாடுகள் கெடுகின்றன என்கின்றார் புலவர். மற்றொரு புலவர் தாம் பாடிய அரசனை முன்னிறுத்திக் 'குழவி கொள்பவரின் ஓம்புமதி' என அறமுரைக்கின்றார். குழவிக்கு நோய்வரின் தான் மருந்துண்டு வாழவைப்பதுபோல, நாட்டுக்கு நலிவு வந்தால் தான் வாடி அந்நாட்டின் அவத்தைப் போக்க வேண்டுவதே அரசர் தொழில் என்பதை அவர்கள் விளக்கிக் காட்டுகின்றனர். நாடு எக்கேடு கெடினும் கவலை இல்லை எனவும் தம் தனிவாழ்வு சிறக்கப் பாடுபடுவதே தம் கவலை எனவும் இன்று நாடாளும் பலரை எண்ணின் இவ்வறம் எத்துணைத் தேவைப்படுவது என்பது நன்கு தெளிவுறும். மாற்றார் நாடு காப்பார் இன்மையின் கெடுவதைப் பெரும் புலவர் பரணர்,

தாயில் தூவாக் குழவி போல
ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே (புறம். 4)

என்கின்றார். நரிவெரூஉத் தலையார் பொருள்மொழிக் காஞ்சி யாக,

குழவி கொள்பவரின் ஓம்புமதி
அரிதோ தானே அது பெறலருங் குரைத்தே (புறம். 5)

எனக் காட்டி, அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ என்ற உண்மையை உலகுக்கு உணர்த்திச் சென்றுள்ளார்.

இத்தகைய நாடு காக்கும் நல்ல வீர மன்னர் இரண்டின் இடைப்பட்டு அலமரும் நிலையைப் பரணர் நன்கு காட்டுவர். ஒருபுறம் உரிமை மகளிரைத் தழுவும்நிலை - மற்றொரு புறம் குழவி கொள்பவரின் நாடுகாத்து - தேவையாயின் போர் காத்துப் பொன்றும் நிலை. இந்த அடிப்படையில் போர்க்களம் புகும் உறுதியுடைய மன்னர் மாற்றார் நாட்டை அழித்து வெற்றி பெற்றே மீளுவர் என்ற உண்மையினையும் பரணர் காட்டத் தவறவில்லை. இதோ அவர் வாக்கு:—

விளங்கிழை பொலிந்த வேளா மெல்லியல்
சுணங்கணி வனமுலை அவளொடு நாளை
மணம்புகு வைகல் ஆகுதல் ஒன்றே
ஆரமர் உழக்கிய மறங்கிளர் முன்பின்
நீளிலை எஃகம் மறுத்த உடம்பொடு
வாரா உலகம் புகுதல் ஒன்றெனப்
படைதொட் டனனே குரிசில், ஆயிடைக்
களிறுபொரக் கலக்கிய தண்கயம் போலப்
பெருங்கவின் இழப்பது கொல்லோ!
மென்புனல் வைப்பின்இத் தண்பணை யூரே (புறம். 341)

இவ்வாறு வீரம் விளைக்கும் ஆற்றல் வாய்ந்த வேந்தர் தம் நாட்டு மக்களைக் குழவி கொள்பவரின் ஓம்பும் நிலையை

வேறு சில புலவர்கள் அழகுபடக் காட்டுகின்றனர். நல்ல அரசர் வாழும் நாட்டில் தீயுண்டாம்—ஆனுல் அது சோறு அடும் தீயேயாம்; அன்றிச் சூரியன் சூடாம். அந்நாட்டில் வில் உண்டாம்—ஆனுல் அது திருவில்லாம். அந்நாட்டில் படை உண்டாம்—ஆனுல் அது கலப்பையில் உள்ள படையாம். இவற்றைக் குறுங்கோழியூர்கிழார் அழகாகப் பாடுகிருர்.

சோறுபடுக்கும் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறல்அல்லது
பிறிதுதெறல் அறியார்நின் னிழல்வாழ் வோரே!
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்
..........................
அறந்துஞ்சும் செங்கோலையே (புறம். 20)

இவ்வடிகள் எண்ணத்தக்கன அல்லவோ? இதே கருத்தைக் கோவூர்கிழார் கிள்ளிவளவனைப் பாடும்போது.

அடுதீ யல்லது சுடுதீ யறியா
இருமருந்து விளைக்கும் நன்னுட்டுப் பொருநன் (புறம். 70)

எனப் பாராட்டுவர். எனவே அரசர் அறவாழ்வு இவற்றுல் ஏற்றமுறுகின்றதன்றோ?

வெள்ளைக் குடி நாகனுர் என்றபுலவர் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய பாடலும் ஈண்டு எண்ணத்தக்கதே. அவன்கீழ் உள்ள சிறுபணியாளரால் நிலவரிக்காக அவர் நிலம் எடுத்துக் கொள்ளப் பெற்ற நிலையில், அவர் அரசனை நேரில் கண்டு குறை இரந்து முறை காட்டித் தம் நிலத்தை விடுவித்துக் கொண்டதோடு, என்றென்றும் அரசருக்கு இருக்க வேண்டிய அறவாழ்வையும் வற்புறுத்திச் சென்றுள்ளார். அரசன் 'பெய்யெனப் பெய்யும் மழை போன்றிருக்க வேண்டும்' என்கிருர். அவன் குடை மக்கள் குறையாகிய வெயிலை மறைக்கப் பயன்பட வேண்டும் என்கின்ருர்.

உழவர் வளமே நாட்டுவளம் என்கின்றார். இன்றைய அரசாங்கம் இந்த உண்மையை இன்னும் உணரவில்லை. அதனாலேயே பல உணவுப்பஞ்சங்கள் உண்டாகின்றன. இவ்வாண்டு தமிழ்நாட்டில் பொங்கல் விழாவினை 'ஏர்முனை' விழாவாகக் கொண்டாடவிழைந்தார் உழவராகிய முதலமைச்சர். ஆனால் இருந்தநிலை வேறு. நாட்டு வெற்றி உழவர் வெற்றியில்தான் அடங்கியுள்ளது என்ற உண்மையை வெள்ளைக்குடி நாகனார்,

வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தருஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே (புறம். 35)

என்கின்றார். அதுமட்டுமன்று. நாட்டில் மழை இன்றி வளம் குன்றின் அதற்கும் ஆளுபவரே காரணர் என்கின்றார்.

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம் (புறம். 35)

என்பன அவரடிகள். இவை மட்டுமன்றி அரசர் உழவரை எவ்வாறு காக்கக் கடமைப்பட்டவர் என்ற உண்மையினையும் அப்பொழுது நாடு வெற்றி பெறும் என்ற சிறப்பையும் காட்டுகிறார். அதற்கு இடையாக நிற்கும் பலரும் அவர்முன் தோற்றமளிக்கின்றனர். அனைத்தையும் பிணைத்து,

நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே (புறம். 35)

எனமுடிக்கின்றார். இந்த உண்மையை என்று உணர்கின்றதோ அன்று நாடு நாடாகும். அன்றேல்........?

தாமப்பல் கண்ணனார் என்னும் புலவர் உயர்குடிப்பிறந்தோர் பண்பு இது எனக் காட்டவும் பிறர் நாணத்தக்கது

தாம் நாணின் பெறும் சிறப்பினை விளக்கவும் கருதி, மாவளத்-தானைப் புகழும் முகத்தான்,

நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும்
நீபிழைத் தாய்போல் நனிநா ணினையே
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணும்எனக்
காண்தகு மொய்ம்ப காட்டினை (புறம். 43)

என விளக்குவர். இவ்வாறு எத்தனையோ புலவர்கள் பொது வாக அறங்காட்டி அமைவதோடு, தனித்தனியாக மன்னரை முன்னிறுத்தி, பொது அறநெறிகளை வற்புறுத்தியவை இன்னும் உள. விரிவஞ்சி இவ்வளவோடு அமையலாம்.

அமைதி வாழ்வில் மட்டுமன்றி அறம் அல்லது போர் பற்றிய வாழ்விலும் அறத்தைக் கடைப்பிடித்தவர்கள் தமிழ் மக்கள் என்பதைப் புறம் நன்கு விளக்குகிறது. தொல் காப்பியர் தமிழ்ச் சமுதாயம் போர் விரும்பாச் சமுதாயம் என்ற உண்மையினை முன்னரே கண்டோம். போர்விளையின் அதற்கிடையிலும் அறம் பொன்றலாகாது என்ற அடிப்படை யில் புறம்பாடிய புலவர்கள் பல உண்மைகளை உலகுக்கு ஈந்து சென்றுள்ளனர். அவற்றுள் ஒருசில காண்போம்.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்
'எம்அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்'என
அறத்தாறு நுவலும் பூட்கை (புறம். 9)

என்றே நெட்டிமையார் அறப்போர் நிலையைக் குறிக்கின்றார். இது பற்றிய விளக்கங்கள் பின் இராமாயணத்திலும் பிற இலக்கியங்களிலும் விளக்கப் பெற்றுள்ளன. இந்த அடிப் படை அறநெறி இன்றும் உலகப்போர் பற்றிய விளக்கநுணுக்-

கங்களுள் குறிக்கப் பெற்றுள்ளது. ஆயினும் பின்பற்றுபவர் யார்?

இதுவே யன்றிப் பலபெரும் போர்களும், நாடழிப்புகளும் தனிமனிதர் கொலைகளும் பிற கொடுமைகளும் புலவர்தம் வாக்குகளால் தடுக்கப் பெற்றுள்ளமையை எத்தனையோ புறப்பாடல்கள் அறிவுறுத்தும் செய்திகள் நாடறிந்தவையே. ஏணிச்சேரி முடமோசியார், ஔவையார், கோவூர் கிழார் முதலிய பெரும்புலவர்களால் தடுக்கப்பெற்ற போர்களும் கொடுஞ்செயல்களும் எத்தனையோ அன்றே! இவ்வாறு போராற்றும் பெருமன்னரை வேறுவகை அறத்திலும் அமைதிகாணும் வகையில் புலவர் போற்றுவர். அதுவே இல்லற வாழ்வு.

தமிழ் வேந்தர் போர், போர் என்றே புகுவர் போலும் என எண்ணுவாருக்கு, அவ்வெண்ணம் தவறுடைத்து என்பதைப் பல புலவர்கள் எடுத்துக் காட்டி உள்ளனர் என்பதில் சில மேலே கண்டோம். ஈண்டும் சில கண்டு அமைவோம்.

முதலாவதாக நாம்முன் கண்ட ஔவையார் பாட்டையே காண்போம். இருபெரு வேந்தரை ஒரு சேரக்கண்ட மகிழ்ச்சியில் ஔவையார் அவர்கள் எவ்வாறு வாழவேண்டும் என வற்புறுத்துகின்றார். இருவரும் பிரியாது வாழவேண்டும் என வாழ்த்திய அவர், முதலில் அவ்விருவரும் தம் உரிமை மகளிரோடு இணைபிரியாது வாழ வேண்டும் எனக் காட்டுவர்.

பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டும்இவண் வரைந்த வைகல் (புறம். 367)

என்கின்றார். பிற்காலத்தில் தோன்றிய சில பாடல்கள் தமிழ் நாட்டில் துறவை வற்புறுத்துவதைக் காண்கின்றோம். குழவி இடத்தேதுறந்த நிலையினையும் பல்லென்பு கண்டுபதைப்பதை

யும் காண்கின்றோம். இவையெல்லாம் பிற்காலத்தில் தமிழ் நாட்டில் புகுத்திய கொள்கைகள். புறம் காட்டிய அறம் இல்லறமே. நமக்கென வரையறுக்கப்பட்ட நாட்களில்-வாழ் நாளில்-உரிமை மகளிரோடு வாழ்தலே சிறந்தது என உணர்தல் வேண்டும். உணர்ந்த வள்ளுவர்தான் 'அறம் எனப் பட்டதே இல்வாழ்க்கை' என அறுதியிட்டு உரைத்தார். அறியாதார் பின்பல கூறினும் இந்த உண்மையே அகவாழ் வாக அன்றைய தமிழகத்தில் யாண்டும் நீக்கமற நிறைந் திருந்தமையைக் காண முடிகின்றது.

பெரும்புலவராகிய கபிலர் இவ்வுண்மையைத் தெற் றெனக் காட்டுவர். புகழ்புரிந்த இல்லுடையோரே எல்லா நலமும் உடையவர் என்பதை வள்ளுவர் பலவகையில் விளக்கு கிறார். கபிலர் மலையமான் திருமுடிக் காரியைப் பலவகையில் பாராட்டி அவை அனைத்தும் அவன் கற்பின் செல்வியால் விளைந்தனவே என்பதையும் விளக்கிவிட்டார்.

வடமீன் புரையும் கற்பின் மடமொழி
அரிவை தோள்அளவு அல்லதை
நினதுஎன இலைநீ பெருமிதத் தையே (புறம். 122)

என அவ்வரிவைத் தோள் நலமே இவன் வாளாண்மையும் தாளாண்மையும் பிறவும் வளரக் காரணமாயிற்று எனக் காட்டுகின்றார்.

மற்றொரு பெரும் புலவராகிய நக்கீரர் இவ்வுண்மையை யும் அரசன் மகளிரொடு இணைந்திருக்க வேண்டிய உயர்வை யும் பிணைத்து இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடும் வகையில் பாராட்டுகிறார். அப்பெருமன்னன் அரும் புகழையெல்லாம் தொடுத்துக் காட்டி, அவனைப் பல தெய்வங் களுக்கும் உவமைப்படுத்தி உயர்த்தி, அவன் கொடைத் தன்மையைப் புகழ்ந்து, இறுதியில் அவன் உரிமை மகளிரொடு மகிழவேண்டிய கடமையையும் வற்புறுத்துகின்றார்.

யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற! (புறம். 56)

என்ற அவர் வாக்கு வையத்தை வாழ வைப்பதன்றே! இல்லறத்தின் ஏற்றத்தைப் பாடுவது அன்றே!

இதே அடிப்படையிலேயே பாண்டியன் தலையானங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்டிய மாங்குடி கிழார்,

ஒண்தொடி மகளிர் பொன்கலத் தேந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி பெரும (புறம். 24)

எனப் பாடுவார். இவ்வாறு இல்லற வாழ்வைப் பாடிய புறம் அவ்வாழ்வின் நன்கலனாக அமையும் மக்கள் பேற்றினை யும் பாடாது ஒழியுமோ? ஒரு மன்னன் வாக்கிலேயே மக்கட் பேற்றின் பெருமையை நம்மால் உணரமுடிகின்றது. அவர் பெருமையை உணர்ந்தால்தானே ஏனோ அம் மன்னன் 'அறிவுடைநம்பி' யாகின்றான். இவ்வாறு இல்லறமாகிய நல்லறத்தை ஓம்பி, அதன், அணிகலனாகிய மக்களைப் பெறாதார் பிறந்தும் பயனற்றவர்களே என்பதையும் அவர் வாழ்நாள் வீழ்நாளே என்பதையும் திட்ட வட்டமாகக் காட்டுகிறான். அம்மக்கள் செல்வம் இன்றேல் பிற செல்வங்க ளனைத்தும் பயனற்றன என்கின்றான். அப்பாடலில் அந்த இளஞ் செல்வக் குழந்தைகளில் பல்வேறு பண்புகளை அவன் தொகுத்துக் கூறும்போது நாமும் குழந்தைகளாகி விடு கின்றோம்.

படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெரும் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி

இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழு நாளே (புறம். 188)

என்பது அவர் வாக்கு. எனவே நாடாளும் நல்லறத்துடன் வீடாளும் இல்லறத்தையும் புறம் விடாது காட்டுகின்றது என்பது தெளிவு. இப்படியே ஈகை, கல்வி, அறிவு, பொறை இன்னபிற அறவகைகளையும் எத்தனையோ புறப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. கற்றோர் அறிவார். பல பாடல்கள் இன்று நாட்டில் நல்லவரால் விளக்கிக் காட்டப் பெறுகின்றன. எனவே இந்த அளவில் இன்று நான் அமைகின்றேன்.

புறம் காட்டும் அறம் அளவிறந்தது. அதில் ஒரு துளியே இன்று நான் காட்டியது. காலமும் பிறவும் பொருந்திய கட்டுப்பாட்டுக்குள் அடங்கியவன் நான். எனவே இந்த எல்லையில் நிற்கின்றேன். வாய்ப்பும் வசதியும் ஓய்வும் உணர்வும் உள்ளவர்கள் நூலுள் நுழைந்து தம்மை மறந்து செம்மை நலம் பெறுவார்களாக எனக் கூறி அமைகின்றேன். முடிக்கு முன் ஒரு சொல். இப்புறநானூறு மட்டுமன்றி, புறம் கூறும் மற்றொரு தொகுயாகிய பதிற்றுப்பத்தும், அகப்பொருள் கூறும் பிறதொகை நூல்களும் தத்தம் பொருள்நல விளக்கத்துக்கு இடையிடையே இவ்வாறு மக்கட் சமுதாயத்துக்கு வேண்டிய எத்தனை எத்தனையோ அறநெறிகளையும் நல் உணர்வுக்கு வித்தாகிய பண்புகளையும் காட்டிக்கொண்டே செல்கின்றன. இந்தப் பொது நோக்கின் அடிப்படையில் அவை அமைந்த காரணத்தினால்தான் அவை இன்றும் வாழ்கின்றன என முதலில் குறித்தேன். அதையே முடிவிலும் கூற விழைகின்றேன்.

அறம் என்பது யாது என்றும், அதைப் புறநானூறு எவ்வெவ்வாறு அறுதியிடுகின்றதென்றும், தமிழர் அவ்வறத்தை எவ்வெவ்வாறு எண்ணி எண்ணி நாட்டிலும் வீட்டி

லும் நிலைநிறுத்தப் பாடுபட்டார்கள் என்றும், அவ்வற வாழ்வை மன்னரை முன்னிறுத்திப் பொதுப்படையாக நிலையான அறத்தைப் புலவர்கள் எவ்வெவ்வாறு காட்டினார்கள் என்றும், அதே புலவர்கள் தனித் தனி மன்னரை முன்னிறுத்தி அவ்வறநெறியை எவ்வெவ்வாறு உலகுக்கு உணர்த்தினார்களென்றும், அவ்வறநெறி வீரமும் ஈரமும் செறிந்து எவ்வாறு விளக்கமுறுகின்றது என்றும், அவற்றை உணர்ந்த மக்கள் எவ்வாறு வாழவேண்டுமென்றும், வீரத்தோடு காதலும் இயைந்ததே உண்மையில் அறவாழ்வாகுமென்றும், தமிழர் இல்லற வாழ்வையே செம்மை திறம்பாத அறமாகக் கொண்டார்கள் என்றும், அவ்வாழ்வின் வழியே அவர்கள் உலகை ஒத்து நோக்கித் தமக்கென வாழாப் பிறர்க்குரியார்களாக வாழ்ந்தார்கள் என்றும், நாடும் நாமும் நலம்பெற எவ்வெவ்வாறு நீர் தடுத்தும் நிலம் புரந்தும் வாழ்ந்து அறம் பெருக்கினார்களென்றும், அத்தகைய அற வாழ்வு என்று நாட்டில் மலர்கின்றதோ அன்றே நாடு நாடாகும் என்றும் கண்டோம். அந்நாள் விரைவில் வந்து விளையுள் பெருகிச் சமுதாய வாழ்வின் வெற்றியினையும் உள உரத்தையும் உணர்வு வளத்தையும் உற்ற பல சிறப்பியல்புகளையும் தருவதாக என வாழ்த்தி அமைகின்றேன்.

# 4. தம்மை மறந்த அடியவர்—அமைச்சர்

'என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ' என்று தமக்கும் இறைவனுக்கும் உள்ள நீண்டநாள் தொடர்பையும் தன்மையையும் தாயுமானவர் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். சைவ சித்தாந்த முறைப்படி உலகம், உயிர், ஒன்றுன இறைவன் ஆகிய முப்பொருளுமே என்றும் உள்ளன. முதல்வன் மாருதிருப்பவன்; மற்றவை இரண்டும் மாறி நிலைகெட்டு வரும். எனவே உயிர் இறைவனைச் சிக்கெனப் பிடிக்க அன்று தொட்டு இன்றுவரை முயல்கின்றது. தவத்தால் உயர்ந்த சில உயிர்கள் மிக எளிமையில் தம்மைப் பக்குவப்படுத்திக்கொண்டு இறையருளில் கலக்கின்றன. தம்மைப் பக்குவப்படுத்திய உயிர்கள் தம்மை மறப்பன, அத்தகைய நல்லுயிர் பெற்ற வல்லவருள் வல்லவர் தமிழ் நாட்டில் வாழ்ந்து நம்மையெல்லாம் வாழ்வித்த மாணிக்கவாசக அடிகளாவர்.

தம்மை மறந்தவரே இறைவனைக் காணமுடியும்; உலகத்தில் உண்மையான தொண்டும் செய்ய முடியும்! 'யான்', 'எனது' என்ற பற்றுக்கள் உள்ளவரை ஒரு பணியும் செய்ய இயலாது. தம்மை மறந்தவர் இரண்டையும் விட்டவர். அவரே வீடு அடைவர். 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பர் நம்மாழ்வார். 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்

பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்பர் வள்ளுவர். எனவே தம்மை மறந்தவர் மெய்யடியாராகின்றார். இதையே அப்பர் பெருமானார், இறையடி அடைந்த உயிர்த் தன்மையைக் காட்டவந்தபோது,

> தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
> தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

எனக் கூறினார்.

இத்தகைய தம்மை மறக்கும் பண்பு அனைவர்க்கும் எளிதில்வருவதன்று. வேதாந்த நெறி கூறவந்த வித்தகரும்'உன்னை நீ அறிந்தாயாகில் உனக்கொரு கேடுமில்லை' என்பர். மறத்தலும் அறிதலும் இரண்டும் ஒன்றிலே ஒன்று சென்று முடிவனவே. நமக்கு மேலுள்ள இறைவனே நம்மை இயக்குபவன். நாம் அவன் உடைமை;நாம் அவன் கைப்பொருள்; அவன் ஆட்ட நாம் ஆடுகின்றோம்; நன்மை தீமையும்அவன்வழி வருவன; நமக்கென்? என்ற உணர்வே தம்மை மறக்க வைக்கும். அம்மறந்தநிலையிலேயே பெருந்தொண்டு முகிழ்க்கும். அதுவே உலகத்துக்கு ஒளியாகி வழிகாட்டும். அவ்வாறு வழிகாட்டிய நல்லவர்கள் நாட்டில் எப்போதோ ஒருமுறை தோன்றுவார்கள். அப்பெரியாருள் பெரியாராக விளங்கியவர் மாணிக்கவாசகர். தம் சமயமாகிய கிறித்தவ சமயத்தைப் பரப்ப வந்த 'போப்' பாதிரியாரைத் தம் பக்கல் ஈர்த்து அவரை மறக்கச் செய்த இவர் பாடல்களே இவர் பெருநிலைக்கு ஒரு சான்றாகும்.

மாணிக்கவாசகர் பாண்டியனுக்கு அமைச்சராக இருந்தவர். எனவே இன்றைய தலைப்பை இட்டுள்ளேன். அமைச்சுத் தொழிலில் வல்ல மணிவாசகர் எப்படித் தம்மை மறந்தார்? ஏன் மறந்தார்? பயன் என்ன? என்ற வினாக்களுக்கு விடை காணின் முடிவு தெளிவுறும்.

மாணிக்கவாசகர் திருவாதவூரில் பிறந்தவர். அவர் முன்னோர் அமைச்சராக இருந்துள்ளனர். எனவே பாண்டியன் அரிமருத்தனன் இவரை அமைச்சராக ஏற்றுக் கொண்

டான். இவர் பெயருக்கு அமைச்சர் என்று பதவி வகிக்க வில்லை. பாண்டிய மன்னனுக்கு இவர் வருமுன்னமேயே பலர் அமைச்சர்களாக இருந்தனர்; எனினும் இவர் அறிவும் ஆற்றலும் அறிந்த மன்னன், இவரை வலிய அழைத்து அமைச்சராக்கினன். இவர் தம் திறனும் செயலும் சிறக்க நின்ற காரணத்தால் முதல் அமைச்சர் பதவியை எளிதில் பெற்றுயர்ந்தார். அமைச்சரில் முதன்மை பெற்ற வாதவூரர் தம்மை மறந்த அடியவருள்ளும் முதன்மையுற்று விளங்கினர்.

அரசனுக்கு உற்ற அமைச்சராகப் பணியாற்றியபோதும் மணிவாசகர் ஆண்டவனிடத்தில் இடையருத அன்பு செலுத்தி வந்தார். தமக்கென நெருங்கிய சுற்றத்தார் ஒருவரும் இன்மையின், அரச காரியங்களைக் கவனித்தது போக, மற்ற வேளைகளில் ஆண்டவன் திருப்பணிகளிலேயே சிந்தை வைத்திருந்தார். அத்திருப்பணியின் காரணமாக அரச காரியங்களுக்கு இடையூறு நேருவண்ணம் தம் கடமைகளை ஒழுங்காகச் செய்துவந்தார். அதனுலேயே அவர் அரசனுக்கு உற்றவராக இருக்க முடிந்தது. அந்த நிலையில்தான் குதிரை வாங்கி வரப் பெருந்துறைக்குச் செல்ல நேர்ந்தது. அக்காலத்தில் பாண்டிய நாட்டின் பெரிய துறைமுகமாக இருந்த காரணத்திலுலேயே அவ்வூர் பெருந்துறை எனப் பட்டது போலும். பிறகு நடந்த கதை அனைத்தும் நாடறிந்தனவே. எனவே இங்கே நான் அவைபற்றி விளக்க வேண்டா. ஒன்றை மட்டும் கூறி மேலே செல்கிறேன். பெருந்துறையில் அவர் கட்டிய கோயில் பாண்டிய மன்னன் குதிரை வாங்கக் கொடுத்த பணத்தால் ஆயது என்ற ஒன்றை மட்டும் நான் மறுப்பது கடமையாம். அவரது சொந்தப் பணத்திலேயே அக்கோயில் எழுப்பப்பட்டது. அது பற்றிய விளக்கம் ஈண்டைக்குத் தேவை இல்லை. ஒன்றை மட்டும் சுட்டிக் காட்டுவேன். அறநெறியும் தெய்வ நலமும் பொருந்திய பாண்டிய மன்னன் மணிவாசகரின் புகழ் கண்டு பொறாமை உற்றமையாலேயே எல்லாக் கொடுமைகளும்

நடைபெற்றன என்பது தெளிவு. (இதுபற்றி விளக்கமாக நான் வேறு நூலில் காட்டியுள்ளேன்.) அவர் பாண்டியன் பொருளைக் கொண்டு நெறியல்லா நெறிநின்று கடமை மறந்து அக்கோயிலைக் கட்டியிருப்பாராயின் அக்கோயில் என்றோ அழிந்திருக்கும்; அவர் பாடல்கள் என்றோ மறைந்திருக்கும்; அவரும் உலகில் இத்துணைநாள் வாழ்ந்திருக்க மாட்டார். எனவே அவர் புகழ் வாழக் காரணமான கோயில் வழியே பிற வரலாறுகள் அமைகின்றன எனக் கூறி மேலே செல்லலாம்.

மாணிக்கவாசகர் பெருந்துறைக்குச் சென்றபோது, இறைவன் வலிய வந்து ஆட்கொண்டான். திருவாசகம் முழுதும் பெரும்பாலும் அவரது வரலாற்றைக் கூறும் சுய சரிதம் என்னுமாறு அமைந்துள்ளது. அவர் வாழ்வில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளையும் இறைவன் தம்மை ஆட்கொண்ட அருட் டிறத்தையும் தம் பாடல்களுள் பலவிடங்களில் விளக்கியுள்ளார்.

இறைவன் இவர் பொருட்டாகத் தாமே வலிய வந்து குருந்த மரத்தின் கீழே காட்சி தந்ததும், இவருக்காகக் குதிரைச் சேவகனாக வந்ததும் பிரம்படி பட்டதும் பிற வரலாறுகளும் நாடறிந்தனவே. அவற்றை நேரிலே கண்டு தம்மை மறந்த மாணிக்கவாசகர் தம் வாயாலே பாடுகின்றார். அவர் வாக்கிலேயே காணலாம்.

தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய் (7-6)

என இறைவன் தானே வலிய ஆட்கொண்ட வள்ளலான தன்மையை விளக்குகிறார். தாம் அவனைக் காணும் அறிவும் அருளும் பெற்றிராத நிலையிலும் வந்து அருளிய பெருமையை வியந்த அடிகளார்,

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகே னாயிடினும்
மற்றறியேன் பிறர்தெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்து

உற்றிருமாந் திருந்தேனெம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே (38-5)

என்றும்,

என்பாலைப் பிறப்பறுத்திங்கு இமையவர்க்கும் அறிவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பால்நீ அகநெகவே புகுந்தருளி ஆட்கொண்டது
என்பாலே நோக்கியவாறு அன்றேஎம் பெருமானே (38-7)

*என்றும் போற்றுகின்றார். இறைவன் குதிரைச் சேவகனாக வந்து ஆண்ட பெருமையை,*

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரைமேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கி (8-20)

*என்றும்,*

மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லிக் கொய்யாமோ (13-20)

*என்றும்,*

நன்பொன் மணிச்சுவ டொத்தநற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றும் குயிலே கோகழி நாதனைக் கூவாய் (18-6)

*என்றும் காட்டுவர். அவ்விறைவன் பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியனால் அடிபட்ட திறத்தை எண்ணி நைந்து அவர் உள்ளம்,*

கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் (8-8)

என்றும் இன்னும் பலவகையிலும் பாடிப் பரவுகின்றது. இவ்வாறு அவர்தம் வாழ்க்கை வரலாறு-இறைவனொடு தொடர்பு பொருந்திய வரலாறு-அவர் வாயாலேயே பல விடங்களில் பாடப் பெறுகின்றது. விரிவஞ்சி மேலே செல்லலாம்.

இறைவன் தம்மை ஆட்கொண்ட திறத்தினை வியக்கின்றார் அடிகளார். அப்பாலுக்கப்பாலாக உள்ள ஆண்டவன்—அரி அயன் என்னும் பெருந் தெய்வங்கள் தேடியும் காணா இறைவன்-'நாயிற் கடையாம் நாயே' யாகிய தம்மை ஆட்கொண்ட அருட் டிறனை எண்ண எண்ண அவர் உள்ளத்தில் அற்புதமும் அதிசயமும் ஆனந்தமும் பிறக்கின்றன. அந்த வேறுபாட்டை எண்ணி எண்ணிப் பார்க்கின்றார். அவ்வெண்ணங்களுக்கிடையில் பலப் பல பாடல்கள் உருண்டோடி வருகின்றன. அவற்றுள் ஒருசில காண்போம்.

அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅது
ஆண்டான் அங்கோர் அருள்வழி இருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி யாண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும் (2-35-47)

என்று நாம் இதுவரை கண்ட எல்லாவற்றையும் இணைத்துப் பாடியுள்ளார். மேலும்,

அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும் (2-115-116)

வான்வந்த தேவர்களும் மாலயனே டிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு
ஊன்வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் (8-4)

நான்தனக் கன்பின்மை நானும்தா னும்அறிவோம்
தான்என்னை ஆட்கொண்ட தெல்லாரும் தாமறிவார் (10-13)

என்று, பலவாறு இறைவன் தம் எளிய நிலைமையிலும் எவ்வாறு வந்து ஆட்கொண்டார் என்று விளக்கிக் காட்டும்போது, நாமும் அவர்போல் நம்மை மறந்து அவனருள் வேண்டி நின்றால், தானே வந்து அருளாதொழிவனோ என உள உரம் தோன்றுகின்றதன்றோ?

இவ்வாறு ஆட்கொண்ட இறைவனிடம் மாணிக்கவாசகர் அடிக்கடி தம்மை விட்டுவிடுவானோ என்ற ஐயம் கொள்ளுகின்றார். ஒருமுறை குருந்த மரத்தினடியில் குருவாகி அருள்செய்து ஆட்கொண்டு, பின் மறைந்த அடிப்படையில் அவர் உள்ளத்து அச்சம் எழுவது இயல்புதானே? அந்த அச்சத்தின் காரணத்தினாலேயே அவர் நீத்தல் விண்ணப்பத்தைப் பாடுகின்றாரோ என நினைக்க வேண்டியுள்ளது. 'விட்டிடுதி கண்டாய்' என்று ஐம்பது பாடல்களிலும் இறைவனை நோக்கிக் கேட்டு முறையிடும் நிலையில் அவரது உள்ளம் நமக்கு நன்கு புலப்படுகிறது. இந் நீத்தல் விண்ணப்பத்தில் அவர் இறைவனோடு சதிராடும் பல பாடல்கள் சுவைமிக்கன. தமது உதவியற்ற தன்மையை அவர் 'என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றி நின்று எய்த்தலைந்தேன்' என்றும், 'மற்றடியேன் தன்னைத் தாங்குநர் இல்லை' என்றும், 'அறியாச் சிறியேன் பிழைக்கு அஞ்சல் என்னின் அல்லால் விரைசேர் முடியாய் விடுதி கண்டாய்' என்றும் காட்டி விடாது பற்றிக் கொண்டு அருட் கருணையைக் காட்டவேண்டுமெனக் கூறுவர்.

அவ்வாறு விடாது காக்க வேண்டிய கடன் இறைவனுடையது என்றும், காக்கக் கூவிய அவன் காவா விட்டால் அவனுக்கே பழிசார நிலை நிற்கும் என்றும் கூறுவர். மேலும் அவன் காவா விட்டால் உலகத்தார் முன் அவனைத் தாம் பழிக்கப் போவதாகவும் கூறுகின்றார். அவ்வடிகளில் அடிகளாரது சொல்லழகும் பொருளழகும் நன்கு புலப்படும். இறைவன் தம்மைக் கைவிடுவானாயின், அவனைக் கண்டனென்றும், குணமிலி யென்றும், தேய்ந்த மதியுடையவன் மானிடன் என்றும், மாபரனென்றும் பழிப்பதாகக் கூறுகின்றார்.

விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென் றறைவன் பழிப்பினையே (6-46)

என்ற சொற்களில் இருபொருள் தொக்கி நிற்பதைக் காணல் இலக்கிய நயம் பயப்பதாகும். மேலும் வலிய வந்து காத்த இறைவன் கைவிடுவானாயின் அவனைத் தாம் எவ்வாறு பழிப்பிப்பார் என்பதை,

ஆரடி யானென்னின் உத்தர கோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே (6-48)

என்றும்,

விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ் சூண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப் பிச்சன்என் றேசுவனே (6-49)

என்றும் பல்வேறு வகையில் பாடுகின்றார். இவற்றால் நாம் இவருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினையும் அருட்பிணைப்பினையும் எண்ணி எண்ணி மகிழ்ந்து இவரது 'தம்மை மறந்த நிலை'யினையே போற்ற வேண்டியுள்ளது.

இறைவன் தம்மை எவ்வாறு எப்போது வந்து எவ்வகையில் ஆட்கொண்டான் என்ற உண்மையை,

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்துஎன் உளமன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே
(31-3)

என்றும்,

சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறர்உருவம் யான்எனதென் உரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே (31-5)

என்றும் காட்டுகின்றார். இவையும் அடியார்தம் வாழ்க்கை வரலாற்றைக் காட்டுவதோடு, இறைவன் மெய்யடியார் பொருட்டு எவ்வெவ்வாறு வந்து அருள் செய்வான் என்ற அருட்டிறனையும் நன்கு விளக்குகின்றனவன்றோ?

மணிவாசகர் உவமை வாயிலாகவே பல உண்மைகளை விளக்க வல்லவர். அவ்வுவமைகளும் மிக மிகப் பொருத்தமானவையாகவே இருக்கும். நூல் முழுதும் எண்ணற்ற உவமைகளை இவர் எடுத்தாண்டுள்ளார். அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டுக் காணல் பொருந்துவதாகும்.

அறியாப் பருவத்து அறியா நிலையில் ஆண்டவன் தம்மை வந்து ஆட்கொண்ட நிலையினையும், அவன் பெருமை அறியாத சிறுமையின் காரணத்தாலேயே தாம் அவ்விறைவனைத் தவற விட்ட தன்மையினையும் எண்ணிப் பார்க்கிறார் அடிகளார். அவருக்கு ஓர் உவமை தென்படுகிறது. அறியாச் சிறு குழந்தை; மண்ணுக்கும் பொன்னுக்கும் வேறுபாடு தெரியாத குழந்தை. தாய் அதன் கையில் பொற்கிண்ணத்தைத் தருகிறாள். குழந்தையோ வேடிக்கை என்றும் விளையாட்டு என்றும் எங்கோ கருத்தைச் செலுத்துகின்றது. அதன் கவனக் குறைவால் பொற்கிண்ணம் இழக்கப் பெறுகின்றது. அறிந்த தாய் அறியாக் குழந்தையை அது பற்றிக் கடிந்து கொள்வாளோ? இவ்வளவையும் எண்ணிய அடிகளார் உள்ளம்,

மைஇ லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழுக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை என்றுனைக் கருது கின்றிலேன் (5-92)

என எண்ணிப் பாடுகிறது.

'இருதலைக் கொள்ளி எறும்பு' என்பது யாரும் சொல்லும் உவமை. இதில் சிறப்பு உண்டோ என எண்ணிப் பார்க்க வேண்டும். இருபக்கம் நெருப்பு-இடையில் அக்கோலில் எறும்பு. அது தப்பிச் செல்ல முடியாது வருந்துகிறது என்பர். அது ஏன் வருந்த வேண்டும்? அக்கொம்பு எங்காவது பொருத்தப்பட்டுத்தானே இருக்கவேண்டும்? அதன் வழியாக அது மெள்ள இறங்கிச் செல்லலாமே? கட்டியிருந்தாலும் கயிற்றின் வழியே ஏறிச் செல்லலாமே? பின் அது வருந்தக் காரணமில்லை. எனவே இவ்வுவமை சிறக்க வழியில்லையே. மணிவாசகர் இவ்வுவமையினையே எண்ணிப் பார்க்கிறார். உண்மை புலப்படுகிறது. ஒரு மூங்கில் குழாய் உள்ளே எறும்பு-அதன் இருபுறமும் தீ. இப்போது அது எங்கே செல்ல இயலும் என எண்ணுகிறது அவர் உள்ளம். அவ்வெறும்பு போன்ற தம் நிலைக்கு இரக்கப்பட வேண்டுமென இறைவனை வேண்டுகிறது.

இருதலைக் கொள்ளியின் உள்எறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய் (6-9)

என்பது அவர் வாக்கு,

இறைவனுக்கும் தமக்கும் உள்ள தொடர்பினை நினைக்கும் அவருக்குத் தாய், சேய் இவர்தம் பற்றும் உறவும் பளிச்சிடுகிறது. எங்கோ பணிபுரியும் தாய் குழந்தை அழும் ஒலி கேட்டு ஓடிவந்து பாலூட்டுகிறாள்; அன்றி வேளையறிந்து பாலூட்டுகிறாள். ஆம்! இறைவனாகிய தாயும் இவர்

இளமைத் தன்மையும் நேரமும் அறிந்து ஆட்கொண்டா ரல்லரோ? இரண்டையும் பிணைத்து,

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து (37-9)

என இறைவனைப் பாராட்டுகின்றார்.

இதே கருத்தை மற்றோர் இடத்தில் 'கன்றை நினைந்தெழு தாய்' (49-2) எனக் காட்டுகின்றார். தம்மைத் 'தோளாச் சுரை' (32-10) என உவமைப் படுத்துகின்றார்.

அன்னத்தின் மேலேறி ஆடும் அணிமயில்போல்
என்னத்தன் என்னையுமாட் கொண்டான் (16. 7)

என்ற உவமையால் இறைவன் ஆட்கொண்ட திறத்தினைக் காட்டுகின்றார். இன்னும் தாம் தையலார் மையலிலே சார்ந்து விழ இருந்த நிலையினைப் பல உவமைகளால் காட்டுகிறார். அப்பெண்கள் இயற்கை நலன்களைக் காட்டும் உவமைகளும் சிறந்தன.

காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய்
வேருறு வேனை (6. 3)

என்று தம் நிலையை உவமையால் விளக்கிய ஆசிரியர் மகளிர் இயற்கை நலன்களை,

கொழுமணி ஏர்நகை யார்கொங்கைக் குன்று (6-27)

வலைத்தலை மானன்ன நோக்கியர் (6-40)

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழம் (6-46)

எனப் பலவகையில் உவமை உருவகங்களால் விளக்கி அவற்றி லிருந்தெல்லாம் தம்மைக் காத்த தனித் தன்மையைப் பாராட்டுகின்றார். இவ்வாறு இவர் உவமைகள் எண்ணி எண்ணி மகிழற்பாலன. உள்ளன பல; காட்டியன மிகச் சிலவே.

இப்படியே மணிவாசகர் பல பழமொழிகளையும் எடுத் தாளுகின்றார். ஓரிரு காட்டுக்கள் போதும்.

பொறுப்பரன் றேபெரி யோர்சிறு நாய்கள்தம்
பொய்யினையே (6-6)

மெள்ள வேமொய்க்கும் நெய்குடந் தன்னை எறும்பு (6-24)

எறும்பிடை நாங்கூழ் (6-25)

பலாப் பழத்து ஈ (6-46)

என்பன சில.

இவ்வாறு இலக்கியம் பாடும் பல புலவர்கள் போன்று மணிவாசகர் தம் திருவாசகத்தை இலக்கியப் பூங்காவாக அமைக்கின்றார் என்பதனோடு அமையாது, இவை அவரைத் 'தம்மை மறந்தார்' என்பதை எப்படிக் காட்டுகின்றன என் பதையே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மணிமொழி யார் திருவாசகமே யன்றித் திருக்கோவையாரையும் பாடினார் என்பர். அக்கோவையாரைப் பற்றிப் பின் எழுந்த ஒரு பாடல் அதன் சிறப்பை நன்கு உலகம் உணரச் செய்கிறது. அதே பாடலின் கருத்துத் திருவாசகத்துக்கும் பொருந்துவ தாகும்.

ஆரணங் காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் நூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே

என்பது கோவையாருக்குரிய பாயிரம். இதே கருத்துத் திருவாசகத்தில் பெண்கள் கலந்து பாடுவது போன்று

அமைந்த பாடல்கள் பல. தங்கட்கு நல்ல கணவரைத் தேடித் தர ஆண்டவனை வேண்டிக்கொள்ளும் இடங்களும் உண்டு. அவர்கள் ஆடியும் பாடியும் அசைந்தும் ஒசிந்தும் கூடியும் குலவியும் பாடும்போது பெண்மைப் பொலிவு நன்கு விளங்குகின்றது. ஆயினும் அவர்தம் உள்ளம் அனைத்தும் இறைவனையே சார்ந்து நிற்கின்றன.

உயிர்கள் அனைத்தும் பசுக்களாகவும் இறைவனைப் பதியாகவும் காண்பது சைவ சித்தாந்தம். எனவே இறைவன் பசுபதியாகின்றான். இந்த நிலையில் உயிராகிய தம்மை, மாணிக்கவாசகர் பசுவாக்கிக் கொண்டதோடன்றி, உலக உயிர்களெல்லாம் உய்யவேண்டும் என்ற பெருங் கருணையால் எல்லா உயிர்களையும் பெண்பால் அமைப்பில் பசுக்களாக்கிப் பாட வைக்கின்றார்—பேசவைக்கின்றார்—ஆட வைக்கின்றார். அவற்றின் முடிவு எல்லையற்ற இறைவனோடு கலக்கும் பேரின்பமேயாம்.

மனித உயிர்களை மட்டுமன்றி வண்டையும் கிளியையும் குயிலையும்கூட அழைத்து, 'தாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக' என்ற தழைத்த நோக்கினாலே, அவற்றையும் இறை பணியில் ஈடுபடுத்துகின்றார். கிளியை அன்புடன் 'ஏரார் இளங் கிளியே' என அழைத்து, அதன் வாயால் இறைவனுடைய திருத்தசாங்கத்தை விளங்க வைக்கின்றார். குயிலை அழைத்து 'இன்பம் தருவன்' என்று ஆசையும் அன்பும் காட்டி இறைவன் வரக் கூவ வேண்டும் எனக் கட்டளை இடுகின்றார். எங்கோ பறந்தோடும் வண்டினை அழைத்து நினைக்க நினைக்க இனிக்கும் இனிய தேன் ஆற்று வெள்ளமாகிய இறைவனடியிடம் அதை ஆற்றுப்படுத்துகின்றார், அவற்றுள் ஒவ்வொன்று காணலாம்.

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய்—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான்தே வர்பிரா னென்று (19-1)

என்று கிளியையும்,

தேன்பழச் சோலை பயிலும் சிறுகுயி லேஇது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் உணர்வது வாய ஒருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கி மணாளனை நீவரக்
கூவாய் *(18-4)*

*என்று குயிலையும்,*

தினைத்தனை உள்ளதோர் பூவினிற் றேன்உண் ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ *(10-3)*

*என்று அரசவண்டையும் ஆற்றுப்படுத்துகின்றார். பறவையும் வண்டும் விலங்கும் பிறவுயிர்களும் அவர்தம் அருள் நோக்கால் நலம் பெற்று நனி சிறந்து விளங்கியிருக்கும் என்பதில் ஐயமுண்டோ?*

*'தாமின் புறுவது உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்' என்பது திருக்குறள். எனவே இறைவனை அறியும் கல்வி நலம் சான்ற பெரியவர்கள் 'தாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக' என்ற எண்ணத்திலே அனைவரையும் தழுவிச் செல்வர். இறையருள் பெற்ற நல்லவர்கள் அவ்வருள் நலத்தைத் தாமே துய்த்து மற்றவரை வாட வைக்க மனம் கொள்ளாதவர்கள். ஒரு படி மேலே சென்று, தாம் வாடினும் பிறரை வாழவைக்க வேண்டும் என்பதே அவர்தம் குறிக்கோள். தாயுமான அடிகள் இறையருள் பெறுவதற்கு, 'சேரவாரும் சகத்தீரே' என அனைவரும் ஒரு சேர வர வேண்டும் என அழைக்கின்றார். எனவே நம்மணி மொழியாரும் அதற்கு விலக்கானவரன்றே? அவர் உலகத்தவரைத் தக்க காவலோடு வரச் சொல்லுகின்றார். அமைச்சரன்றோ அவர்! எனவே உலக நிலையில் இறைவனை அடைய உயிர்களைக் கவசமிட்டுக் கொள்ளச் சொல்லுகின்றார்; வாளேந்தச் சொல்லுகின்றார்; பறையறையச் சொல்லு*

கின்றார். மாயையாம் பொய்ப் படையற்று, மாறாத பேரின்ப உலக ஆட்சிக்கு உயிர்களைத் தயார் செய்து கொள்ளத் தூண்டுவதை அவர் வாக்கிலேயே காணலாம்.

ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே (46-1)

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்கள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்டிறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே (46-2)

இவற்றைப் பார்க்கும் அடிகளார் முதலமைச்சராக இருந்தது மட்டுமன்றி, போர்ப்படை அமைச்சராகவும் தளபதியாகவும்கூட இருந்தாரோ என நினைக்க வேண்டி உள்ளது அல்லவா? இவ்வாறு போர்ப்படை திரட்டும் பேரருளாளராகிய மாணிக்கவாசக அடிகளார் காலம் கருதி வினை முடிக்கும் செயல் வல்லவர் என்பதை மற்றோர் இடத்தில் அவரே விளக்குகின்றார். 'ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தால் செயின்' என்ற அரசியலில் கைவரப்பெற்றவ ரன்றோ அடிகளார்? அவ்வரசியல் நெறியை இறைவன் அருளியல் நெறியினும் பெய்து காண்கின்றார். இறைவன் அருளாளனாக வந்து, தாமே ஆண்டுகொண்டு அருளும் காலத்தில் நாம் வாளா இருந்தால் பயன்பெற முடியாது என்றும் உயிர்கள் அக்காலங் கருதிக் காதல் செய்யின் அரியொடு பிரமற்கு அளவறியாத அத்தடங்கருணைப் பெருங் கடல் அஞ்சலென அருள் செய்யும் என்றும் காட்டும் வகையில்,

காலமுண் டாகவே காதல்செய்து உய்மின்கள் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய

ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே *(36-5)*

என்று காட்டுகின்றார். ஈண்டுக் காலம் என்ற சொல்லைப் பற்றிச் சிறிது கருதல் வேண்டும் என எண்ணுகின்றேன்.

தமிழில் காலம் என்னும் சொல் தொன்மை வாய்ந்தது. பொழுது என்ற ஒரு சொல்லும் உள்ளது. மணிவாசகர் இறைவனைக் 'காலமே' என அழைக்கின்றார். ஒன்றுக்கு மேற்பட்ட இடத்திலே இறைவனை இவர் இவ்வாறு வருணிக்கின்றார். அதன் கருத்தென்ன? இறைவன் 'பொழுதொடு படராப் புண்ணியன்' என்பதையும் இவர் காட்டத் தவறவில்லை. எனவே இவர் 'காலத்'தில் கண்டதென்ன ?

தமிழில் காலம், பொழுது என்ற இரண்டும் நேரத்தைக் குறிக்க வருவன. ஒன்று வரையறுக்கப்படாதது; மற்றொன்று வரையறை செய்யப்பெற்றது. ஆங்கிலத்தில் '*Time*', *Duration* என்ற இருசொற்கள் உள்ளமைபோன்று இவற்றைக் கொள்ளலாம். தமிழ் இலக்கிய இலக்கண மரபில் பெரும் பொழுது, சிறுபொழுது என இருவகைப் பொழுதுகள் உள்ளமையைக் காண்கின்றோம். ஆனால் அவை காலமெனப் படுவதில்லை. எனவே மக்கள் எண்ண எல்லைக்குட்பட்டு அவர்களால் வரையறுக்கப்படுவனவெல்லாம் பொழுதாகவும் எல்லையற்று யாராலும் வரையறை செய்யப்படாததாய், அறிதோறறியாமை கண்டற்றால் விரிந்து விரிந்து வளர்ந்து வளர்ந்து செல்வதைக் காலமாகவும் நம்முன்னோர் கணக்கிட்டனர் எனக் கொள்ளல் பொருத்தமானதாகும். அக் கால எல்லையில் இந்த ஞாலமும் பிறவும் வந்து வந்து போகும் என்பதைச் சிலர் காட்டுவர். ஆண்டவன் அக்காலத்தைப்போல் 'கால காலனா'க உள்ளமையின் மாணிக்கவாசகர் அவ்விறைவனைக் 'காலமே' என அழைத்தல் பொருந்துவது தானே? அவர் வாய்மொழியைக் காண்போமா?

மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மேஎனை ஆட்கொண்ட கூத்தனே

ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேஉனை என்றுகொல் காண்பதே (5-43)

கோல மேனிவ ராக மேகுண மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும்அ றிந்தி லாதஎன் சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யாக நான்உனை நச்சிட வந்திடும்
கால மேஉனை ஓத நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே (30-5)

என்னும் இறைவனையே காலமாகக் காட்டி, அக்காலமுண்டாகக் காதல் செய்யுமாறு நம்மையும் தூண்டி வையத்தை வாழவைத்த தம்மை மறந்த அடியவர் பெருமை தரணியில் காலம் உள்ளளவும் வாழும் என்பது உறுதியன்றோ?

இராவணன் இறையருள் பெற்றவன். பெற்ற வரத்தால் பின் பிழைகளைச் செய்தான் எனக் காண்கின்றோம். எனினும் அவன் மனைத்தலைவி மண்டோதரி தன் கணவனை எல்லா வகையிலும் திருத்த முற்படுகிறாள்; ஆயினும் வெற்றி பெறவில்லை. அவன் வாழ்வும் வளமும் அம்மங்கை நல்லாள் தூய சிந்தையாலே சிறந்துள்ளன என அறிகிறோம். இலங்கையை நாடிச் சென்ற அனுமன் மண்டோதரியைக் கண்ட போது 'அவளோ சீதை' என ஐயுறும் வண்ணம் அவள் உறங்கும் காலத்தும் அவள் உள்ளொளியும் முகப்பொலிவும் தோன்றுவதாகக் கம்பர் காட்டுவர். அவளுடைய அற வாழ்வுக்கு இறைவன் அருள் செய்தான் என்ற உண்மையினை மாணிக்கவாசகர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறித்துள்ளமையையும் ஈண்டு எண்ணல் நன்று. இராவணன் எத்துணை மாறுபட்டவனாயினும் அவனது சிவபூஜைக்கு யாரும் இழுக்குக் கூறிற்றிலர். அவன் வாழ மண்டோதரி இறைவனை வழிபட்டு உண்மை மனைத்தலைவியாக இருந்தாள். அவள் வேண்டுகோளை இறைவன் நிறைவேற்றி அருள் புரிந்தான் என்கின்றார் மாணிக்கவாசகர். இந்த இடமும் சூழ்நிலையும் எந்த வகையில் பொருந்துவன என்பது நமக்குப் புரியாவிடினும் இராவணனுக்குப் பெருவரம் அளித்த பெம்

மான் அவன் மனைவிக்கும் பேரருளின்பமளித்தான் என்பது இங்கு அறிய வேண்டுவதாகும். இக்கருத்தை வேறு யாரும் இராமாயணம் பாடியவர்களும்கூடச் சொல்லாத காரணத் தால், நான் இங்கே குறிக்க விரும்பினேன்.

ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வும்தன் உருவாய்
ஆர்கலி சூழ்தென் இலங்கை அழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய் *(18-2)*

என்றும்,

பெருந்துறை ஆதிஅந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்தன்று ஓங்கு மதில்இலங் கையதனில்
பந்தணை மெல்விர லாட்கருளும் பரிசறி வார்எம்பி ரானாவாரே
*(43-5)*

என்றும் இறைவன் மண்டோதரிக்கு அருளிய அருள் நலத் தைப் பாராட்டி, அவ்வருட்டிறனை உணருவார் 'எம்பிரானா வார்' என்று ஏற்றமும் தந்து பாடியுள்ளார். இவ்வாறு இலக்கிய நலமும் வரலாற்றுச் செறிவும் மட்டுமன்றி அறி வியல் துறைகளிலேயும் மணிவாசகர் உண்மைகளை உரைத்து அவற்றின் வழி மெய்ஞ்ஞானம் அரும்ப வழிவகை காண் கின்றார். அவற்றுள் ஓரிரு நிலைகண்டு மேலே செல்லலாம்.

கடவுளையும் அவர்தம் பரந்த நிலையையும் நம்மையும் நம் உலகில் மிகமிகச் சிறு நிலையையும் எண்ணிய மாணிக்க வாசகர் இரண்டையும் உவமை வாயிலாகக் காட்டுகின்றார். இவர்தம் உவமையின் ஏற்றத்தை முன்னமே கண்டுள்ள நமக்கு இதுவும் அவர் திறனை விளக்க உதவுவதாகும். திருவண்டப் பகுதியிலே உலகத் தோற்றத்தைக் கூறுமுகத் தான் அவற்றின் விரிவையெல்லாம் கூறி அவற்றுள் மிகமிகச் சிறியதாகிய உலகில் வாழும் நம் நிலையினையும், இதுபோன்ற எத்தனை எத்தனையோ வகையான எல்லையற்ற உலகங்களைக்

காத்தும் படைத்தும் கரக்கும் இறை நிலையினையும் அவ்விரண்டுக்கும் உள்ள பெரு வேறுபாட்டினையும் உணர்ந்து இறை உணர்வுகொள்ள வேண்டும் என்பதே அவரது அவா. இதுபற்றி முன்னரே நான் வேறொரு நூலில் விளக்கியுள்ளேனாதலால் ஈண்டு அதிகமாகக் காட்ட விரும்பவில்லை. அவ்வடிகளை மட்டும் உங்கள்முன் வைத்து மேலே செல்கின்றேன்.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் (3, 1-6)

என்று அவர் இந்த அண்டகோளங்கள் அத்தனையும் உள்ளடக்கிய பேரண்டம் வீட்டு முழையில் காணும் சிறு அணுவை ஒத்தது எனக் காட்டி மிகச் சிறியனவாகிய இப் பேரண்டங்கள் எண்ணற்றன இருக்க, இவையெலாம் கடந்து அப்பாலுக்கப்பாலாக உள்ள பெரியோன் இறைவன் என்கிறார். ஆம்! அதே இறைவன்தான் மெய்யடியவராகிய தம்பொருட்டு மதுரை மாநகரில் மெய்யுருக்காட்டி விளையாடினார் எனவும் குறிக்கின்றார். இந்த அடிகளில் உலகம் உருண்டை என்ற அறிவியல் ஆய்வையும் அன்றே இவர் விளக்கியிருக்கும் தன்மை வியக்கற்பாலது ஆகும்.

இவ்வாறே உலகம் ஐம்பெரும் பூதங்களால் ஆகிய தன்மையினையும் அவை ஒன்றனுள் ஒன்று அடங்கி, இறுதியில் பரம ஆகாயத்தில் இரண்டறக் கலந்து நிற்கும் தன்மையினையும், அப்பஞ்சபூத ஒடுக்கம் எப்படிப்பட்டது என்பதையும் எவ்வாறு அடங்குகின்றன என்பதையும் விளக்கிக் காட்டுகின்றார்.

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி

தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி (4. 137-4)

என்று ஐம்பூத ஒழுக்கங்களைக் காட்டுவர். இவற்றில் வரும் வினைகள் தனித்தனித் தன்மை உடையன. இவை பற்றிய விளக்கங்களையெல்லாம் மறைமலை அடிகள் முதலிய அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள். ஈண்டு அப்பெருவிளக்கங்கள் தேவை இல்லை.

இவ்வாறே கூர்தலறமாகிய (*Evolution*) உயிர்த்தோற்ற வளர்ச்சியை மாணிக்கவாசகர் அன்றே கண்டு விளக்கியுள்ளார். 'புல்லாய்ப் பூவாய்' எனத் தொடங்கும் முதல் அகவலின் அடிகள் அனைவருக்கும் அறிமுகமானவைதாம். எனவே அவற்றை விட்டு மேலே செல்கிறேன். இவ்வாறு 'எல்லாப் பொருளும் இதன்பால் உள' என்ற நிலை உடைய 'திருவாசகத்தை' யாரோ சிலர் பண்டாரப் பாட்டு, சாவுப் பாட்டு எனப் பேசுவர். ஆம்! உண்மை உணர்ந்து தம்மை ஒறுத்து உலக நலத்துக்குப் பாடுபட மக்களைச் செலுத்துவதனாலே அப்பெயர்களும் இதற்குப் பொருந்தும் போலும்.

இவ்வாறு பல வகையில் ஏற்றமுற்ற பாடல்களைக் கண்ட நாம் அவரை மறந்த நிலையில் பாடிய பாடல்கள் வழியே இக்கருத்துக்களைக் கண்டோம். இனி அவர் அம்மறந்த நிலையில் தமக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினையும், பிற நிலைகளையும் எவ்வெவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார் என்பதைக் கண்டு அமைவோம். திருவாசகத்தின் ஐம்பத்தொரு தொகுப்பிற்கும் தலைப்பினை எழுதியுள்ளமை அறிவோம். அவற்றை எழுதினவர் மாணிக்கவாசகராக இருக்க மாட்டார் என்பது துணிபு. யார் எழுதினவராயினும் அவர் நம் பாராட்டுக்கு உரியவராவர். 'சிவனது அனாதியான முறைமையான பழமை' தொடங்கி 'அனுபவவழி அறியாமை' வரை அமைந்த அந்த ஐம்பத்தொரு தலைப்புக்களும் மணிவாசகர் தம்மை மறந்தவர் என்பதைக் காட்டப்

போதியனவாகும். அவற்றின் விளக்கங்கள் அளப்பரியன; என் நினைவுக்கும் பேச்சுக்கும் எழுத்திற்கும் அப்பாற்பட்டன. எனவே அவற்றை விடுத்து, தம்மை மறந்த நிலையில் மணிவாசகர் காட்டிய சில உண்மைகளை மட்டும் ஈண்டுக் கண்டு அமையலாம்.

தம்மை மறந்தவர் எவ்வாறு இருப்பார் என்பதை முதலில் காணலாம். அவர்கள் எதையும் வேண்டமாட்டார்கள். நாம் முதலில் கண்டபடி ஒன்றான இறைவனைப் பற்றியவர்களானமையின் பிறவற்றை அவர்கள் விரும்பார். கல்வியும் செல்வமும்கூட அவர் வேண்டாதன. இவை அனைத்தும் மேலும் மேலும் ஆர்வத்தையும் ஆசையையும் வளர்த்து, பற்றையும் பாசத்தையும் பெருகச் செய்வன. ஒன்றான இறைவன் ஆசையைப் பற்றினால் பிற அற்றுத்தான் ஆக வேண்டும். இவை அனைத்தையும் வெறுத்தோ அன்றி விட்டுக் காட்டுக்கோ ஓடச் சொல்லவில்லை மாணிக்கவாசகர். அப்படி இருந்தால் திருவெம்பாவையும் திருத்தோணோக்கமும் பிறபெண்டிர் பாடலும் தோன்றக் காரணமில்லையே? திருவெம்பாவையில் மணமாகாத கன்னிப் பெண்கள் வேண்டுகோளாக, 'என் கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க' என்ற நல்லடியவரோடு கூடும் காதல் வாழ்வை விரும்பும் நிலையை விளக்குகின்றாரே. எனவே அவர் எந்நிலையில் வாழ்ந்தாலும் பற்றற்ற வாழ்வினையே வற்புறுத்துகின்றார். 'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்' என்றபடி அவரவர் கருமத்தைச் செய்கின்றவர்களே செய்தவர்களே மெய்த்தவசிகளாவர் அன்றோ? கடமை வாழ்வில் தவறாது, 'எனது' 'யான்' என்ற ஆசையற்று வாழ்தலே அவர் காட்ட விரும்பியது. குற்றாலநாதனைக் குழைந்து பாடும் அவர் வேறொரு பற்றினையும் வேண்டா நிலையினை,

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்

குற்றலத் தமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே (39-3)

எனக் காட்டுகின்றார். அவர் இவ்வுலகில் உள்ளபற்றின் அடிப்படையில் சமுதாயத்தை மறக்க வைப்பனவற்றையே ஈண்டு வரிசைப்படுத்திக் காட்டுகின்றார். மற்றோர் இடத்திலே,

வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்
மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப்பு இறப்புச்சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருபெருந்துறை
இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப் புறம்போகலொட் டேனே.
(34-7)

எனத் தாம் ஒதுக்கியவற்றைக் காட்டுகின்றார். இன்று உலகில் எவ்வெவற்றின் அடிப்படையில் தனி மனிதனும் சமுதாயமும் பெரு நாடுகளும் போர் தொடுக்க நினைப்பதைக் காண்கின்றோமோ இவற்றை அவர் ஒதுக்குகிறார். உண்மையாக இவற்றை நீக்கியவர்தாம் மெய்யடியாராக முடியும். புகழாலும் செல்வத்தாலும் விண்ணுதிக்க மண்ணுதிக்க வெறியாலும் நடந்த—நடைபெறும் போர்களை எண்ணிப் பார்க்கும் நமக்கு இவர் கூற்று எவ்வாறு உண்மையாக ஒவ்வொருவருக்கும் ஏற்புடைத்து எனத் தோன்றுகிறதல்லவா? இந்தத் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகும் தகுதியே தம்மை மறத்தலுக்கு முதற்படி. அந்தப் படியில் நின்று தம்மையும் தம்மைச் சுற்றிலும் உள்ள உலகையும் இவற்றையெல்லாம் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் ஒருவனையும் எண்ணத்தோன்றும்; அவ்வெண்ணத்தில் நாம் வறிதே கழித்த நேரமும் பொழுதும் நம் முன் நிற்கும்; இத்துணை நாட்கள் உண்மை உணராமல் கண்ணைத் துயின்றவமே காலத்தைக் கழிந்தோமே என்ற உணர்வு பிறக்கும். அதன் வழிக் கண்ணீர் பெருகும். அந்த அழுகையே ஆண்டவனை நல்கும்.

இறையருள் எப்படியும் நமக்குக் கிட்டும் என்ற உணர்வில் தம்மை மறந்தால் அழுகைதோன்றும்; அவ்வழுகை தமக்காக அன்றிப் பிறர்க்காகவே இருக்கும். அவ்வாறு தாம் அழும் நிலையை உயிர்மேல் ஏற்றி மாணிக்கவாசகர்,

நல்கா தொழியான் நமக்கென்றுன் நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்த வாய்குழறு வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கு முயிர்க்கிரங்கி அருளாய் என்னை உடையானே.
(21-10)

எனப் பாடிக் கசிந்து கசிந்து கண்ணீர் பெருக்கி வேண்டுகின்றார். இந்த அழுகையைத்தான் பின் வந்த அடியவர் மணிவாசகர் மேலேற்றி 'அழுதடி அடைந்த அன்பன்' என அவரைச் சிறப்பித்தனர். எனவே தம்மை மறந்தவர் பிறர்க்கென அழுபவர் என உணர்தல் வேண்டும். தம்மை மறவாதவரே தமக்கென அழுபவர்.

இனி இவ்வாறு அழும் அடியார் களிப்பு வரும்போது செம்மாந்து திரிவார்களோ? ஒருக்காலும் திரியார். தம்மை உயர்த்த எண்ணுவோரே இன்பத்தில் ஏமாப்பதும் துன்பத்தில் வாடுவதும் செய்வர். ஆனால் தம்மை மறந்த அடியவர் துன்பம் பிறரைப் பற்றுவகையில் வாடியும் வருந்தியும் நின்று, அதே வேளையில் களிப்புமிகின் அதன் முடிவு என்னாகுமோ எனக் கலங்கி நிற்பர்.

வளைக்கை யானொடு மலரவ னறியா வான வாமலை
மாதொருபாகா
களிப்பெ லாம்மிகக் கலங்கிடு கின்றேன் கயிலை மாமலை
மேவிய கடலே (23-10)

என்பது மணிமொழி. இதுவே தம்மை மறந்தவர் நிலை. இவ்வாறு தம்மை மறந்த மாணிக்கவாசகர் தாம் பாடிய ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வோர் அடியிலும் உயர்ந்த தெய்வ நெறியையே காட்டிச் செல்கின்றார். ஒவ்வொரு

சொல்லும் அவர் புராணம் காட்டுவதுபோன்று 'தித்திக்கும் மணிவார்த்தை'யாகவே அமைகின்றது. அதனுல்தான் போலும் ஆண்டவனே இப்பாடல்களைத் தானே எழுதிக் காப்பிட்டுத் தில்லையின் எல்லையில் நாமெலாம் பெற்று உய்யுமாறு இட்டுச் சென்ருன். இத்தகைய பாடல்கள் அனைத்தையும் ஈண்டு ஆராய்ந்து, அவர்தம் மறந்த நிலையில் அவர் வாழ்ந்த தெய்வநெறி வாழ்க்கையை ஒரே ஒரு பத்தின் ஒருசில பாடல்கள்வழிக் காட்டி அமைக்கின்றேன்.

குழைத்த பத்து என்பது வாசக வரிசையில் முப்பத்து மூன்ருக அமைவது. அதற்கு 'ஆத்தும நிவேதனம்' என்ற பெயர் தரப் பெற்றுள்ளது. அதன் பொருளே தன்னை மறத்தல்தான். தன் உயிரை ஆண்டவனுக்கு நிவேதித்த பிறகு 'தான்' என்ற ஒன்று எங்கே இருக்கப் போகின்றது? 'நான் யார், என் உள்ளமார், ஞானங்களார்?' என்ற கேள்வி அற்ற இடம் அது. அங்கே இறைவனும் தானும் இயைந்த பெருமையைக் காணமுடிகின்றது. அந்த உண்மை நிலையைக் காணலாம்.

இறைவனுடைய தாளைப் பற்றிய உயிர் அனைத்துக்கட்டுக்களிலிருந்து விடுதலை பெற்ற ஒன்றுதான் எனினும், இறைவன் அவ்வுயிர்களை மேலும் மேலும் சோதனைக்குள்ளாக்குவான். 'சுடச்சுடரும் பொன்போல்' அந்த அடியவர்தம் தூய்மை நன்கு விளங்கும். அடியவர் தூய்மையை ஆண்டவன் நன்ருக அறிவார் என்ருலும், அதை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே அவன் நல்லுயிர்களுக்குப் பல சோதனைகளைத் தருகின்ருன். இறைவனிடம் அத்தகைய சோதனைகளைப் பெற்றவர் மாணிக்கவாசகர் என்பதை அவர்தம் வரலாறு நன்கு காட்டும். எனவே அவ்வப்போது பல்வேறு இடர்கள் அவரைப் பற்றுகின்றன. தம்மை மறந்த நிலையில் அவற்றை அவர் பொருட்படுத்தா திருந்தபோதிலும், இறைவனடியார் இன்னலுறின் அது இறை நிலைக்கு இழுக்காகும் என்ற உணர்வில் அவ்வப்போது அவ்வாண்டவனை முன்னிறுத்திப் பல வேண்டுதல்களைச் செய்கின்ருர். ஆயினும் அவ்வேண்டுதல்கள் தேவையா என்ற கேள்வியும் அவர் உள்ளத்தில் பிறக்

கின்றது. மற்றும் தன்னை முற்றும் இறைவனிடத்து ஒப்படைத்த பிறகு தனக்கென ஒரு செயலும் இல்லையே. நல்லது செய்யினும் அல்லது செய்யினும் அவனைப் பற்றியதாகவே அவை அமையுமன்றே? அவ்வாறன்றி வேறு ஏதேனும் வேண்டும் வகையில் உள்ளம் செல்லும். உடல் பொருள் உயிர் மூன்றையும் தனக்கே உரிமையாக்கிக் கொண்ட இறைவழி அமைந்தஉள்ளத்தில் தோன்றும் விருப்பமும் அவ்விறைவனைச் சார்ந்ததுதானே? இதுவே அணைந்தோர் நிலையன்றோ? இவை அனைத்தையும் எண்ணிப் பார்த்த அவர் உள்ளம் வாய்விட்டே பாடுகிறது.

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப்பணி
கொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன்
விருப்பன்றே (33-6)

என்பது அவர்பாடல். இதன் கடைசி அடிக்கு வேறு பொருள் கொள்வார் உண்டேனும் நாம் மேலே கண்ட அனைத்தையும் ஆராயின் அவன்வழிச் சார்ந்து நின்ற ஒன்றிலேயே அது சென்று முடியும்.

இவ்வாறு முற்றும் தன்னை இறைவனிடம் ஒப்படைத்த உயிருக்கு நன்மை தீமையும் உண்டோ? என்று இறைவன் ஆட்கொண்டானே அன்றே உயிரின் தனித்தன்மை அற்றது. எனவே அதன் விருப்பு வெறுப்போ நன்மை தீமையோ இல்லையாயிற்று. ஆகவே அதற்கென ஒன்றுமில்லை; அனைத்தும் இறையருள் என்றிருத்தலே தம்மை மறந்த அடியவர் செயல். மணிமொழியார் இந்தப் பேருண்மையை,

அன்றே என்றன் ஆவியு முடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட் கொண்ட போதே கொண்
டிலையோ

இன்றோ ரிடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்கண்
எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு
நாயகமே *(33-7)*

*என்று விளக்குகின்றார். இந்த உண்மையை உணராது உயிர்கள் திகைக்கும் போலும். அந்தத் திகைப்பை நீக்க வேண்டிய பொறுப்பும் அவ்விறைவனுக்கே உண்டல்லவா? அந்தக் கரணங்கள் அனைத்தும் அவன் வழியாய பின் திகைப்புக் கிடமில்லைதான்—எனினும் திகைப்பு உண்டானால் அதைத் தீர்க்க வேண்டுவது அவன் பொறுப்பே என்ற நிலையை,*

கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை உன்னை
விரித்துரைக்கில்
தேறும் வகையென் சிவலோகா! திகைத்தால் தேற்ற
வேண்டாவோ *(33-5)*

*என்று காட்டுகிறார். அவரே 'வேறோர் பரிசிங்கு ஒன்றில்லை' என அறுதியிட்டபிறகு நாம் கூறவேண்டியது ஒன்றுமில்லை. தம்மை மறந்த அடியவர் இவ்வாறு அனைத்தையும் அவனுக்கு உரிமையாக்கி, தமக்கென ஒன்றும் இல்லாதவராய் எல்லாம் அவன் செயல் என்றே இருப்பார். இவ்வாறு இருந்த மணிவாசகர் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைகின்றது.*

*உயிரும் இறைவனும் என்றுமுள என்பதையும் அவற்றுள் இறைவன் மாறுபாடற்றவன் என்பதையும் உயிர் உண்மை உணரின் தன்னை மறந்து தலைவனைக் கூடுமென்பதையும் அத்தகைய நல்லுயிரே மணிவாசகர் நல் உயிர் என்பதையும் அவர் வாழ்க்கையில் பலமாறுபாடுகள் உள்ளன என்பதையும், அவர் தாழ்ந்த நிலையிலுள்ள தம்மை யாருக்கும் எட்டாத இறைவன் எவ்வாறு ஆண்டு கொண்டான் என்பதையும் காட்டியதைக் கண்டோம். மேலும் அவர்தம் பாடல்*

வழியே உவமைகளும் சொல்லமைதிகளும் பழமொழிகளும் பிறவும் சிறக்க அமைந்து இலக்கிய மரபால் என்றும் அவர் பாடல்கள் வாழும் என்பதையும் உணர்ந்தோம். மேலும் அவரது அஞ்சா நிலையையும் ஆண்டவன் அவரை ஆட்கொண்ட வகையினையும் அவர் இறைவனைக் காலமாகவே கண்டதையும் ஓரளவு உணர்ந்தோம். அவரது அறிவியல் உலகியல் நெறிகளின் சிறப்பினை ஓர்ந்தறிந்தோம். அவர் பற்றற்று வாழ்ந்த நிலையில் அப்பற்றற்ற வாழ்வு வெறும்துறவில் மட்டும் இல்லை என்பதையும் உயிர்களைப் பெண்களாக்கி உபதேசம் செய்த வகையினையும் காண்டோம். இறுதியாக அவர் தம்மை மறந்த நிலையில் ஆண்டவனிடம் தம்மை எப்படி முற்றும் அடைக்கலப் பொருளாக்கி அனைத்தையும் அவனுக்கே உரிமையாக்கினர் என்பதையும் அதுவே மேலான தெய்வநெறி என்பதையும் கண்டோம். 'தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை' எனத் தம்மையே பண்டமாற்றுப் பொருளாக்கித் தம்மை மறந்து அவனருளாலே அவன் தாள் வணங்கிய மணிவாசகர் தாம்மட்டுமன்றி உலகத்தார் அனைவரையும் சேர அழைத்துச் செல்ல விரும்பியதையும் உணர்ந்தோம். நானும் அந்நல்ல நெறிக்கு அனைவரும் ஒருசேரச் செல்வோம் 'வாரீர்' என்று கூறி அமைகின்றேன்.

## 5. தம்மை மறந்த அடியவர்—அரசர்

தமிழையும் பண்பாட்டையும் வளர்த்த பெருமையால் சைவருக்கு எவ்வளவு பங்கு உண்டோ அவ்வளவு வைண வருக்கும் உண்டு. தமிழ் நாட்டுப் பழஞ் சமயங்கள் சைவ மும் வைணவமும். பரத்துவமாகிய இறைநிலை உச்சியின் பெயர் அமைப்பினைத் தவிர்த்து வேறு பெரிய வேறுபாடுகள் இரண் டற்கும் இல்லை எனலாம். கடைச்சங்க காலத்து முன்பிருந்தே- ஏன் ?—தொல்காப்பியர் காலத்திலிருந்து தென்னாட்டில் மட்டுமன்றி வட நாட்டிலும்கூடச் சைவம் வைணவம் இரண்டும் ஒன்றை ஒன்று தழுவியே வாழ்ந்து வந்தன. தமிழ் நாட்டுப் பெருங் கோயில்களைக் காணும் யாவரும் இன்றும் இந்த உண்மையை உணர்வர். 'அரியும் சிவனும் ஒண்ணு அறியாதார் வாயிலே மண்ணு' என்று தமிழ் நாட் டுப் பாமரப் பாட்டி இன்று இதை ஊர்தொறும் சொல்லிக் கொண்டிருப்பாள். இடைக்காலத்தில் வாழ்ந்த கம்பர் என்னும் காலங் கடந்து வாழும் பெரும் புலவர்,

அரனதிகன் உலகளந்த அரிஅதிகன் என்றுரைக்கும்
பரகதிசென் றடைவரிய பரிசே போல் [அறிவி லார்க்குப்

என்று உவமை வாயிலாக அரனையும் அரியையும் வேறு படுத்தி உயர்ந்த தாழ்ந்த வேறுபாடுகளைக் கற்பிப்பவர்

யாரும் இறையருளைப் பெற்று மோட்சம் அடைய முடியாது என்று திட்டமாகக் கூறுகின்றார். எனவே பழங்காலத்தில் சமயக் காழ்ப்போ சமய வேறுபாடோ அதிகமாக இல்லை என்பது தேற்றம். எனினும் வரலாற்று எல்லையைக் காணும் போது சிற்சில சமயங்களில் சைவ வைணவச் சச்சரவுகள்-சிறு சிறு வகையில் நடந்திருப்பதைப் பார்க்கமுடிகிறது. அவை அத்துணைக் கொடுமை வாய்ந்தவையல்ல. இன்றும் இரு பெருமதங்களும் தம்முள் இணைந்தே வாழ்வதைக் காண முடிகின்றது. எனவே நாமும் இங்கு வைணவ அடியவர் ஒருவரை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் பன்னிரு திரு முறைகளைப்போன்றே நாலாயிரப் பிரபந்தமும் தெய்வ நெறியையும் பண்பாட்டையும் மக்களுக்கு உணர்த்துவதே யாம்! திருமாலைப் பாடிய பன்னிரண்டு ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுதியே நாலாயிரம். முதலாழ் வாரும் ஆண்டாளும் நம்மாழ்வாரும் பிற அடியவர்களும் தம்மை மறந்த நிலையில் இறைவனைப் பாடிய பாடல்கள் இன்றளவும் வாழ்கின்றன. என்றென்றும் வாழும். சைவ அடியவருள் பல துறைகளில் பணியாற்றி-தம் பணியுடன் இறைபணியையும் இயற்றி ஏற்றம் பெற்றவர் இருப்பது போன்றே வைணவ அடியாருள்ளும் பல துறையில் பணி யாற்றிவர் உள்ளனர். அரசராக இருந்து 'இவ்வரசு வேண் டேன்' என ஒதுக்கி, 'இறை பணியே என் பணி' எனத் தம்மை மறந்த அடியவரும் இப்பன்னிருவருள் உள்ளனர். திருமங்கை மன்னன் என்றே சிறப்பிக்கப் பெற்றவர் ஒருவர். இங்கே நாம் காண இருக்கின்ற அடியவர் தம்மை 'கொல்லிக் காவலன்' என் அறிமுகம் செய்து கொள்ளுகின்ற 'குலசேகரர்' ஆவர். ஆம்! அவர் தம்மை மறந்த மன்னர்-திருமாலிடம் தம்மை அடைக்கலப் பொருளாகத் தந்த உத்தமர்-எப்படி மறந்தார்? காண்போமா ?

குலசேகரர் ஏறக்குறைய ஆயிரத்து இருநூறு ஆண்டு களுக்கு முன்பு இருந்தவர். பரமேச்சுரப் பல்லவன்

காஞ்சியில் அரசு செய்த காலத்தில் (கி. பி. 731—795) வாழ்ந்தவர் என்பது வரலாற்று ஆசிரியர்கள் கண்ட முடிவு. பாமாலை பாடிய வைணவ அடியார்களும் வாழ்ந் திருந்தனர். திருமங்கை ஆழ்வாரை ஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்தவர் என்று கூறுபவரும் உளர். எப்படி யாயினும் இவரனைவரும் பல்லவர் காலத்தில் வாழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை. இவருடைய வைணவப்பற்றையும் இறைவனிடம் தம்மை மறந்த நிலையையும் நன்கு போற்று வர். இவருடைய வரலாற்றில் தம்மை மறந்த நிலைக்குச் சில சான்றுகள் உள்ளன.

வால்மீகி இராமணைப் பிரசங்கத்தை இவர் முறையாகச் சொல்லக் கேட்பது மரபு. அக்காலத்தில் கம்பருடைய இராமாயணமோ வேறு மொழி பெயர்ப்புக்களோ கிடையா. எனினும் இராமன் வரலாறு சங்க காலத்துக்கு முன்பே தமிழ் நாட்டில் பரவிய ஒன்று. இவர் வால்மீகி இராமா யணத்தை முறையாகக் கேட்டுக்கொண்டே வந்தார். அந்த நாளில் ஒருநாள் அரக்கர் 14,000 வரோடு இராமர் தனி யாகப் போரிட நேர்ந்தது என்ற கட்டத்திலே இவர் தம்மை மறந்தார். 'எம்பெருமான் ஒருவரே தனியாக நின்று அத்துணை ஆயிரக்கணக்கான அரக்கரோடு போரிடுவதா' என்று தம்மை மறந்து நைந்தார். ஏன்? இறைவன் முடிவி லாற்றலுடைமையையும் மறந்தார். இராமகாதையை இவர் முற்றும் அறிவார் ஆயினும், தம்மை மறந்த காரணத்தால் போர் அப்போது நடப்பதாகவே முடிவு செய்தார். உடனே தம் படைத் தலைவர் அனைவரையும் அழைத்துச் சேனை களோடு புறப்பட ஏற்பாடு செய்து, தாமும் இராம னுக்குத் துணை செய்வதற்காகப் போருக்குப் புறப்பட்டார். அவர் தம் மனநிலை அறிந்த அமைச்சர்கள் உடனே, ஒற்றர் மூலம் இராமர் வெற்றிகொண்டார்என்ற செய்தி வந்ததாகக் கூறினர். உடனே இவர் மகிழ்ந்து, தம் படை எடுப்பை நிறுத்தினர். இதைக் கேட்கப் பலருக்கு வேடிக்கையாகத் தான் இருக்கும். ஆயினும் இதனினும் தம்மை மறந்த நிலையில் வேறு என்ன ஏதுவினை எடுத்துக் காட்ட முடியும்?

தம்மை மறந்து, தம் நாட்டை மறந்து, தம் காலம் மறந்து, இராமன் போர் செய்வதாகவே எண்ணி, தாமும் துணையாகப் போர் செல்லப் புறப்பட்ட நிலையை என்னென்பது?

இந்த நிகழ்ச்சியை அடுத்து நிகழ்ந்த மற்றொன்றைப் பற்றியும் இங்கே நினைக்க வேண்டியிருந்தது. இவரது போக்கினைக் கண்ட மந்திரிகள் இவரது வைணவ சமய ஈடுபாட்டையும் அச்சமயத்தாரிடம் கொண்ட பக்தியையும் குறைக்க ஒரு சூழ்ச்சி செய்தனர். எனினும் அதிலும் இவர் தம்மை மறந்த நிலையினையே புலப்படுத்தினர். அமைச்சர்கள் செய்த சூழ்ச்சியின்படி திருமாலின் திருக்கோயிலிலிருந்த ஆபரணங்கள் களவாடப்பட்டன. அவற்றை வைணவ அடியவர்களே கொள்ளை இட்டனர் எனக் குலசேகரரிடம் அமைச்சர்கள் கூறினர்கள். எனினும் அந்தச் சொல்லை அரசர் நம்பவில்லை. 'பரனன்பர் கொள்ளார்' எனத் தடுத்து அதை நிறுவவும் முனைந்தார். ஆம். அதற்கென அவர் தம் நெஞ்சு நெக்குருகும் செயலை மேற்கொண்டார். 'என்னடியார் தவறு செய்யார்' என ஆண்டவனே கூறும் நிலையில் வைணவ அடியார் திருமாலின் திருவாபரணத்தையே திருடுவார்களா என நினைத்தார். ஒரு குடத்துள் நல்ல பாம்பினை இட்டு அடியவர்கள் ஆபரணங்களை எடுத்திருப்பார்களாயின் 'என்னைப் பாம்பு கடிக்கட்டும், என்று அக்குடத்தில் தம் கையை விட்டார். பாம்பு அவரை ஒன்றும் செய்யவில்லை. கண்ட அமைச்சர் அஞ்சி, உண்மையை உணர்ந்து மன்னிப்பு வேண்டினர். எனினும் அரசர் மனம் வேறு வகையில் சென்றது.

ஒரே வேளையில் ஆட்சியில் இருந்து கொண்டு, ஆண்டவனுக்கு முற்றும் பணி செய்ய இயலாது எனக் கண்டு, குலசேகரர், தம் மக்களிடம் ஆட்சியை ஒப்படைத்துத் தாம் இறை வழிபாட்டில் முற்றும் ஈடுபட்டார். இவரது இறை உணர்வையும் பாநலத்தையும் காட்டுமுன் மற்றொன்று இங்கே நினைவுக்கு வருகின்றது. இறைவனுடைய அடியவர் தம் உளப்பாங்கைக் குலசேகரர் உணர்ந்த வழியே அது.

பெரியாழ்வார் இவ்வடியார்களைப் பற்றிப் பேசுகின்றார். தாமே பேசவில்லை. இறைவன் வாக்கிலேயே பேசுகின்றார். அடியவர் தவறு செய்யார் என்பது அவர் வாதம். ஒரு வேளை அவர்கள் செய்வது உலகத்தாருக்குத் தவறு போன்று தோன்றினும் அஃது உண்மையில் நன்மையாகவே முடியும் என்பது சமயக் கொள்கைபோலும்! இதன் அடிப்படை அடியவர் தவறு செய்யார் என்பதே. குலசேகரர் அந்த அடிப்படையிலேதான் திருவாபரணத்தைத் திருமாலடியார் திருடியிருக்க மாட்டார் என்று கூறி விளக்கியும் காட்டினார். பெரியாழ்வார் இந்நிலையை ஆண்டவனே அன்னையிடத்துக் கூறிய வகையில் விளக்குகிறார். தன் அடியவரைப்பற்றி இலக்குமியே 'அவர்கள் தவறு செய்பவர்கள்' என்று கூறினாலும் அதைத் தடுத்துத் 'தவறு செய்யார்; செய்தாலும் நல்லதாகவே முடியும்' என்று விளக்கியதாக அவர் காட்டுகிறார்.

தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா ளாகிலும்
சிதகு ரைக்குமேல்
என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்
என்பர் போலும் (பெரி. திருமொழி, 4-9-2)

என்பது அவர் வாக்கு. எனவே அடியவர் உளத்தூய்மையும் செயல் தூய்மையும் உடையவர் என்பது தெளிவு. இவ்வுண்மையை உரைக்க எல்லாச் சமயங்களும் பல வரலாறுகளைக் கொண்டுள்ளன. அவற்றை ஈண்டு விரிக்காது மேலே செல்லலாம்.

இவ்வாறு குலசேகரர் ஆளும் காலத்தும் அல்லாக் காலத்தும் தம்மை மறந்த காரணத்தால் நமக்கு நல்ல வளமான பாடல்கள் கிடைத்தன. குலசேகரர் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடவில்லை. இவர் பாடிய பதிகங்கள் பத்தே. எனவே நூற்று ஐந்து பாடல்களே. ஒவ்வொரு பதிகத்திலும் இறுதிப் பாடல்கள்வழி இவர் தம்மைப்பற்றிக் கூறுகின்றார். தம்மைத் தமிழ் மண்ணுக்கே அரசராக—மூவேந்தர் நிலையிலே—தம்மைக் கூறுகின்றார். எனினும்

பலவிடங்களில் தம்மைக் கொல்லி காவலன் என்றே குறிக்கின்றார்.

கொல்லி காவலன் கூடல் நாயகன்
கோழிக்கோன் குலசேகரன் (2-10)

என்று மூன்று தலைநகர்களையும் குறித்து (கொல்லி—சேரர் கூடல்—பாண்டியர், கோழி (உறையூர்)—சோழர் தம்மைத் தமிழகம் முழுதுக்கும் அரசராக்கிக் காட்டுகின்றார். இவர் காலத்தில் வடக்கே பல்லவ மன்னர் உயர்ந்திருந்த நிலையில் தெற்கே சோழபாண்டியப் பேரரசுகள் நிலை குலைய இவர் அந்நாடுகளையோ அவற்றுள் சில பகுதிகளையோ கைக்கொண்டு ஆண்டிருக்கலாம். இந்த இடமேயன்றி இவர் தம்மை வீரராகவும் சிறந்தவராகவும் கொல்லி நகர்க்கிறையவராகவும் கூறிக் கொள்ளும் இறுதிப் பாடல்களும் உள. அவற்றுள் சில காண்போம்.

குடைவிளங்கு விறல்தானைக் கொற்ற ஒள்வாள்
கூடலர்கோன் கொடைக்குல சேகரன் (1-11)

கொங்கர் கோன்குல சேகரன் (3-9)

சொல்நவிலும் கூர்வேல் குலசேகரன் (4-11)

கொற்றவேல் தானைக் குலசேகரன் (5-10)

கொல்லி நகர்க்கிறை கூடற்கோமான்
குலசேகரன் (6-10)

கொல்லி காவலன் மாலடி முடிமேல்
கோலமாம் குலசேகரன் (7-11)

சொல்நவிலும் வேல்வலவன் குடைக்குல சேகரன் (8-11)

கூரார்ந்த வேல்வலவன் கோழியர்கோன் குடைக்குல
சேகரன் (9-11)

சொல்இயலும் படைத்தானைக் கொற்ற ஒள்வாள்
கோழியர்கோன் குடைக்குல சேகரன் (10-11)

என்பன அவர் தம்மைப் பற்றிக் கூறிக்கொள்வன. இவற்றின் வழி அவர் நாட்டெல்லையையும் வீரத்தையும் சேனையின் திறத்தையும் நன்கு அறியலாம். இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் திருமாலிடம் தம்மைப் பறிகொடுத்த நிலையே ஈண்டு நமக்கு வேண்டுவதாகும்.

குலசேகரர் மட்டுமன்றி வைணவ அடியார்களே இறைவனோடு நெருங்கிய தொடர்பு உடையவர்கள். இன்றும் வைணவத் திருத்தலங்களுக்குச் செல்பவர் இந்த உண்மையை நன்கு அறிவர். திருமால் படிமத்தைச் சீராட்டிப் பாராட்டி உணவூட்டும் முறையை நேரில் காணும் நம்மை நாம் மறப்போம். என்பது உண்மை. அவ்வுணவினை—பழத்தையும் அக்கார அடிசிலையும் பிறபொருள்களையும் அவன் பவள வாயிடைக் கொண்டு காட்டி உண்ண வேண்டும் திறனை எண்ணுவதா? அவன் சிற்றுலாவுக்கு வெளி வருகையில் அவன்மேல் சிறுதுளியும் வெயிலும் படாதபடி குடைகளாலும் சாமரைகளாலும் மூடிக் கண்ணும் கருத்துமாகக் காக்கும் செயலை எண்ணுவதா? அவனைப் பல வகையில் அலங்கரித்து அவன் தோற்றத்தில் தம்மை மறந்து—பக்தி வலையில் படும் அவனை நினைத்து—பரவசப்படும் பான்மையை எண்ணுவதா? உண்மையில் வைணவக் கோயில்களில் உருக்கமும் தம்மை மறத்தலும் இன்று காணக் கூடியவைதாம்.

குலசேகரர் தம்மைப் பேரரசர் ஏன்பதையும் மறந்து இறைவனைப் பல வகையில் வழிபடுகிறார். ஒவ்வொரு பதிகத்தின் கடைசியிலும் தம்மை அரசர் என்று அவர் கூறிக் கொண்டாலும் பாடல்களுக்கிடையிலே அவர் தொண்டராக-மெய்யடியாராக— குழந்தையாக—தாயாகத்தான் காட்சி தருகின்றார். அவரால் பாடப் பெற்ற தலங்கள் நான்கே. அரங்கமும்,வேங்கடமும், வித்துவக்கோடும், தில்லைத் திருச்சித்திரகூடமும் இவர் பாடல்வழி ஏற்றம் பெறுகின்றன. அரங்

கத்துக்கு மூன்றும் மற்றவைகளுக்கு ஒவ்வொன்றுமாகப் பதிகங்கள் அமைந்துள்ளன. அகப்பொருள் துறையில் 'கன்னியர் ஊடிக் கண்ணனை எள்குதல்' என்ற தலைப்பில் ஒரு பதிகமும் உளது. 'தான் தாலாட்டக் கொடுத்து வைக்கவில்லையே' எனத் தேவகி புலம்புவதுபோல் பதிகம் ஒன்றும், இராமனைத் தாலாட்டும் பதிகம் ஒன்றும் தயரதன் புலம்பலாகப் பதிகம் ஒன்றும் உள்ளன. எனவே இவர் பதிகங்களை இவ்வகையில் எளிதாகப் பகுத்துவிடலாம். எனினும் அவற்றுள் மிகவும் கருத்துக்களையும் கசிந்துருகும் நிலைகளையும் காண நாம் அகத்தையும் புறத்தையும் தூய்மையாக்கிக் கொள்ளவேண்டும்.

திருவரங்கம் வைணவர்களுக்குக் 'கோயிலா'கத் திகழ்வது அன்று. சைவர்கள் 'கோயில்' என்றால் சிதம்பரத்தைக் குறிக்கும் என்பர். அது போன்றே வைணவர்கள் 'கோயில்' என்றால் திருவரங்கத்தைக் குறிக்கும் என்பர். அத்திருவரங்கப் பெருமானிடம் ஈடுபடாத—பாடாத— அடியவர் இல்லை. ஆண்டாள் 'அரங்கனுக்கல்லால் வாழ்க்கைப் படேன்' என்று கூறி, அவனுக்குத் தம்மை உரிமையாக்கிக் கொண்டார். நம் ஆழ்வார் குலசேகரரும் அதே நிலையில் அரங்கத்தே தம்மை மறந்து, தம்மைத் திருவரங்க நாதன் திருவடிகளுக்கு அடிமையாக்கிக் கொள்ளுகின்றார்.

உலகில் பிறந்ததால் உண்டாகிய பயனை உற்று அறிபவர் மிகச் சிலரேயாவர். 'வந்தது எதற்கு? வாழ்வது எதற்கு?' என்ற வினாக்களுக்கு விடைகாண்போர் மிகச்சிலரே. அடியவர்கள்,

கண் அவனைக் காண்க இருகா தவனைக் கேட்கவாய்
பண் அவனைப் பாடப் பதஞ்சூழ்க

என்பர். இறைவனைப் பாடவும், காணவும், எண்ணவும், எழுதவும் பயன்பட வேண்டும் என்பர். இதன் அடிப்படை, படமாடும் இறைவனைப் பாடுவதோடு நடமாடும் கோயில்களாகிய

உயிர்களையும் போற்ற வேண்டும் என்பதாகும். இங்கே குலசேகரர் அரங்கப் பெருமானைப் பாடுமுகத்தால் தம் உடல் பொருள்ஆவி மூன்றையும் அவனுக்கு உரிமையாக்குகின்றார். எனவே அவருக்கென ஒன்றும் இல்லையாகின்றது. இந்த நிலையை அவரே காட்டும்போது நம்மை நாமும் மறக்கிறோம்.

கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே

என்றும்,

மாயோனை மனத்தூணே பற்றி நின்றென்
வாயார என்றுகொலோ வாழ்த்தும் நாளே

அம்மான்றன் அடியிணைக்கீழ் அலர்க ளிட்டு அங்கு
அடியவரோ டென்றுகொலோ அணுகு நாளே

என்றும்,

கோவினை நாவுறவழுத்தி என்றன் கைகள்
கொய்மலர்தூய் என்றுகொலோ கூப்பும் நாளே

என்றும்,

மாலோனைக் கண்டின்பக் கலவி எய்தி
வல்வினையேன் என்றுகொலோ வாழும் நாளே

என்றும்,

பேராழி அம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தே என்றுகொலோ புரளும் நாளே

என்றும் தாம் திருவரங்கத் திறைவனோடு என்று இயையப் பெறுவது என ஏங்குகின்றார். இவை யாவும் அப்பாடல்களின் இறுதி அடிகள். இவ்வடிகளில் ஒவ்வொன்றிலும் இவர்

அவன் அடியில் தம்மை, 'அர்ப்பணித்த' திறனை நம்மால் காண முடிகின்றதன்றோ?

அரங்கனைப் பாடும்போது இவ்வரசர் அவ்விறைவனுடைய அடியவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும் எப்படியிருந்தால் அவன் கதி தருவான் என்பதையும் எண்ணிப் பார்க்கின்றார். இறைவன் தானே வந்து தலையளித்து ஆண்டுகொண்டருளும் பெருநிதி. ஆனால் அப்படி அவன் வரும்போது நாம் எவ்வாறு இருக்கவேண்டும்? உள்ளத்தில் ஒளிவு மறைவுஇன்றி அவனை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டுமல்லவா? அதை ஆழ்வார் அழகாகக் காட்டுகின்றார்.

மறம்திழும் மனம்ஒழித்து வஞ்சம் மாற்றி
ஐம்புலன்கள் அடக்கி இடர்பாரத் துன்பம்
துறந்துஇரு முப்போதேத்தி எல்லை இல்லாத்
தொல்நெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறந்திகழும் மனத்தவர்தம் கதியை (1-7)

என்பது அவர் வாக்கு. நல்ல அடியவர் தம் மனத்தில் மறம்—கொடுமை—புகாது. வஞ்சம் இடம் பெறாது. அவர்தம் புலன்கள் அவர்வழி ஏவல் கேட்கும். அந்த நிலையில் துன்பமாகிய பாரம் அவரைப் பற்றாது. எனவே இறைவனை எப்போதும் ஏத்தி அறத்தொடு பொருந்தி வாழ்வார்கள். அவ்வாறு வாழ்ந்தவர் பலர். அவருள் சிறந்தவராகிய ஒருவராம் மணிவாசகரைப்பற்றி நேற்றே கண்டோம். அவரைத் தாமே வலிய வந்து ஆட்கொண்டார். சுந்தரரையும் அவ்வாறே ஆட்கொண்டதறிவோம். எனவே அதே நெறியில் ஆட்கொள்ளப்பெற்ற குலசேகரரும் இந்த இறைவன் அடியவர் திறனை எண்ணிக் காட்டுகின்றார்.

இறைவன் அரங்கத்தில் ஏன் பள்ளிகொண்டிருக்கிறான் என எண்ணிப்பார்க்கிறார் ஆழ்வார். அவன் அவ்வாறு பள்ளி கொள்வதால் நமக்கென்ன நன்மை என்று இன்றும் நம்மில்

சிலர் நினைக்கின்றார்களன்றோ? அவர்களுக்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய கடப்பாட்டில் ஆழ்வார் ஒரு விளக்கம் தருகின்றார். என்னவென்று காண்போமா ?

வன்பெரு வானகம்உய்ய அமரர் உய்ய
மண்உய்ய மண்ணுலகில் மனிசர் உய்ய
துன்பமிகு துயரகல அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு நாளும்
இசைந்துடனே என்றுகொலே இருக்கும் நாளே (1-10)

என்று அவன் தென்திசை நோக்கிப் பள்ளிகொள்வதற்கும் அம்பலவன் தெற்கு நோக்கி ஆடுவதற்கும் இருவேறு சமயத்தவரும் ஒரே பொருள் கூறுவர். அரங்கம், அம்பலம் என்ற இரண்டும் ஒரே பொருளைக் குறிப்பன — பெருவெளி என்பது அது. பின் ஆடும் சாலைக்கும் ஆற்றிடைக் குறைக்கும் பிற மன்றங்களுக்கும் அவை பெயராக அமைந்தன. எனினும் அப்பரந்த அரங்கத்தே — அம்பலத்தே — பெரு வெளியிலே இடையறாது ஒருவன் அமைதியாகப் படுத்தும் மற்றவன் உற்றெழுந்து ஆடியும் இருப்பதற்குக் காரணம் பேரண்டப் பெருவெளியிலே அனைத்தையும் படைத்தும் காத்தும் கரக்கும் இறைவனின் அருள் கருணைநோக்கு என்றும் அடியவரைச் சுற்றி நிற்கவேண்டும் என்பதே. துன்பம்—இடர் அல்லது சாவு. அதற்குத் தலைவனாய இயமன் தென்திசையில் உள்ளமையின் அவன் வராதவகையில் அடியவரைக் காப்பதற்காக இருவரும் தெற்கு நோக்கி உள்ளனர் என்பர். அடியவர்—மெய்யடியவர் என்றும் சாகாவரம் பெற்றவரன்றோ?

ஒரு பாட்டில் இவர் 'தொண்டர் அடிப்பொடி ஆட நாம் பெற்றிடில்' என்றே குறிக்கின்றார். இஃது இவரை ஒத்த அடியாராகிய தொண்டரடிப் பொடியாழ்வாரைக் குறிக்கும்

என்பர் சிலர். ஆயினும் அஃது அத்துணைப் பொருத்தமான தன்று. 'இறைவன் தொண்டருள்ளத் தடக்கம்' ஆதலின் அவனடியவரைப்போற்றல் அவனை வணங்குதலினும் மேலானது என்ற கருத்திலேயே இவர் இப்படிப் பாடியிருக்க வேண்டும். அடியவர் பெருமையைச் சுந்தரரும் பிற அடிய வரும் பாடியதை நாம் அறிவோமல்லவா? இதே பதிகத்தில் இவரே இத்தொடரன்றி வேறு 'மெய்யடியார்கள் கூட்டம்', 'தொண்டர் சேவடிச் செழுஞ்சேறு', 'தொண்டர் சேவடி ஏத்தி வாழ்த்தும்', 'காதல் செய் தொண்டர்க்கு' என்று பல வகையில் பாடுகின்றார். இதனால் இத் 'தொண்டரடிப் பொடி' என்ற தொடரும் பொதுவாக அடியவரைக் குறிக்கும் என்று கொள்ளலே பொருந்துவதாகும். இந்த இரண்டாம் பதிகத்தில் அடியவர் எவ்வெவ்வாறு தம்மை மறந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவர் என்பதை யெல்லாம் இவர் விளக்குகின்றார்.

> வாட்டமில் வனமாலை மார்வனை
> வாழ்த்தி மால்கொள் சிந்தையராய்
> ஆட்டம்மேவி அலந்தழைத்து அயர்வு
> எய்தும் மெய்யாடி யார்கள்

என்றும்,

> ஆடிப்பாடி அரங்க ஓஎன்று
> அழைக்கும் தொண்டர்

என்றும்,

> ஆறுபோல் வரும்கண்ண நீர்கொண்டு
> அரங்கன் கோயில் திருமுற்றம்
> சேறுசெய் தொண்டர்

என்றும்,

> நாத்தழும்பு ஏற நாராயணா என்று
> அழைத்து மெய்தழும்பத் தொழுது
> ஏத்தி இன்புறும் தொண்டர்

என்றும்,

ஆர மார்வன் அரங்கன் என்னும்
அரும் பெருஞ்சுடர் ஒன்றினைச்
சேரும் நெஞ்சினர் ஆகிச் சேர்ந்து
கசிந்து இழிந்தகண் ணீர்களால்—வாரநிற்பவர்

என்றும்,

மால்உற்று எழுந்து ஆடிப் பாடித்
திரிந்து அரங்கன் எம்மானுக்கே
மாலை உற்றிடும் தொண்டர்

என்றும்,

அத்தன் அச்சுதன் அரங்க னுக்கு
அடியார் களாகி அவனுக்கே
பித்த ராம்அவர் பித்த ரல்லர்கள்
மற்றையார் முற்றும் பித்தரே

என்றும் அடியவர் தம் நிலையை அழகுபடக் காட்டுகின்றார் தம்மை மறந்த அடியவருக்கு இவரினும் சிறந்த எடுத்துக் காட்டுகளை யாரே காட்டவல்லார்? இந்தத் தொடர்களில் அடியவர் எவ்வெவ்வாறு ஆண்டவனை எண்ணியும் பாடியும் ஏங்கியும் ஆடியும் மறந்தும் அழுதும் மாலுற்றும் போற்றுகின் றார்கள் என்பதை இவர் குறிக்கின்றார். இவற்றிற்கெல்லாம் இவரே சான்றாக அமைவார் என்பது உறுதி.

அடுத்த பதிகத்தில் ஆழ்வார் இவ்வுலக இயல்புகளையெல் லாம் வரிசையாகக் காட்டி, அத்தகைய உலகில் உள்ளா ரொடும் தாம் கூடுவதில்லை என்று கூறி இறைவனுக்கு ஆட் படுவதன்றி வேறு ஒன்றும் தமக்கும் புரியாது என்று பாடு நிலை எண்ணத்தக்கதேயாகும். ஒரு சில மட்டும் காணலாம்.

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்இவ்
வையம் தன்னொடும் கூடுவ தில்லையான் (3-1)

என்று பொய்யாய உலக வாழ்வை வேண்டேன் என் கின்றார். 'உடம்பினுக்கு மெய்' என்ற ஒரு பெயருண்டு. பொய்யாய உடம்பை 'மெய்' என அழைக்கும் மங்கல வழக்கு இது என்பர் அறிந்தோர். என்றும் நிலையாக உள்ள இறை

வனே 'மெய்'யாளன். எனவே இப்பொய்யாகிய என்றும் எப்போதும் அழியக் கூடிய உடம்பை 'மெய்' எனல் எவ்வாறு பொருந்தும் எனக் கேட்பர் மேலோர். இவர் வாழ்வையே பொய் வாழ்வு எனக் கொண்டு இவ்வாறு கூறுகின்ருர். 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்ற நம்மாழ்வார் அடிப்படைக் கருத்துக்கு அரணுக, ஒரு பற்று இருக்கும் வரையில் இறைப்பற்று நேராது என்பதையே இவ்வாறு விளக்குகின்ருர். இயேசு பெருமான் 'ஒரு பணியாள் இரண்டு எசமானருக்குத் தொண்டு செய்ய முடியாது' என்று கூறுவர். எனவே உலகை—தம்மை மறந்து ஒன்ருன இறைவனுக்குத் தொண்டாதலே மெய் வாழ்க்கை என்றும் அடியவர் காட்டுகின்ருர்.

தீதில் நன்னெறி நிற்க அலாதுசெய்
நீதியா ரொடுங் கூடுவ தில்லையான் (3-5)

என்ற அடிகளிலே நன்மை இருக்க, அதை விட்டு அல்லாத வற்றைச் செய்கின்றவரோடு நான் கூடுவதில்லை எனக் காட்டி, என்றும் 'நல்லாரிணக்கம்' வேண்டுகின்ருர். இதனினும் ஒருபடி மேலே சென்று,

பேயரே எனக்கு யாவரும் யானுமோர்
பேயனே எவர்க்கும் இதுபேசிஎன்?
ஆயனே அரங்கா என்றழைக் கின்றேன்
பேயனுய் ஒழிந்தேன் எம்பிரா னுக்கே (3-8)

என்று ஆழ்வார் தம்மை மறந்து, மற்றவர் தம்மைப் பேயனென்று அழைத்தபோதிலும்கூட, அதையும் மகிழ்வொடு ஏற்று, மற்றவரைத் தம் வரையில் பேயரே என முடிவுகட்டி, இறைவனை எண்ணி அவன் நினைவாகவே பேயனுக விழைகின்ருர். இவ்வாறு பலவகையில் தம்மை மறந்த நிலையினை அரசராம் குலசேகரர் உலகுக்கு ஒளிவு மறைவின்றிக் காட்டுகிருர்.

அடுத்து வருகின்ற வேங்கடவனைப்பற்றிப் பாடும் பதி கத்தில் ஆழ்வாரின் தம்மை மறந்த நிலை இன்னும் சிறக் கின்றது. தாம் அரசினை வெறுத்ததை,

கம்பமத யானை கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்

எனக் காட்டுகின்றார். 'சரி அப்படியானால் வானாளும் வாழ்வு தரட்டுமா?' எனக் கேட்டால்,

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன் (4-2)

என்று அதை வெறுக்கின்றார். எனவே அடியவர் வேண்டும் வாழ்வுதான் எத்தகையது என்ற கேள்வி பிறக்கின்றது. அவற்கும் அவரே பதில் தருகின்றார். வேறு எங்காயினும் உயர்ந்த மனிதப் பிறவியை எடுத்து, வேறு பலரொடும் கூடி வாழ்வதைக் காட்டிலும், வேங்கடமலையின் மேல் எப்பொரு ளாகப் பிறந்தாலும்—உயிருள்ள உயிரற்ற பொருளாகப் பிறந்தாலும்—அதுவே தமக்கு வேண்டிய வாழ்வு என்கின் றார். இதைவிடத் தம்மை ஒறுக்கும் தனிவாழ்வுக்கு வேறு என்ன சான்று வேண்டும்? குருகாக, மீனாக, மரமாக, தம்பக மாக, குவடாக, ஆறாக, வழியாக, படியாக வேங்கடத்தில் இருந்தாலும் போதும் என்கின்றார். உயிருடைய பொரு ளாக மட்டுமன்றி, உயிரற்ற பொருளாகவும் கல்லாகவும் மரமாகவும்கூட இருக்க இசைகின்றார் ஆழ்வார். அவர் வாக்கிலேயே காணலாம்.

வேங்கடத்து, கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே,

வேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன்
ஆவேனே

வேங்கடத்து, செண்பகமாய் நிற்கும் திருவுடையேன்ஆவேனே,

காறுருய்ப் பாயும் கருத்துடையன் ஆவேனே,
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் கண்பேனே

என்று பல வகையில், வேங்கடவனை நோக்கி வேண்டிய குலசேகரர் இறுதியாக 'இவற்றுள் எதுவாகப் பிறக்கவும் அடையவும் நீ வரந்தரா விட்டாலும், ஏதாவதொன்றாக உன் மனையில் பிறக்க அருள் வாய்' என்கின்றார்.

செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்
எம்பெருமான் திருமலையில் ஏதேனும் ஆவேனே (4-10)

என்பது இவர் வாக்கு. ஒருவேளை இந்த அடியவருக்கு மறு பிறவி இருந்திருக்குமானால் இவர் திருவேங்கடத்திலேயே— அதிலும் அவ்விறைவன் அருகிலே எப்போதும் வீற்றிருக்கும் வகையிலேயே பிறந்திருப்பார் என்பது உறுதி. ஆனால் இவருக்கும் மறுபிறப்பு உண்டேயோ ?

இவர் அடுத்துவரும் 'வித்துவக் கோட்டு'ப் பதிகத்தில் பல உவமைகளைக் கையாளுகின்றார். இவை அனைத்தும் எண்ணி எண்ணி மகிழத்தக்கனவாம். ஒவ்வோர் உவமையும் ஒவ்வொரு வகையில் சிறந்ததாக அமைந்து, தத்தம் வழியில் உயிருக்கும் ஒன்றான இறைவனுக்கும் உள்ள தொடர்பினைக் காட்டுவதறிந்து மகிழ வேண்டியதாகும்.

குழவி சிறு குறைகள் செய்கின்றது. தாய் ஒருவேளை இல்லையாயினும் ஒரு வேளை கோபித்துக் கொள்வாள். அதனால் அக் குழந்தையை அதட்டுவாள்—ஒதுக்குவாள். (அது பொய்க் கோபமேயாம்.) இருப்பினும் அதனால் குழந்தை தாயை விட்டு அப்பால் செல்லுமோ? மீண்டும் மீண்டும் தன் தாயைத்தான் அஃது அணைத்துக் கொள்ளும். இது தான் உலகியல். இந்த உண்மையைக் காட்டி, ஆழ்வார் உயிராகிய குழந்தை செய்யும் தவற்றுக்காக இறைவன் கோபம்

கொண்டு ஒறுத்தாலும் அன்றி ஒதுக்கினுலும் தாம் அவனை விட்டுச் செல்ல இயலாது என்பதை நன்கு விளக்குகிறார்.

நாட்டை ஆளுகின்ற மன்னன் தவறிழைக்கின்றான்; குடிகள் துன்புறுத்தப் பெறுகின்றனர். எனினும் அவர்களுக்குப் புகலிடம் ஏது? அவன் கோல் செம்மையாகாதா ? நலம் விளையாதா? என்றே அக்குடிகள் அவனை நோக்கி நிற்பது உலகியல். உயிராகிய குடியும் தன்னை ஒறுக்கின்ற ஒருவனாகிய இறைவன் என்றேனும் மனம் திரும்பித் தன்னை ஆட்கொள்ள மாட்டானா என்று அவாவும் பெரு நிலையை ஆழ்வார் நன்கு காட்டுகின்றார்.

ஒரு கப்பல்; கரையில் இருக்கும்போது ஒரு காகம் அதன் பாய் மரத்து உச்சியில் உட்கார்ந்து கொள்கிறது; தன்னை மறக்கிறது. கப்பல் நடுக் கடலில் சென்ற பின் தரையில் பல விடங்களுக்குப் பறப்பதுபோல் வேறிடம் நாடுகிறது. எங்கே செல்ல முடியும்? எங்கும் கடல்—நீர்—நிலம் ஏது ? பறந்து பறந்து திரும்பத் திரும்ப அதே கப்பலின் கூம்பில்தான் வந்து தங்குகின்றது. இஃது உலகியல். உயிராகிய பறவை உலகப் பெருங்கடலில் எங்கெங்கோ தாவலாம் என முயல்கின்றது. ஆனால் அது தங்க இடம் ஏது. 'மனித குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை' என்று இயேசு பெருமான் சொல்லவில்லையா? எனவே திரும்பத் திரும்ப இறைவனையே அவ்வுயிராகிய பறவை சேர்கிறது என்கின்றார் ஆழ்வார்.

காதலன் காதலியை மணந்துகொண்டான்.வாழ்கின்றான் பின் மாறுபடுகின்றான். மனைவியை வைகிறான்; வாட்டுகிறான்; வருத்துகிறான். ஆனால் நல்ல குலமகள் அவற்றிற்கெல்லாம் உடைந்து காதலனை விட்டுச் சென்று விடுவாளோ? விடமாட்டாள்—இஃது உலகியல்—உயிராகிய காதலி தலைவனாகிய இறைவனுக்கு அடைக்கலமாகின்றது; ஆனால் பின் தலைவன் 'அடித்தடித்து'ச் சோதனை செய்கின்றான். இச் சோதனைகளுக்கு அஞ்சி அவ்வுயிர் இறைவனைவிட்டுச் செல்லாது என்பதை நன்கு விளக்குகின்றார் ஆழ்வார்.

உடலில் சிறு கட்டி; மருந்திட்டும் கட்டி மாறவில்லை. அறுவை மருத்துவம் செய்யவேண்டும். அறுவை மருத்துவனிடம் செல்லுகின்றான் நோயாளி. அம் மருத்துவனோ கொஞ்சமும் இரக்கம் இன்றிக், கத்தியை எடுத்து அறுத்துத் தள்ளி விடுகிறான். ஆனாலும் நோயாளி அவனை வெறுப்பதில்லை. மாறாக மகிழ்ந்து போற்றுகின்றான்: இஃது உலகியல். இவ்வாறு உயிர் உலகில் பல துன்பங்களை ஏற்று வாடுகிறது. சாதாரண முறைகள் பயனளிக்காதபோது இறைவன் அறுவை மருத்துவம் செய்ய முற்படுகிறான். அதனால் உயிர் நலமுறும். எனவே அந்த மருத்துவத்துக்கு அஞ்சி நல்லுயிர் அவனை விட்டு நீங்காது என விளக்குகிறார். இப்படி இன்னும் பல உவமைகளால் உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை ஆழ்வார் நன்கு விளக்குகிறார். அவர் வாக்கிலேயே காணலாம்.

அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி அதுவேபோன் றிருந்தேனே
(5-1)

கண்டார் இகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்
விண்டோய் மதில்புடைசூழ் வித்துவக்கோட் டம்மாநீ
கொண்டாளா யாகிலும்உன் குரைகழலே கூறுவனே
(5-2)

தான்நோக்கா தெத்துயரும் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே (5-3)

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர் தரினும் வித்துவக்கோட் டம்மாநீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே (5-4)

எங்கும்போய்க் கரைகாணு தெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே
(5-5)

என்பன அவர் பாடல்கள். இப்படியே இன்னும் பல உவமை களைக் காட்டுகிறார்.

விரிவஞ்சி மேலே செல்கிறேன்.

அடுத்த பதிகத்தில் ஆழ்வார் அகப்பொருள் துறையைக் காட்டுகிறார். 'கன்னியர் ஊடிக் கண்ணனை எள்குதல்' என்ற தலைப்பில் ஆயர்குலப்பெண்கள்புலர்ந்தும் மலர்ந்தும் ஊடியும் சாடியும் அவனைப் பழிக்கும் முகத்தால் அகச்சுவையை ஆழ்வார் அழகுபடக் காட்டுகின்றார். இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேரின்ப நெறிக்கு ஏற்ற சிற்றின்பச் சுகப் பொருள் துறையைப் பாடாத மெய்யடியார் இல்லை. இப் பத்தில் ஆழ்வார் கண்ணன் கோபியர்களுடன் எவ்வெவ்வாறு கலந்தும் குழைந்தும் மறைந்தும் வெளிப்பட்டும் காட்டியும் மறைந்தும் விளையாடினான் என விளக்குகிறார். இவற்றை ஆழ்ந்து நோக்கின் இறைவன் உயிர்கள் பொருட்டுக் செய்யும் அருள்விளையாடல்களே இவை என்பது நன்கு விளங்கும். இறைவன் உயிர்களுக்கு இடையில் விளையாடும் ஆடலை எண்ணித்தானோ என்னவோ அடியார் இப்பத்தின் மூன்றாவது பாடலைப் பாடுகிறார். பல தோழிப் பெண்களுக் கிடையில் அவன் ஒருவன் ஆடும் ஆடலை நாமும் கண்டு மகிழ வேண்டாமா? இதோ அவர் வாக்கு.

கருமலர்க் கூந்தல் ஒருத்தி தன்னைக்
கடைக்கணித்து, ஆங்கே ஒருத்தி தன்பால்
மருவிமனம் வைத்து, மற்றொருத்திக்கு
உரைத்து, ஒருபேதைக் குப்பொய் குறித்து,
புரிகுழல் மங்கை ஒருத்தி தன்னைப்
புணர்தி, அவளுக்கும் மெய்யன் அல்லை
மருதிறுத் தாய்உன் வளர்த்தி யூடே
வளர்கின்றதால் உன்றன் மாயை தானே (6-3)

அடுத்து வருகின்ற பத்துப் பாடல்களும் தேவகி புலம்பலாக அமைகின்றன. தேவகி மைந்தனைப் பிறந்தும் அவள் அவனை வளர்க்கும் பேறு பெறவில்லை; வாசுதேவன் கையில் தவழும் வாய்ப்பினை அவருக்குக் கண்ணன் நல்கவில்லை. நந்தகோபன் வீட்டில் யசோதை இளஞ்சிங்கமாக வளர்ந்தான் மாயன். இந்த நிலையை எண்ணி, வாய்ப்பளித்தும் நழுவ விட்டுப் பிள்ளை இன்பத்தை இழந்த அந்தத் தாய் உள்ளம் எவ்வளவு வாடியிருக்கும்? இந்த நிலையை எண்ணிப் பார்த்தார் யார்? ஒருவருமில்லை, குலசேகரர் எண்ணினர்—உள்ளம் குமுறினர். உண்மையான தேவகிகூட அவ்வாறு புலம்பி இருக்கமாட்டாள் எனக் கூறலாம். ஆனல் ஆழ்வார் தம்மை மறந்த நிலையில் தம்மையே தேவகி ஆக்கிக்கொண்டு புலம்பும் புலம்பல் நம்மையும் நீர் விட்டு வாய்விட்டுப் புலம்ப வைக்கிறது.

கண்ணனை எவ்வெவ்வாறு தாலாட்டி இருக்கவேண்டும் என்று தாய் உள்ளம் எண்ணுகிறது. அதே வேளையில் அந்த இன்பத்தை இழந்த நிலையை எண்ணி வாடுகிறது. இளமையில் குழந்தைக்குச் செய்யும் பணிவிடைகளையும் அதைச் சீராட்டிப் பாலூட்டி அள்ளிஅணைத்து அகமகிழும் நிலையையும் எல்லாம் எண்ணிப் பார்க்கிறது. அப்பிள்ளைமை இன்பத்தை எண்ணி உருகி நிற்கிறது அத்தாயுள்ளம். தவழ்ந்தும் தளர்நடை நடந்தும் இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் உண்ணும் நிலையினையும் காணமுடியவில்லையே என நினைக்கிறது அவ்வுள்ளம். தாயின் தனத்தில் வாய் வைத்து உண்ணும் நிலையினையும் பிற விளையாடல்களையும் எண்ணுகின்றது. கண்ணன் பின் வளர்ந்து செய்யும் விளையாடல்களையும் கண்களில் ஒளிவிடக் கண்டு நேரில் காணவில்லையே எனக் கவல்கிறது தேவகி உள்ளம்—தேவகி உள்ளமா கவல்கிறது? அது கவலை பெற்றதோ இல்லையோ நாமறியோம். ஆனல் தம்மை மறந்த குலசேகரர்—தாயாய் மாறிய குலசேகரர் உள்ளம் கவல்கிறது. வாய்பாடுகிறது.

முந்தை நன்முறை அன்புடை மகளிர்
முறைமுறை தத்தம் குறங்கிடை இருத்தி
எந்தையே என்றன் குலப்பெருஞ் சுடரே
எழுமுகில் கணத்து எழில்கவர் ஏறே
உந்தை யாவன் என்றுரைப்ப நின்செங்கேழ்
விரலினும் கடைக் கண்ணினும் காட்ட
நந்தன் பெற்றனன் நல்வினை இல்லா
நங்கள் கோன்வசு தேவன் பெற்றிலனே (7 - 3)

என்றும்,

தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணு
தவழ்ந்தெ ழுந்து தளர்ந்ததோர் நடையில்
மண்ணிற் செம்பொடி ஆடிவந் தென்றன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ!
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரிவாய்க் கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓகொடு வினையேன்
என்னை என்செயப் பெற்றதெம் மோயே (7 - 6)

என்றும்,

குழகனே என்றன் கோமளப் பிள்ளாய்
கோவிந்தா என்குடங் கையில் மன்னி
ஒழுகுபே ரெழில்இ ளஞ்சிறு தளிர்போல்
ஒருகை யால்ஒரு முலைமுகம் நெருடா
மழலை மென்னகை இடையிடை யருளா
வாயி லேமுலை இருக்க என்முகத்தே
எழில்கொள் நின்திருக் கண்ணிணை நோக்கம்
தன்னை யும்இழந் தேன்இழந் தேனே (7 - 7)

*என்றும் பிள்ளைமை இன்பத்தை இழந்த நிலையினை எண்ணி எண்ணி ஏங்குகிறார் ஆழ்வார். இதில் திருமால் கண்ணனுகப் பிறந்து காட்டிய விளையாடல்கள் அனைத்தையும் விளக்கிக் காட்டி அடியவரை அகமகிழ வைக்கின்றார்.*

கண்ணன் விளையாட்டைக் காட்டிய ஆழ்வார் இராமனை மறப்பாரோ! மனித குலத்துக்கே விளக்கமென வந்த இராமன் புகழைத் தாலாட்டின் மூலமும் தசரதன் புலம்பல் வழியும் உலகுக்கு உணர்த்துகின்றார்--தாலாட்டில் பாட்டின் பின் பாட்டாக அப்பத்துப் பாட்டிலும் இராம காதை அனைத்தையும் உள்ளடக்குவதோடு ஒவ்வொன்றிலும் இராமனின் அருள்நல இனிமையைக் காட்டுகின்றார். குழந்தையைத் தாலாட்டுவது சிறந்த இன்பம் தருவது. அந்த இன்ப நிலையில் தம்மை மறந்து 'வெறி' கொண்டவராக விளங்குகின்றார் ஆழ்வார். கண்ணன் தாலாட்டினை இழந்த தேவகியின் புலம்பலைப் பாடிய அதே நிலையில் இராமனைத் தம் வாயாரத் தாலாட்டுகின்றார். இத்தாலாட்டில் இராம காதையே அடங்கி விடுகிறது. இராமாயணத்தைச் சுருக்கமாக அறிந்துகொள்ள விரும்புகின்றவர்கள் இப்பாடல்களைப் படித்தால் போதும். இராம சரிதத்தில் முக்கிய நிகழ்ச்சிகளை விடாமலும் சுவைபடவும் ஆழ்வார் காட்டும் திறன் அறிந்து இன்புறத்தக்கதாகும். இப்பதிகத்தை ஆழ்வார் கணபுரத்தில் உள்ள இறைவன்மேல் பாடியதாகவே அமைக்கின்றார். கோசலையின் மணிவயிறு வாய்த்து, அயோத்தியில் பிறந்து, தாடகை உரம் உருவி, சனகன் மருகனாகி, தாசரதியாகி, மைதிலியின் மணவாளனாகி, செல்வம் பரத நம்பிக்கே அளித்து, இளையவனோடு அருங்கானம் அடைந்து, வாலியைக் கொன்று இளைய வானரத்துக்கு அரசளித்து, மலையதனால் அணைகட்டி அலைகடலைக் கடந்து, சிலையதனால் இலங்கையை அழித்து இளையவருக்கு அருள் செய்து, அயோத்தி நகர் திரும்பிய 'அரங்கத்தும் கணபுரத்தும் வாழும் கருமணியே' எனக் கூறித் 'தாலேலோ' சொல்லும்போது அவ்விறையருளில் நாமும் உறங்கத்தானே வேண்டும்?

கொங்குமலி கருங்குழலாள் கோசலைதன் குலமதலாய்!
தங்குவரும் புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதி!
கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்தெம் கருமணியே!
எங்கள்குலத் தின்னமுதே! இராகவனே! தாலேலோ (8 - 3)

மலையதனால் அணைகட்டி மதில்இலங்கை அழித்தவனே
அலைகடலைக் கடைந்தமரர்க் கமுதருளிச் செய்தவனே
(8 - 8)

என்றும் பாடிப் பாடித் தாலாட்டுகின்றார் ஆழ்வார். அதை ஒட்டி அடுத்துவரும் பதிகத்தே ஆழ்வார் தம்மைத் தசரதனாக்கிக் கொள்ளுகிறார். தசரதன் இராமன் பிரிவால் எவ்வெவ்வாறு வருந்தினான் என்பதை எண்ணிப் பார்க்கும்போது அவர் உள்ளம் 'துண்' என்கின்றது—வாய் வெடிக்கிறது—வார்த்தை உருவாகிறது—பாட்டுப் பெருகி வருகிறது.

வெவ்வாயேன் வெவ்வுரைகேட் டிருநிலத்தை
 வேண்டாதே விரைந்து வென்றி
மைவாய களிறொழிந்து தேரொழிந்து
 மாவொழிந்துவனமே மேவி
நெய்வாய வேநெடுங்கண் நேரிழையும்
 இளங்கோவும் பின்பு போக
எவ்வாறு நடந்தனையெம் இராமாவோ
 எம்பெருமான் என்செய் கேனே (9 - 2)

என்றும்,

மெல்லணைமேல் முன்துயின்றாய் இன்றினிப்போய்
 வியன்கான மரத்தின் நீழற்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ!
 காகுத்தா கரிய கோவே (9 - 3)

என்றும்,

பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாப்
 புனைந்துபூந் துகில்சேர் அல்குல்
காமரெழில் விழல்உடுத்துக் கலனணியா
 தங்கங்கள் அழகு மாறி

ஏமருதோள் என்புதல்வன் யான்இன்று
செலத்தக்க வனந்தான் சேர்தல்
தூமறையீர் இதுதகவோ! சுமந்திரனே!
வசிட்டனே! சொல்லீர் நீரே (9 - 7)

என்றும்,

என்னையும் என்மெய்யுரையும் மெய்யாகக்
கொண்டுவனம் புக்க எந்தாய்
நின்னையே மகனாகப்பெறப் பெறுவேன்
ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே (9 - 9)

என்றும், தசரதன் வாய்விட்டுக் கூறுததை எல்லாம் தாம் வாய் விட்டுக்கூறி, ஆழ்வார் தம்மை மறந்து பாடுகின்றார்.

இதே இராமாயண அடிப்படையில் தமது கடைசிப் பதிகத்தையும் பாடி முடிக்கின்றார் குலசேகரர். தில்லைத் திருச்சித்திரகூடத்து இறைவனைப் பாடுமுகத்தான் இராமாயணத்தையேமுறைப்படுத்திக்காட்டுகிறார் ஆழ்வார்.'இராம சரிதம்' என்றே அதற்குத் தலைப்பும் உள்ளது. பாடல்களின் முற்பகுதி அனைத்தும் இராமனைக் குறிக்க, பிற்பகுதி திருச்சித்திரகூடத்தையும் ஆழ்வார் வேண்டுகோளையும் காட்டுகின்றது. மேலே கண்ட முன்னைய பத்தினும் இப்பத்துப்பாட்டில் தெளிவாகவும் விளக்கமாகவும் முழு இராமயாணத்தை ஆழ்வார் பாடி முடித்துத் தமக்கு வேண்டிய வரத்தையும் கேட்டுக்கொண்டு, உலக மக்கள் அவனையும் எப்பொழுதும் இறைஞ்ச வேண்டும் என்று வேண்டி முடிக்கின்றார் ஆழ்வார். முந்தைய பாடல்களிலெல்லாம் அவனைக் காணப் பெறும் பேறுபற்றியும் அவன் உயர்நிலையினையும் தம் உள நிலையையும் உற்றார் பெறும் பயனையும் காட்டி, இறுதியில் அவன் வைகுந்தம் சென்ற சிறப்பையும் அவனை உலகம் வணங்கவேண்டிய இன்றியமையாமையையும் கூறி மங்கள வேண்டுகோளோடு முடிக்கின்றார். நானும் அவ்வாறே அவர் பாடலை முன்வைத்து விடைபெறுகின்றேன்.

அன்று சராசரங்களை வைகுந்தத் தேற்றி
அடல்அரவப் பகையேறி அசுரர் தம்மை
வென்றிலங்கு பணிநெடுந்தோள் நான்கும் தோன்ற
விண்முழுதும் எதிர்வரத்தன் தாம மேவிச்
சென்றினிது வீற்றிருந்த அம்மான் றன்னைத்
தில்லைநகர் திருச்சித்திர கூடந் தன்னுள்
என்றுநின்ற னவனிவ னென்றேத்தி நாளும்
இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர் நீரே
(10-10)

## 6. பாரதி—என்றும் வாழும் கவி

பாரதி என்ற சொல்லுக்கே கலைமகள் என்று பொருள்: கல்விக்கு முதலிடமாய்க் கலைகளுக்கெல்லாம் பிறப்பிடமாய்ச் சொல்லும் பொருளுக்கெல்லாம் முதலிடமாய் அமைந்த அந்தத் தெய்வத்தைத்தான் நாம் பாரதி என்கின்றோம். அந்தத் தெய்வமாம் பாரதி என்றும் மங்காது சீரிளமைத் திறங் குன்றாத வகையில் சிறக்க வாழும் தெய்வமாகும். உலகமும் இதில் வாழும் உயிர்களும் அவற்றின் வாழ்க்கையும் செயல்களும் பிற அனைத்தும் அத் தெய்வத்தின் ஆணைவழியே இயங்குகின்றன. இத்தகைய முதற் பொருளாகிய தெய்வத்தின் பெயர் கொண்ட யார்தான் சிறக்க வாழாதிருக்க முடியும்? எனவே நம் பாரதியின் பெயர்—சங்கம்—பிற அனைத்தும் காலத்தை வென்று வாழ்வனவே!

இக் கல்கத்தாப் பெருநகரில் பாரதி தமிழ்ச் சங்கம் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுற்றன. திரும்பிப் பார்க்கும் போது இந்தக் கால் நூற்றாண்டில் இச்சங்கம் செய்த பெருந் தொண்டுகள் நம் கண்முன் காட்சி அளிக்கின்றன. இளமையில் சிறு சிறு ஊறுகளுக்குத் தப்பி, தொண்டேவாழ்வு என்ற அடிப்படையில் தம்மை மறந்து பணியாற்றும் யாரும்—எதற்கும் அஞ்சாது கடமை வீரராய் நின்று செம்மைப் பணிபுரியும் யாரும்-நூற்றாண்டு நூற்றாண்டுக் காலங்களில்

தம்மை வாழவைத்து நிற்பர்; அப்படியே அத்தகைய நல்லவரோடு தொடர்பு கொண்ட அனைத்தும் காலத்தை வென்று வாழும். இக்கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கமும் அந்த வகையைச் சார்ந்ததே. இது இன்று வெள்ளிவிழாக் கொண்டாடுகின்றது. இது தொடக்கவிழா; இதுபோன்றே பல விழாக்கள் -பல நூற்றூண்டு விழாக்கள் நடைபெறும்-நடைபெறும் நிலையில் நாட்டில் இச் சங்கம் தமிழர்தம் மொழி, கலை, பண்பாடு, நாகரிகம் அனைத்தையும் விளக்கும் ஒளிவிளக்காக விளக்கமுறும் என்பது துணிவு. விளக்கம் பெறுக என நானும் நல்லவரோடு வாழ்த்துகிறேன். இவ்வெள்ளி விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பளித்த இப்பாரதி தமிழ்ச்சங்கத்தாருக்கு என் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சங்கம் பாரதியின் பேரால் அமைந்துள்ளது. முதற் பொருளாம் பாரதியைப் பற்றி முதலில் கண்டோம். அதே சிறப்புப் பெயரை வாழ்விடைத் தாங்கிய நல்லவர் சிலர். அவருள் தலையாயவர் இந்த நூற்றூண்டின் தொடக்கத்தில் நம்மிடை வாழ்ந்த சுப்பிரமணிய பாரதியாராவர். அவர் அன்று மட்டும் வந்தவரல்லர்-என்றும் வாழ்கின்ற இறவாத கலைஞர் அவர் என்பதை உலகறியும். அவரது புகழ்பாடும் இப்பாரதி தமிழ்ச் சங்கத்தார் அவரைப் பற்றிய பேச்சினை— இவ்வெள்ளிவிழாப் பேச்சு வரிசையில் முதலாவதாக-அதிலும் ஆங்கிலத்தில் அமைத்திருப்பது சாலச் சிறந்த ஒன்றாகும். பாரதி யார்? அவர் எப்படிச் சாகா வரம் பெற்றார்? ஆய்ந்து காண்போம்.

1882-இல் தமிழ் நாட்டுத் தென் கோடியிலுள்ள நெல்லை மாவட்டத்தில் எட்டைய புரத்தில் சின்னசாமி ஐயர் இலட்சுமி அம்மையார் இவர்தம் மகனாகப் பிறந்தவர்தாம் பாரதி. இப்பாரதி என்னும் பட்டம் இவருக்கும் பதினோராவது வயதில் அவ்வூர் சமஸ்தானப் பெரும் புலவர்களால் அளிக்கப் பெற்றது. அக்காலத்திலேயே இவர் சிறந்த கவிஞராய் விளங்கினார் என்பது நன்கு தெரிகின்றதன்றோ? இளமையில் தாயை இழந்த இவர் தமிழன்னையினையே தாயாகக்

கொண்டார். 14-வது வயதில் திருமதி செல்லம்மாளை மணந் தார்: எளிய வாழ்வு வாழ்ந்தார். வீரம் இவரோடு சேர்ந் திருந்தது. எனவே ஒரு சிறு வேறுபாட்டின் காரணமாக இவர் எட்டையபுரத்தை விட்டு வெளியேறினர். 1898 இல் காசி சென்று நான்கு ஆண்டு தங்கினர். இந்துஸ்தானி கற்ருர்; ஆங்கிலமும் நன்கறிந்தார். ஆகப் பல மொழி அறிந்தவ ராளுர். பின் 1902-இல் தமிழ் நாடு திரும்பினர். இளமை யிலேயே பல பாடல்களைப் பாடிய இவர் பின், நாட்டு நிலைக் கேற்ப அந்நியரை விரட்டி அடிமை வாழ்வு அகற்றி மக்கள் நலம் பெறத்தக்க நெறியில் பல நல்ல 'தேசிய கீதங்களைப்' பாடினர். பின்அரசாங்க அடக்குமுறை காரணமாக1908 இல் புதுவை சென்று 1918இல் மீண்டார்.புதுவையில் அவர்பாடிய பாடல்கள் பலப்பல-அவையே அவரை என்றும் வாழவைக்க உதவுகின்றன. பின் தம் மாமியார் வீட்டில் கடையத்தில் சிலநாள் தங்கினர்.1919இல்சென்னை வந்து சுதேசமித்திரனில் பணியாற்றினர். அதற்குள் அவரது பாடற்றெகுதி வெளி வந்தது. தம்மை மறந்த கவிஞராகிய புலவர் பாரதி-கவிதை யால் என்றென்றும் வாழ முடிவு செய்தமையின்-திருவல்லிக் கேணி கோயில் யானையால் துன்புறுத்தப் பெற்று நோயுற்று 11-9-1921இல் அமரானர். அவர் கவிதைகள் அவரை என் றும் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன.

பாரதியார் தம் காலத்தில் தமிழுக்குத் தளராது தொண்டு செய்து கொண்டிருந்த சாமிநாத ஐயர் அவர்களைப் பற்றிய பாடல் இங்கு நினைவுக்கு வருகிறது. தமிழ்த் தொண்டே வாழ்வாகக் கொண்ட ஐயரவர்கள் பெரும் வாழ்க்கை வசதிகளைப் பெருது நின்ருலும், அவர் புகழ் என்றென்றும் வாழும் வகையில் -தமிழ் உள்ளவரையில் சிறக்கும் என்பதைப் பாரதியார் காட்டியுள்ளார்.

நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
இன்பவகை நித்தம் துய்க்கும்
கதியறியோம் என்றுமனம் வருந்தற்க
குடந்தைநகர்க் கலைஞர் கோவே

பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சில் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே

என்று பாரதியார் சாமிநாத ஐயர் அவர்களைப் பாராட்டிய அதே பாடல் இப்பாரதிக்கும் பொருந்துவதாகும். இவர் வாழ்வில் பெறக்கடவதாகிய இன்பங்கள் அனைத்தையும் பெறுதவராயினும் என்றென்றும் இறப்பின்றித் துலங்குவார் என்பது உறுதி. எனவேதான் இன்று நான் இத்தலைப்பினை எடுத்துக்கொண்டேன். அவர் பாடலையே அவருக்கு உவமையாக்கி மேலே செல்கின்றேன்

பாரதி என்றும் வாழக்காரணமாயிருப்பவை கவிதைகள். ஆம்! அவை கவிதைகள் என்பதற்கு மேனாட்டுப் புலவர் பலர் பலவகைகளில் நல்ல விளக்கங்கள் தந்துள்ளார். கவிதை வாழ்வோடு பொருந்தியதென்றும், ஒரு காலத்துக்கும் ஒரு நாட்டு மக்களுக்கும் ஓர் இனத்துக்கும் மட்டுமன்றி மனித சமுதாயத்துக்கே-உயிரினத்துக்கே பொருந்திய பொருட் செறிவை உடையதென்றும், கற்பனையோடு கலப்பினும் அக்கற்பனையும் வாழ்வை வளம்படுத்தவே பயன்படுவது என்றும், வேறுபாடற்ற எல்லாரையும் இணைக்கும் தெய்வநெறியை வலியுறுத்துவதென்றும், கவிஞன் உள்ளத்து, யாப்புக்குக் கட்டுப்பட்டு ஏங்கிநில்லாது, ஊற்றுப்பெருக் கெடுத்து ஓடிவருவது என்றும் இன்னும் பலவகையில் ஏற்றம் பெற்றது என்றும் மேலைநாட்டு அறிஞர்கள் நன்கு காட்டியுள்ளார்கள்.

கவிதை எப்படி உருப்பெற்று ஓடிவரும் என்பதையும் அதனால் உலகம் பெறும் நன்மையையும் நம் பாரதியே அழகாகக் காட்டியுள்ளார்கள்.

உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின்
வாக்கினிலேயே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்

பள்ளத்தில் வீழ்ந்திருந்த குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

என்பது அவர் வாக்கு. ஆம்? தம்மை மறந்து ஊற்றுப் பெருக்கெனக் கவிபாடும் புலவர்தம் கவிதைகள் நாட்டு மக்களை விழிப்புற்று வீறுபெறச் செய்து இன்பவாழ்வை அளிப்பன அல்லவோ! இப்பாரதி பாடிய பாடல்களைத் தெரு எல்லாம் முழங்கிய காரணத்தாலன்றோ பாரத நாட்டு மக்கள் உரிமை உணர்வு பெற்று, வீறு பெற்றெழுந்து, விடுதலை பெற்றுச் செம்மாக்கின்றனர்? இவ்வாறு இவர் பாடிய கவிதை இலக்கணத்துக்கு இவரே சான்றாகின்றார். பாரதியும் கவிஞர் எப்படி அமைய வேண்டுமோ—எத்தகைய கவிதைகள் பாட வேண்டுமோ அப்படியே அமைந்து அப்படியே பாடித் தம்மை மறந்து நின்ற காரணத்தாலேயே தரணி உள்ளளவும் வாழும் செம்மை வாழ்வு பெற்றார். அவ்வாறு அக்கவிஞரைச் சாகாது வாழ வைத்த கவிதைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் காணுமுன் அக் கவிதைகள் காட்டும் அறநெறி வழியே அப்புலவர் வாழ்ந்து காட்டினார் என்ற உண்மையையும் இங்கே கூறக் கடமைப் பட்டிருக்கிறோம் நாம். 'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்ற குறளுக்கு ஏற்பச் சொல்லொன்று செயலொன்றாக உள்ளவர்களைக் காணும் நமக்கு, சொல்லியவாறே வாழ்ந்து காட்டிய பாரதி ஒரு பெருவிளக்காக அமைகின்றார் என்பது பொருந்தும். ஆம்! பாரதி பாடல் வழிமட்டுமன்றி அப்பாடல்களில் விளக்கமாகிய வாழ்க்கை நெறியிலும் தமக்கென வாழாது தம்மை மறந்து எளிய—ஆனால் இனிய—தெய்வ வாழ்வில் சிறக்க வாழ்ந்தார் என்பதைத் தெளியின் அவர் தூய உள்ளத்துக்கும் அதன்வழி எழுந்த தெய்வப்பாடல்களுக்கும் தேவையான அடிப்படை உண்மை நமக்குத் தெற்றென விளங்குமல்லவா?

பாரதி பாடிய பாடல்கள் பல இவரை அமரராக்கின. அவற்றைக் காண்போம்.

பாரதி தேசியப் பாடல்களைப் பாடி மக்களை வீறுப்பெறச் செய்தார் எனக் கண்டோம். அவைகள் தரத்தில் உயர்ந்தவைதாம். அறியா மக்களையெல்லாம் தட்டி எழுப்பி, தெருத் தோறும் அவைகள் உணர்வைத் தந்தன. அந்நிய ஆங்கில ஏகாதிபத்தியத்தை நாட்டில் கால் ஊன்றுவகையில் அதை அடித்து விரட்டிய பெருமைக்குரியன அப்பாடல்கள். வ. உ. சிதம்பரம்பிள்ளை வெள்ளையனை எதிர்த்து வீறு பேசியதாகப் பாரதி பாடிய பாடல்களை என் இளமைக் காலத்தில் நானே குதித்துக் குதித்துப் பாடியிருக்கிறேன். அத்தகைய பாடல்கள் கேட்போரை வெறி கொள்ளச் செய்தன. உரிமைக்குப் போராட உணர்வூட்டின. நாட்டு ஒருமை உணர்வே அந்நலனை இம்மண்ணில் நில்லாது அகற்றிற்று. 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்', 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார்', 'விடுதலை—விடுதலை—விடுதலை' முதலிய முழக்கப் பாடல்களும் இவை போன்ற பிறபாடல்களும் 1947-க்கு முன் இந்த நாட்டில் உயிர்நாடிகளாக விளங்கின. எனினும் உரிமை பெற்றபின் அவற்றைப் பாடுவர் சிலர்.

அவை விடுதலை தேடித்தந்த பாடல்கள் என்று வரலாற்று எல்லையில் வைத்து எண்ணப்பெறும் சிறப்பினைப் பெறும் என்றாலும், அவை எல்லோராலும் எக்காலத்தும் பாடப் பெற்றுக் காலத்தை வென்று வாழ்ந்து, அவற்றைப் பாடிய பாரதியையும் சாகா வரம் பெறச் செய்யுமா என்பது இப்போதே நமக்கு விளங்கவில்லை. இன்று அவற்றை அந்த உணர்வோடும் உள்ளத்துப் பிடிப்போடும் பாடுவர் இலரே—பாடத்தேவையும் இல்லையே. ஆனால் அதே வேளையில் பாரதியை நித்தியத்துவ நெறிக்கு ஈர்த்து அவரை வாழ வைக்கும் பாடல்களும் பலவன்றோ? காலமும் நாடும் பிறவும் வேறுபாடு காணு வகையில் அவை வாழ்கின்ற காரணத்தாலேயே அவற்றை ஒட்டிப் பாரதியும் காலத்தை வென்ற

கவியாக விளங்குகின்றார் என்பது தேற்றம். அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கே காண்போம்.

கவிதையைப் பாரதியே பாராட்டுகின்றார். அதைத் தலைவியாக்கி மகிழ்கிறார். 'மனைவியாம் கவிதைத் தலைவி' என வாயார வாழ்த்துகிறார் பாரதி. வாழ்வோடு பொருந்திய உற்ற செல்லம்மாளைக் காட்டிலும் இத்தலைவியைச் செல்வ முற்றவளாகக் காட்ட நினைக்கிறார் கவிஞர். உண்மையும் இது தானே. இக்கவிதை மனைத் தலைவிதானே பாரதிக்குச் சாகா வரம் தந்து வாழ வைக்கின்றாள். அக்கவிதைத் தலைவியை,

மனைக்கண்

வாழ்வினை வகுப்பாய் வருடம் பலவினும்
ஓர்நாட் போலமற் றோர்நாள் தோன்றாது
பலவித வண்ணம் வீட்டிடைப் பரவ
நடத்திடும் சக்தி நிலையமே

என்று அவர் பாராட்டுகின்றார். அறிதோறறியாமை கண்டற்றால்கவிதைத்தலைவி வீட்டில்ஒருநாளுக்கு மற்றொருநாள்புதுப் புது அறிவுசால் செல்வங்களைப் படைத்துச் சிறக்கிறாளன்றோ? வாழ்வில் அனுபவத்தில் பெறும் அனைத்தையும்-நல்லதையும் அல்லதையும்—உயர்வையும் தாழ்வையும்—ஒன்றிய வகையில் பிணைத்து அவ்வப்பொருளையும் அததன் திறனுக்கேற்ப அழகுறச் சொல்லும் பொருளும் செறிய, அதனால் வாழ்வின் வளம் மலரச் செய்யும் சக்தி கவிதைக்கு உண்டல்லவா? அக்கவிதைப் பெண்ணின் காதலர் பாரதி காலத்தை வென்று வாழ்வதில் வியப்பில்லையன்றோ!

அக்கவிதைப் பெண்ணின் அடிமையாக இருந்து, தாம் பெற்ற நலமெலாம் நாமும் பெற இச்சாகாக் கவிஞர் நினைவு கூர்ந்து நோக்குகின்றார். அந்நோக்கின் உள்ளொளியில் மற்றொரு கவிதை உருவாகின்றது. 'கவிதைக் காதலி' எனவே

அதன் தலைப்பையிட்டு நமக்கு வாரி வழங்குகின்றார். இதில் கவிஞர்,

அந்தநாள் நீயெனை அடிமையாக் கொளயாம்
மானிடக் குழாத்தின் மறைவுறத் தனியிருந்து
எண்ணிலா இன்பத்து இருங்கடல் திளைத்தோம்

என்று தாமும் அக்கவிதைக் காதலியும் தனித்திருந்து பெற்ற இன்ப நிலையினை விளக்குகிறார். கவிதைத் திறன் தனிமையில் தம்மை மறந்த நிலையில் முகிழ்ப்பதை இவ்வாறு இன்பம் பொங்கக் காட்டுகிறார். உலகத் தலைவியாகிய பெண்ணோடு தனித்துப் பெறும் இன்பவழித்தோன்றும் மக்கள் அவரவர் தம் வீட்டைக் காக்க, இக்கவிதைத் தலைவி பெறும் மக்களாகிய உரையும் பாட்டும் உலகையே காக்கின்றன வல்லவோ? ஆனால் பாரதி அக்கவிதையை,

நீயே உயிரெனத் தெய்வமும் நீயென
நின்னையே நோக்கி நெடுநாள் போக்கினேன்

என்று பாராட்டி அவரும் அவளும் நெடுநாள் இணைபிரியா திருந்த தெய்வ வாழ்வை விளக்குகிறார். உண்மையில் அவர் செல்லம்மாளுடன் வாழ்ந்த நாட்களைக் காட்டிலும் மிக அதிகமாகக் கவிதைத் தலைவியொடு வாழ்ந்திருக்கின்றார். எனவே பாரதியை மட்டுமன்றி உலகில் உள்ள எல்லாக் கவிஞர்களையும்—பாரதி பாராட்டிய வள்ளுவர், இளங்கோ கம்பர் முதலிய புலவர்களையும்—உண்மையாம் கவிதைத் தலைவி காலத்தை வென்று வாழவைப்பாள் என்பது தேற்றம். பாரதியை வாழவைத்த அக்கவிதைகளுள் ஒரு சில இங்கே காணலாம்.

தன்னை மறந்து கவிதையொடு தன்னைக் கலக்கச் செய்து ஒன்றிய உணர்வுடைய கவிஞனே காலத்தை வெல்லும் அக் கவிதை வழித் தானும் வாழ்வான் எனக் கண்டோம். அக்

கவிதையின் கருப் பொருளாக அமைவனவே அவற்றைச் சிறக்க வாழவைக்கின்றன. அவை மக்கட் சமுதாய வாழ்வில் வேறுபாடற்று விளங்குவன—என்றும் உயிர்வாழ வகை காண்பன—மானத்தை வென்று வாழ்வன.

பாரதி தெய்வநெறியைப் பாராட்டுகின்றார். சக்தியைப் பாடிப் புகழ்கின்றார். முருகனையும் அவர் மூத்தவனையும் போற்றுகின்றார். எனினும் அவர் உள்ளத்தில்—உலக சமுதாயத்தை நோக்கும்போது சமரச உணர்வே அரும்புகின்றது. எல்லாத் தெய்வமும் ஒன்றென்ற உணர்வே பிறக்கின்றது. அந்த ஒருமை உணர்வில் திளைக்கும் அடியவர் யாரையும் காலம் மறப்பதில்லை. 'நாள் செய்வது நல்லோர் செய்யார்' என்பது நம் நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி. பலர் முயன்றும்—நல்லவர் முயன்றும் வெற்றி காணமுடியாதவற்றை எல்லாம் காலம் செய்து வெற்றி வழி காட்டுகின்றது. எத்தனையோ வெற்றுப் பாடல்களைத் தம் வாழ்நாள் வரையிலாவது வாழவைக்க வேண்டும் எனச் சிலர் விரும்புவர். எனினும் அவற்றின் பயனற்ற தன்மையை நோக்கி, காலத்தேவன் அப்போதே—தோன்றிய சில நாட்களிலே அவற்றுக்குச் சமாதி கட்டி விடுகிறான். குறளும் பிற சங்க இலக்கியங்களும் இரண்டாயிர மாண்டுகள் கழித்தும் இன்னும் வாழ்கின்றனவே!

பாரதியினும் ஒருமை உணர்வாகிய சமயநெறி அவர் பாடலில், நன்கு விளங்கும். எல்லாச் சமயங்களில் கூறப் பெறும் தெய்வங்கள் அனைத்தும் ஒன்றே என்றும் அவனே வேண்டுவார் வேண்டிய வகையில் காட்சியளிக்கின்றான் எனவும் பாரதி காட்டுகின்றார்.

> ஆத்தி சூடி இளம்பிறை யணிந்து
> மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
> மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
> ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்

உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளிவுறு அறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகன்றார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்

என்ற பொதுமை நலப்பாடல் அவரை 'அமர வாழ்வு வாழச் செய்துவிட்டது. 'தன்தெய்வம் என் தெய்வமென்று' தொடர்ந்து எல்லாச் சமயத்தாரும் போற்றும் தெய்வம் அனைத்தும் ஒருவனே என்பதைக்காட்டி அவனே அருட் பெருஞ்சோதியாகிய ஒளிவடிவாம் அருளுருப் பெற்றவன் என்பதையும் விளக்கித் தெய்வநெறிச் சமரசத்தைத் தேடித் தந்தார் பாரதி. அவ்விறைவன் அறிவே வடிவானவன் என்ற உண்மையை வேறு ஓரிடத்தில்.

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்—பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ

என உலகமக்களை வலிய அழைத்து, பல தெய்வப் போராட் டத்தை நிறுத்தி, அறிவொளியாம் ஆண்டவனை ஒன்றியி ருந்து காணுங்கள் என உபதேசம் செய்கிறார். அவர்தம் நிலைக்கு அவர்,

சுத்த அறிவே சிவமென்று கூறும்
சுருதிகள் கேளீரோ—பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை அழிவீரோ'

என இரக்கப்படுகின்றார். எனவே அவர்தம் தெய்வநெறி 'ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு' என்பதாம். இதுவே மனித சமுதாயம் என்றும் ஏற்று நடக்கவேண்டிய தெய்வ

நிலை. இதில் உண்டான தடுமாற்றம்தான் நம் நாட்டில் பழங்காலத்தில் பலபோர்களையும் இடைக்காலத்தில் மத்திய ஆசியாவில் பல போர்களையும் உண்டாக்கிற்று. இன்றும் நம் நாட்டை இரண்டாக்கி நேற்று அஞ்சத்தக்க போர் நிலையையும் உருவாக்கிற்று. நாடும் உலகும் நாமும் பிற உயிர்களும் என்றும் இன்பில் திளைக்க வேண்டுமானால் பாரதி சமரசத் தெய்வ நெறி வாழ்வில் மலரவேண்டும். மலருமா? காலத்தேவன் பதில் கூறுவான்.

இனி 'இச்சமய நெறி தழைக்கும் உள்ளம் எப்படிப் பட்டது?' என்ற கேள்விக்குப் பாரதியே பதில் சொல்லுகிறார். அவ்வுள்ளம் 'பகைவனுக் கருளும்' பண்பட்ட உள்ளம் என்பது அவர் பதில். அது மட்டுமன்று. பார்க்குமிடம் எங்கும் பரமனைக் காண்பதும் அத்தெய்வ நெறி. இறைவன் எங்கும் உள்ளவன் என்ற உணர்வு சிறக்குமானால் அங்கே பகையேது? உறவு ஏது? எவர் உறவர்? எவர் பகைஞர்? அது மட்டுமன்று. அந்த உள்ளத்தில் உயர்ந்தார் தாழ்ந்தார் என்ற வேறுபாடு ஏது? கெட்ட பொருள் தாழ்ந்த பொருள் என்ற உணர்ச்சி தான்ஏது? இவற்றையெல்லாம் எண்ணிப் பாரதியார்,

கேளப்பா சீடனே கழுதை ஒன்றைக்
கீழான பன்றியினைத் தேளைக் கண்டு
தாளைப்பார்த் திருகரமும் சிரமேற் கூப்பிச்
சங்கர சங்கரவென்று பணிதல் வேண்டும்
கூளத்தை மலத்தினையும் வணங்கல் வேண்டும்
கூடிநின்ற பொருளனைத்தின் கூட்டம் தெய்வம்
மீளத்தான் இதைத்தெளிவா விரித்துச் சொல்வேன்
விண்மட்டும் கடவுளன்று மண்ணு மஃதே

என்றும்,

உயிர்களெலாம் தெய்வமன்றிப் பிறவொன் றில்லை
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்
பயிலு முயிர் வகைமட்டு மன்றி யிங்குப்
பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம் கண்டீர்

என்றும் இறைவன் தன்மையை நமக்கு எடுத்துரைக்கின்றார். இந்தத் தெளிந்த நல்லுணர்வில் பகை ஏது? உறவேது? எனவே அவர்வாய்,

பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்
புகைநடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே—நன்னெஞ்சே
பகைநடுவினில் அன்புருவானநம்
பரமன் வாழ்கின்றான்
... ... ... ...
தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி அவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்

என்று பாடுகிறது. இத்தகைய நல்ல உள்ளம் மக்களுக்கு என்று வருமோ? கொல்லவரும் புலியைப் பாரதியார் காட்டியது போன்று நினைந்து மகிழ்ந்தால் அப்புலியும் ஊறு செய்யுமோ? செய்யாது. இதைத்தான்போலும் தாயுமானவர் 'நெடிய பெருவேங்கையைக் கட்டியே தழுவலாம், நீளரவினைப் பூணலாம்' எனக் காட்டிச்சென்றார். இந்த வகையில் பகைவனுக்கு அருளும் நல் நெஞ்சம் உடைய சான்றோர் என்றென்றும் வாழ்பவர்தாமே. ஆம்! பாரதியாகிய சான்றாண்மை சீலர் என்றென்றும் வாழும் மேலானவராஞர்.

'இன்று தம்ம இவ்வுலகம், இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் நம் முப்பாட்டன், தமிழ்ப்புலவன் பாடி வைத்துச் சென்றான். உலகம் துன்பம் மிகுந்தது என்று எண்ணிச் சலிப்பதைக் காட்டிலும் அதை விட்டு ஓடித்துறவு பூண்பதைக் காட்டிலும் அதனோடு பொருந்தி அத்துன்பத்தில் இன்பங் காண்பதே மனிதப் பண்பு. ஆம், பாரதியார் துறவை வெறுப்பவர்தாம். மாயையைப் பழிக்கும் அவர், அதைவிட்டு அஞ்சி ஓட வேண்டா

மென்றும் அதை அடக்கி ஆள வேண்டுமென்றும் கூறுவர். தங்கச் சிலைபோல் நிற்கிறாள் என்மனைவி. அவள் பொய்யா?' என்றுகேட்பார். எனவே உலகவாழ்வில் உழன்றால் அனைத்தை யும் இன்பமாகக் காணமுடியும். அப்பர் பெருமானைக் காட் டிலும் அதிகமாக அல்லல் உற்றவரை வரலாற்றில் காண முடியாது. ஆண்டவன் அடியைச் சிக்கெனப் பிடித்த கார ணத்தால் அவர் அத்துன்பங்கள் அனைத்தையும் இன்பமாக்கி, 'இன்பமே என் நாளும் துன்பமில்லை' என்று எக்களித்துப் பாடுகிறார் என்றால் அஞ்சா நெறியிலும், ஆண்டவன் அன்பு அணைப்பிலும், அருள் நெறியிலும், கவிதை ஊற்றிலும் அவ்வப்பரடிகள் வழிவந்த பாரதியார் அந்த நிலையினின்றும் மாறுவாரோ? அவர் உள்ளமும் 'எத்தனை கோடி இன்பம்' என்றுதான் நினைக்கிறது; வாய் பாடுகிறது.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!

சித்தினை அசித்தொடு இணைத்தாய்—அங்குச்
சேரும் ஐம்பூதத்து வியனிலை சமைத்தாய்
அத்தனை உலகமும் வண்ணக் களஞ்சியம்
ஆகப் பலப்பல அழகுகள் சமைத்தாய்

என்று பாடி அவர் எங்கும் இன்பமும் அழகுமே தாண்டவ மாடுகின்றன என மகிழ்கின்றார். இந்த மகிழ்ச்சி உள்ளம் என்றும் வாழுமுள்ளமல்லவா? எனவே பாரதி என்றும் வாழ் கின்றவரானார்.

கடவுள் நெறியினைப் பற்றி மட்டுமன்றிப் பாரதியார் காதல் நெறியினையும் சாகா நிலைக்குக் கொண்டுசெல்கின்றார். காதலும் கடவுளைப் போன்றதே—என்றும் சாகாதது. ஏதோ 'கண்டதும் காதல், விண்டதும் பிரிவு' என்ற மேலை நாட்டு நாகரிகச் சேற்றில் மூழ்கியுள்ள பலருக்கு அக் காதலின் தெய்வீக சக்தி புரியாததுதான். எனினும் என்றும் வாழ்கின்ற கவிஞர் இக் காதல் தெய்வம்போல் என்றென்றும் அழியாது வாழ்வது என்றே காட்டுகின்றனர்.

இம்மைப் பிறப்பில் பிரியலன் என்றேனுல்
கண்ணிறை நீர்கொண் டனள்

என்று திருவள்ளுவர் காதல் வாழ்வு இம்மையில் மட்டுமன்றி வழி வழியாக வருகின்ற பிறவிகள்தோறும் பற்றி நிற்பது என்பதை எடுத்துக்காட்டுவர் இக் காதலைப் பாடவந்த மற்றொரு புலவர் 'உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே' என்று காமத்தின் எல்லையற்ற பெருவாழ்வையும் முடிவிலா ஆற்றலையும் அதன் எல்லை காணமுடியாத உயிர் நிலையையும் விளக்கிக் காட்டுவார். இத்தகைய நல்ல பண்பட்ட புலவர் மரபில் வந்த கவிஞர் பாரதியார் காதல் சாகாவரம் பெற்ற தென்று காட்டிப் பலவகையில் விளக்கி அச்சாகாக் காதலின் தனிச் சிறப்பியல்புகளையெல்லாம் விளக்கித் தாமும் சாகாவரம் பெற்றுவிட்டார்.

உண்மைக் காதல் மனிதனைச் சாகாமல் வாழவைக்கும் என்ற உண்மையை உணர்ந்தவர் பாரதி. காதலால் கவலை நீங்கும்—கலைவளரும் - கவின்பெருகும்-வாழ்வு மலரும்-வளங் கொழிக்கும். இவற்றைத் தொடுத்து அவர்,

காதலினுல் மானுடர்க்குக் கலவி யுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்
காதலினுல் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற் கலைக ளுண்டாம்
ஆதலினுல் காதல்செய்வீர் உலகத் தீரே
அஃதன்றே இவ்வுலகத் தலைமை இன்பம்
காதலினுல் சாகாமல் இருத்தல் கூடும்
கவலைபோம் அதனுலே மரணம் பொய்யாம்

என்று எடுத்துக்காட்டி, கடவுளர் சத்தியொடு பொருந்தியே வாழ்கின்ற நெறியைக் காட்டி அக் காதல் வெறும் ஏட்டிலன்றி நாட்டில்- உள்ளத்தில் உருப்பெற வேண்டும் என்கின்றுர். காதலில் விடுதலை இல்லை என்பதையும் அவ்வாறு விடுதலை வேண்டும் மேலைநாடுகளில் அது பொய்யாகவே கழிகின்ற

தென்றும் அக்காதல் ஆணும் பெண்ணும் என்றும் இடையறாது இயைந்து பிறவியும் பிறவேறுபாடுகளும் நீங்கிய வகையிலே இணைந்து நிற்பது என்றும் விளக்குகிறார். மேலும் அக்காதல் பிறவிதொறும் பற்றிவரும் என்பதையும், அது கணவன் மனைவி என்ற அமைப்பில்மட்டுமன்றி ஒருவரை ஒருவர் மறவாத வகையிலே பல முறையில் பற்றிவரும் என்பதையும் காட்டுகின்றார். பொல்லாத கொடிய விரோதி தன் பகைவனை இடைவிடாது (காதலன் காதலியைக் காட்டிலும்) நினைப்பான் என்ற நிலையை விளக்கி அந்தத் தொடர்பும் மற்றவை போன்று இணைந்ததே என்கின்றார். வைகுண்டத்தைவிட்டு, சாபத்தால் உலகில் பிறந்த வாயில் காவலர் இருவர் இந்த இடையறா எண்ணத்தைப் பெற வேண்டியே மூன்று முறையில் விரோதிகளாகப் பிறந்தார்கள் என்று புராணம் கூறும். இவற்றையெல்லாம் எண்ணி அச் சாகா வரம் பெற்ற காதல் எவ்வெவ்வகையில் வள முற்றுச் சிறக்கும் என்பதைக் 'கண்ணம்மா என் காதலி' என்ற காதல் வரிசையில் அழகுற எடுத்துக் காட்டுகின்றார்.

நேற்றுமுன் னாளில்வந்த உறவன்றடி—மிக
நெடும்பண்டைக் காலமுதல் சேர்ந்துவந்ததாம்
போற்றுமி ராமனென முன்புதித்தனை—அங்குப்
பொன்மிதி லைக்கரசன் பூமடந்தைநான்
ஊற்றமு தென்னவொரு வேய்ங்குழல் கொண்டேன்—கண்ணன்
உருவம் நினக்கமையப் பார்த்தன் அங்குநான்.

முன்னை மிகப்பழமை இரணியன்நான்—எந்தை
மூர்க்கம் தவிர்க்கவந்த நரசிங்கன்நீ
பின்னையோர் புத்தனென நான்வளர்ந்திட்டேன்—ஒளிப்
பெண்மை அசோதரைஎன் றுன்னையெய்தினேன்
சொன்னவர் சாத்திரத்தில் மிகவல்லர்காண்—அவர்
சொல்லில் பழுத்திருக்கக் காரணமில்லை
இன்னும் கடைசிவரை ஒட்டிருக்குமாம்—இதில்
ஏதுக்கு நாணமுற்றுக் கண்புதைப்பதோ

என்று காதல் வாழ்வு இடையில் முறியாது வழிவழியாக என்றென்றும் பற்றிவரும் தெய்வ வாழ்வு என்பதைப் பாரதியார் தெளிவாக்கிவிட்டாரல்லரோ? இதைவிட அதன் சாகாத் திறத்தை யாரே வெளிக் காட்ட முடியும்? எனவே இவ்வுலகில் வாழும் உயிர்கள் இறைவனிடமும் உற்ற தலைவரிடமும் மெய்க் காதல் கொண்டு ஒழுகின் அவ்வுயிர்கள் இன்பமே என்றும் இயையப் பெற்று வாழ்வதோடு, என்றென்றும் உலகுள்ளளவும் சாகா வரம்பெற்று வாழும். எனவே காதல் அல்லது காமம் என்பது வெறுக்கத்தக்க ஒன்று என எண்ணுவது தவறு என்பதும் அதுவே உயிர் தளிர்ப்ப உதவுவது என்பதும் அக்காதல் வாழ்வே கடவுள் வாழ்வுக்கு வழி காட்டியாகி இரண்டையும் இணைத்து அவற்றையும் அவற்றைப் பற்றிய உயிரையும் என்றென்றும் வாழவைப்பது என்பதும் தேற்றம். தாழ்ந்த அற்ப ஆசையாகிய கொடுங் காமம் பற்றியும் நீடிக்காத அச்சிறு தொழிலைப் பற்றியும் பாரதியார் கண்டிக்கத் தவறவில்லை. அதையும் வாய்ப்பு உளதேல் காண்போம். அக்கழி காமம் செய்யும் கொடுமைகளை அவர் திட்டமாகக் காட்டுகின்றார். (இங்கே அவர் காட்டுவது தெய்வீகத்தன்மை பொருந்திய—வழிவழிப் பிறவிகள் தோறும் உயிரொடு உயிர்பற்றி வருவதையும்—இறையொடு உயிர் இரண்டறக் கலப்பதையுமே ஆகும்.) 'என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ' என்ற தாயுமானவர் அடியும் இங்கு எண்ணவேண்டுவதாகும்

இனி, இக்காதல் வாழ்வொடு பொருந்திய சமுதாயத்தைப்பற்றிப் பாரதி காட்டிய சாகா உண்மைகள் சிலவற்றையும் காணல் வேண்டும். இல்லறம்—பெண்—குழந்தை—அவர்வழி வளரும் மொழி இவைபற்றி யெல்லாம் பாரதி காட்டியிருக்கும் விளக்கங்களைப் பலரும் நன்கு அறிவர். பாரதியைப் பாராட்டும் யாரும் இப்பகுதியை விட்டுச் செல்லமாட்டார். இப்பாரதி தமிழ்ச் சங்கப்பெருமண்டபத்தே இந்தக் கருத்துக்களை நீங்கள் எத்தனையோ தடவை கேட்டிருப்பீர்கள். அக்கருத்துக்கள் அனைத்தும் பாரதியைச் சாகாமல் வாழ வைக்கின்றன என்பது என் எண்ணம்.

சமுதாயத்தில் எத்தனையோ சிக்கல்கள் தோன்றுவது இயல்பே. பல்வேறு சூழல்களுக்கும் மாறுபாடுகளுக்கும் இடையிலே சமுதாயத்தில் அடிக்கடி பலப்பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டிய தேவை உள்ளது. உடல்நோய் தீர்க்க மருத்துவன் தேவைப்படுவதுபோன்று, சமுதாயமாகிய பேருடம்புக்கு உண்டாகும் துன்பங்களைத் தீர்க்க அவ்வப்போது மருத்துவர் தேவையே. அம்மருத்துவர்களாகத்தான் கவிஞர்களும், புரட்சி வீரர்களும், நாடாளுவோரும், பிறரும் வந்து தோன்றுகின்றனர். புரட்சிக் கவிஞராகிய பாரதியும் நம்நாட்டுச் சமுதாயத்தில் வேண்டாதனவாக மலிந்துகிடக்கும் கொடுமைகளை நீக்கவேண்டுமென்று பலப்பல இடங்களில் எடுத்துரைக்கின்றார். மக்கட் சமுதாய வாழ்வு என்றென்றும் செம்மையுற்றுத் திகழ வேண்டுமானால் சில திருத்தங்கள் செய்ய வேண்டுமென்கிறார். அவைகளைப் புதுமைப் பெண், தொழில், நாட்டுக் கல்வி, செந்தமிழ்நாடு, தமிழ்ச்சாதி முதலியவற்றுள் விளக்குகின்றார். உலகச் சமுதாயம் போரின்றியும் தீதின்றியும் செம்மை நலம் பெற்றுச் செழிக்க வேண்டுமானால் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் வேற்று மக்களிடம் மாறுபாடு காணாராய் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஒருமை உணர்வில் வாழ்வதோடு, அவ்வந்நாட்டையும் அவரவர் நாட்டையும் அவரவர் தாய் மொழியையும் சிறக்கப் போற்றி வளர்க்க வேண்டும் என்கின்றார்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே

என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. இங்கே தாய் என்பது தாய்மொழியாகும். இவ்வாறு மொழியையும் நாட்டையும் வளர்க்க எல்லாவகையிலும் பாடுபட வேண்டும் என்றும் அவ்வாறு பாடுபடாதவர் வாழத் தகுதியற்றவர் என்றும் காட்டுவர் கவிஞர்.

தமிழ் நாட்டை எண்ணும்போது அவருக்கு அதன் பழமையும் சிறப்பும் நினைவுக்கு வருகின்றன. அதில் வாழ்ந்த தூய புலவர்கள் ஒருவர் பின் ஒருவராய் அவருக்குக் காட்சி தருகின்றனர். தமிழ் நாட்டு வாணிக வளனும் பிறவும் தெரிகின்றன. அவற்றை எல்லாம் கூறிய பாரதி அவை செழிப்புறச் செய்வதே இன்றைய தமிழர் கடன் என்பதை யும் சுட்டிக் காட்டுகின்றார்.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்

என அவர் ஆணையிடுகின்றார், அப்படியே,

திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்

என்ற உயர்நிலையில் அமையவேண்டிய இலக்கிய வாழ்வியல் படைப்புக்கள் பற்றியும் பாடுகின்றார். தமிழ்ச் சாதி உய்ய வழிகாட்டவும் சாகாது வாழ வழி வகுக்கவும் அவர் தவற வில்லை.

நம்மூ தாதையர் நலமுறக் காட்டிய
ஒழுக்கமும் நடையும் கிரியையும் கொள்கையும்
ஆங்கவர் காட்டிய அவ்வப் படியே
தழுவிடின் வாழ்வு தமிழர்க் குண்டு

என்பது அவர் வாதம். ஆம். தமிழர் அந்த அடிப்படையை மறந்தமையால்தான்—தம்மரபினைத் தவறவிட்ட காரணத் தால்தான் 'ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்' வாழ்கின்றார் என அவர் உள்ளம் நைகின்றது. இந்த நிலை மாறின், பழம் பண்பு-வள்ளுவர் காட்டிய பண்பு, அறம், நாகரிகம், கல்வி, அறிவு அனைத்தும் போற்றப் பெற்று வாழ்வில் மலருமாயின் தமிழ் மரபும் அதன் வழியே பாரத மரபும் சாகா வரம் பெற்று வாழும். அதைக் காணவே

பாரதியும் சாகா வரம் பெற்று வாழ்கின்றார். 'சேரவாரும் அப்பணி செய' என உங்களை அழைக்கின்றேன்.

இதே வகையில் பாரத நாட்டை நோக்கிய பாரதியார் அன்று இருந்த அடிமை நிலையில் அதற்குத் தேவையானவை எவை எவை என்று எண்ணமிடுகின்றார். சுதந்திரம் பெறுவதும் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்க மற்றவர் தயவை நோக்காதிருப்பதும் பாரத நாடு சாகா வரம்பெற வழி என்பதே அவர் வகுத்துக் காட்டியதாகும். மக்களிடம் முறையிட்டுக் கேளா நிலையிலே அவர் ஆண்டவனை நோக்கி முறையிடுகின்றார்.

நெஞ்சகத்தே பொய்யின்றி நேர்ந்ததெல்லாம் நீதருவாய்
வஞ்சமோ எங்கள் மனத்தூய்மை காணாயோ
பொய்க்கோ உடலும் பொருளுயிரும் வாட்டுகின்றோம்
பொய்க்கோ தீராது புலம்பித் துடிப்பதுமே
நின்பொருட்டு நின்னருளால் நின் உரிமை யாம்கேட்டால்
என்பொருட்டு நீதான் இரங்கா திருப்பதுவோ
... ... ... ...
நீயும் அறமும் நிலைத்திருத்தல் மெய்யானால்
ஓயுமுனம் எங்களுக்கிவ் வோர்வரம்நீ நல்குதியே

என ஆண்டவனிடம் பாரத சமுதாயத்துக்காக வரம் வேண்டுகிறார்.

பஞ்சமும் நோயும்நின் மெய்யடி யார்க்கோ
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?

என்ற வினாவை ஆண்டவனிடமே எழுப்புகின்றார். இவ்வாறு நாடும் நாமும் என்றென்றும் நலியாது வாழவேண்டுமேயானால் இங்கு வாழ்வோர் போலி நடிப்பையும் பொய்மை உணர்வையும் நீக்கவேண்டும். உண்மை உளத்தில் கடமை வழிச் செயலாற்றிக் கடவுள் நெறிபற்றி வாழ்ந்தால் பாரதமும் தமிழ்நாடும் சாகாவரம்பெற்று என்றும் தரணியில் தழைக்கும் என்பது உறுதி.

இவ்வாறே சமூகத்தே ஆடவரும் பெண்டிரும் ஆற்ற வேண்டிய கடமைகளையும் அவ்வாறு ஆற்றின் அவர்கள் நிலைத்த வாழ்வைப்பெற்றுச் சிறப்பார்கள் என்ற உண்மையினையும் எத்தனையோ இடங்களில் எடுத்துக் காட்டுகின்றார். அவை அனைத்தும் இங்கு முன்னரே பலரால் எடுத்துப் பேசப் பெற்றிருக்குமாதலின் நான் அவற்றையெல்லாம் விட்டு மேலே செல்கின்றேன்.

இறுதியாகத் தாம் சாகாத கவிஞராக வாழ்வதுமன்றி உலகிலேயே சாகாது வாழ வழி வகை இது என அவர் காட்டிய காரணங்களைக் கண்டு அமைதல் பொருந்துவதாகும். முதலாவதாக நாம் காணும்போது தனக்கென வாழாத் தன்மையே சிறந்தது எனக் கண்டோம். அதே தன்மைதான் மனிதனைச் சாகாமல் வாழ வைக்கிறது. தான் என்ற முனைப்பும் அம் முனைப்பின் காரணமாக எழுகின்ற கோபம், பொய் முதலியனவும் மனிதனை விரைவில் அவன் இறுதிக்கு ஈர்த்துச் செல்லுகின்றன. இக்கருத்து வெறும் வேதாந்தம் என்று நினைக்க வேண்டாம். வாழ்வினுக்கே இது பொருந்துவதாகும். 'நாடெங்கும் வாழத்தாம் வாழ்வதே' நலஞ் சிறந்தது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அந்த நலஞ் சிறந்த கொள்கைக்கு அடிப்படை எவை எவை என்பதைத்தான் வள்ளுவர் தம் திருக்குறளில் நன்கு எடுத்துக் காட்டிச் சென்றார். அவரடி போற்றி அவர் பின் வந்த அத்துணைத் தமிழ்ப் புலவர்களும் பிறநாட்டுப் பிறமொழி அறிஞர்களும் அந்த அடிப்படையிலேயே அறநெறியை வற்புறுத்திச் சென்றனர்—செல்லுகின்றனர். இந்த அறத்தாறு வாழின் வாழும் அந் நல்லுயிர் தன் கால எல்லையில் எல்லா நலன்களும் பெற்றுச் சிறப்பதோடு—மறுமையில் உயர்நலம் உறுவதோடு—உலகம் உள்ளளவும் சாகா வரம் பெற்றவகையில் புகழ் உடம்பு கொண்டு இப்புவியில் வாழும். இத்தந்திரத்தை நம் பாரதி நன்கு அறிந்தவராதலால் 'பார்மீதில் நான் சாகாதிருப்பேன் கண்டீர்' என உலகினரை நோக்கிக் கூறி, அவ்வாறு சாகா வரம் பெற்று உலகம் உள்ளளவும் வாழவும் தலைப்பட்டுவிட்டார்.

அவ்வாறு பாரதி சாகாதிருப்பதற்குக் காட்டிய வழிகள் தாம் எவை? காண்போமா? தமக்குமுன் வாழ்ந்த மெய்யடியார் பலரும் அவர் மனக்கண்முன் காட்சியளிக்கின்றனர். ஆதிமூலம் என்றழைத்த யானையும் மார்க்கண்டேயரும் முன் வருகின்றனர். இந்நிலையில் அவருக்கு மனித உயிருக்கும் பிற உயிர்களுக்கும் வேறுபாடு தோன்றவில்லை. மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்று உலகை ஒத்து நோக்குபவருக்கு எந்த வேறுபாடும் இல்லையல்லவா?, முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' இராமலிங்க அடிகளார். இருவரும் இறையருளில் மூழ்கினர்; எனவே இயமன் அவர்கள் அருகில் வர அஞ்சினான். தாமும் அந்த மெய் அடியவர் பரம்பரையில் வந்தவர் எனக் கூறி, தம்மிடம் வந்தால் காலன் அழிய வேண்டியதே ஒழியத் தமக்கு அழிவில்லை எனக் கூறுகின்றார்.

காலா உனைநான் சிறுபுல்லென மதிக்கின்றேன்—என்றன்
காலருகே வாடா சற்றே உனைமிதிக்கின்றேன்—அட (காலா)

என எக்களித்துப் பாடுகின்றார். இந்தப் பெருஞ்செருக்கு—காலனையும் புல்லென மதித்து மிதிக்க நினைக்கின்ற செருக்கு பாரதியாருக்கு எங்ஙனம் வந்தது? அவரே தம் சுய சரிதையில் காட்டுகின்றார். அவருக்கு அவர் குரு செய்த உபதேசத்தை நமக்குக் காட்டுகின்றார். அவர் குரு என்ன சொன்னார் ?

வாசியைநீ கும்பகத்தால் வலியக் கட்டி
மண்போலே சுவர்போலே வாழ்தல் வேண்டும்
தேசுடைய பரிதிஉருக் கிணற்றி னுள்ளே
தெரிவதுபோல் உனக்குள்ளே சிவனைக் காண்பாய்
பேசுவதில் பயனில்லை அனுப வத்தால்
பேரின்பம் எய்துவதே ஞானம்

என்றார் அவர் குரு. ஆசி வாசியைக் கும்பகத்தால் அடக்கி மேனிலையில் நின்று மண்போலும் மரம்போலும் 'யான், எனது'

என்பது அற்று, சுயநலமற்று வாழத் தொடங்கினுல்இறைவன் நம் உள்ளே ஒளிவிடுவான். இந்த இன்பம் அனுபவத்தால் பெறுவர். பெற்றவர் பாரதி; பெற்றதன் பயனே சாகா வரம்.

இந்த உயர் நிலைக்கு அடிப்படை என்ன? அதையும் பாரதி சொல்லத் தவறவில்லை. மிகச் சாதாரணமாக எல்லோரும் அறிந்த உண்மைதான்; ஆனுல் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற உண்மையும்கூட. 'கடவுள் அவதாரங்களாக வந்தவர்களும்கூட முடிவெய்தினுர்கள்;ஆனுல் நான் சாகாதிருப்பேன்' என்கிருர். அவர் வாக்கிலேயே காண்பது வீறு பெறுவதாகும்.

சிலுவையிலே அறையுண்டு யேசு செத்தான்
தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான்
பலர்புகழும் இராமனுமே ஆற்றில் வீழ்ந்தான்
பார்மீதில் யான்சாகாதிருப்பேன் கண்டீர்
மலிவுகண்டீர் இவ்வுண்மை பொய்கூறேன்யான்
மடிந்தாலும் பொய்கூறேன்; மானிடர்க்கே
நலிவுமில்லை சாவுமில்லை கேளிர் கேளிர்!
நாணத்தைக் கவலையினைச் சினத்தைப் பொய்யை;

அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்
மிச்சத்தைப் பின்சொல்வேன் சினத்தை முன்னே
வென்றிடுவீர் மேதினியில் மரண மில்லை

இவ்வாறு மிக எளிமையில் சாகாமைக்கு மருந்து கண்டுவிட்டார் பாரதி. அச்சம், வேட்கை, சினம், கவலை, பொய் இவை அழிந்தால் இடர் ஏது ? சாவேது? அழிவேது? அல்லல் ஏது? இவற்றுள் மிக முக்கியமாகச் சினத்தைக் கொல்ல வேண்டுமென்கின்ருர். பாரதி வாழ்விலே சினம் காட்ட முடியாதென நினைக்கின்றேன். இச்சினத்தைப் பற்றித் திருவள்ளுவர்,

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்

சினம் தன்னைச் சேர்ந்தவரைமட்டுமன்றி அச் சேர்ந்தவரைச் சேர்ந்தார் பலரையும் ஒரு சேரக் கொல்லும் என்கின்றார். அதற்கு, 'சேர்ந்தாரைக் கொல்லி' என்ற பெயர் சூட்டுகின்றார். எனவே பாரதி காட்டிய வழியில் எத்துணை உண்மை உண்டு என்பது புலப்படுகிறதன்றோ? அச் சேர்ந்தாரைக் கொல்லியாகிய சினத்தை நீக்கியமையாலேதான் வள்ளுவரும் பாரதியும் சாகா வரம் பெற்று வாழ்கின்றனர்.

அச் சினத்தை நீக்கப் பாரதி பொறுமை வேண்டும் என்கின்றார்.

திருத்தணிகை மலைமேலே குமார தேவன்
திருக்கொலுவீற் றிருக்குமதன் பொருளைக் கேளீர்
திருத்தணிகை என்பதிங்குப் பொறுமை யின்பேர்
செந்தமிழ்கண் டீர்பகுதி தணிஎ னும்சொல்
பொருத்தமுறும் தணிகையினால் புலமை சேரும்
பொறுத்தவரே பூமியினை ஆள்வார் என்னும்
அருத்தமிக்க பழமொழியும் தமிழில் உண்டாம்
அவனியிலே பொறையுடையான் அவனே தேவன்

என்று பொறுமையே வாழ்வின் அடிப்படை எனக் காட்டி நின்றார். ஆம், அவர் மற்றவர்களுக்கு அவ்வாறு விளக்கிக் காட்டியதோடன்றி, தாமும் வாழ்ந்து காட்டினார். தாம் மட்டும்வாழவேண்டும் என்ற சுயநிலையிலன்றி, 'தாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக' என்ற பெருநிலையிலே உலகையே தம்வழி அழைத்துச் செல்லவே இவ்வுண்மைகளையெல்லாம் உலகத்தாராகிய நம்மையெலாம் அழைத்துக் காட்டுகின்றார். தாமே வாழ்ந்து காட்டியும் சாகா வரம் பெற்றார்; நம்மையும் வாழ அழைக்கின்றார். இத்தகைய புருடராகப் பாரதி விளங்கிய காரணத்தினாலேதான் அவரது

பாடல்கள் சிரஞ்சீவியாக அமரத்துவம் பெற்று வாழ்கின்றன. அவை வாழ்வதோடு அவற்றை ஆக்கிய தம் தலைவனாகிய பாரதியையும் வாழவைக்கின்றன. முதலில் நான் சொன்ன படி, இறுதியாக அப்பாரதியார் சாமிநாத ஐயருக்குக் கூறிய அதே அடிகளை அவருக்கும் கூறி அமைகின்றேன்.

பொதியமலை பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சில் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே

என்று பாரதியை நான் வாழ்த்துகிறேன். தமிழ் உள்ள வரையில், ஏன்? உலகில் மொழிஉள்ளவரையில், மக்கள் இனம் உள்ளவரையில், உயிர் வாழ்க்கை உள்ள வரையில் பாரதி வாழ்வார்—அவர் புகழ்வாழும்-கவிதை; வாழும்; இன்பம் வாழும்; எல்லை இல்லா அறம் வாழும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து நாட்டையும் மொழியையும் வளம்படுத்திய பாரதியின் வரலாறு இன்னது என்பதையும், அவர் வந்த கவிஞர் மரபு எத்தகையது என்பதையும், கவிதை என்பது யாது என்பதையும், அது காலத்தை வென்று வாழ்வது எவ்வாறு என்பதையும், அக்கவிதையையே தம் தலைவியாகக் கொண்டு பாரதி செய்த பணி என்ன என்பதையும் கண்டோம். அப்பணியின் அடிப்படையில் அவர் சாகாவரம் பெறத் துணையாயிருந்த பல்வேறு பொருள்கள் பற்றிய பாடல்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கண்டு உயிரும் சமுதாயமும் உற்று வாழ அவர் வகுத்த வழியையும் கண்டு, இறுதியாக அவரே சாகாதிருக்கக் காட்டிய வழியையும் கண்டோம்' அவர்தம் புகழ் சிறப்பதாக! வாழ்க பாரதி நாமம்! வளர்க இப்பாரதி தமிழ்ச்சங்கத்தின் பணிகள்!

## 7. நேற்று இன்று நாளை

மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மேஎனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேஉனை என்றுகொல் காண்பதே

என்பது திருவாசகம். இதில் மாணிக்கவாசகர் இறைவனைக் காலமாகக் காண்கின்ற சிறப்பை மட்டும் விளக்குகிறார் என்று சொல்ல முடியுமா? ஆம்! அதற்கும் மேலாக அனைத்துலகங் களும் அண்ட கோளங்களும் பிற அனைத்துமே இக்கால எல்லை யில் அடங்கும் என்ற உண்மையினையும் அவர் சுட்டிக் காட்டு கிறார். எனவே அனைத்தும் எல்லை இலாக் 'கால வெள்ள' எல்லையுள் அடங்குவனவாம்.

எல்லை இல்லாக் காலத்துக்கு எல்லை காண்பது அரிதுதான். எனினும் மனித அறிவின் உணர்வு எட்டியவரையில் அக் காலத்தைப் பல வகையில் கூறுபடுத்திக் காண முயன்றான் மனிதன்! அதில் ஓரளவு வெற்றி பெற்றான் என்று சொல்ல லாம். ஆயினும் அக்காலமெனும் கடுவெளியைக் கடக்கவோ நீந்தவோ எல்லைகண்டு நினைக்கவோ அன்றிக் காட்டவோ அவனால் என்றும் இயலாது. அந்த நெடுங்கால எல்லையே அவன் கடந்ததாகவும் நிகழ்வதாகவும் எதிரதாகவும் கூறு

படுத்தி அதற்குள் தன்வாழ்வை வகுத்துக் கொள்ள எண்ணு கின்றான்; அவ்வளவே!

இவ்வாறு இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூன்று காலங்களை இலக்கண மரபு ஒட்டிப் பிரித்தாரேனும் சில ஆய்ந்த அறிவுடையார் காலத்தை இரண்டெனவே கூறுவர். நிகழ்காலம் என்ற ஒன்று நிலைக்க முடியாத—நினைக்க முடியாததாகும் என்பது அவர் கூற்று. 'நான் நிற்கிறேன்' என்றும் 'நான் படிக்கிறேன்' என்றும் சொல்லும் போது அத்தொடர் முடிந்தவுடனே அது இறந்த காலமாகிவிடுகின்றது. செயல் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒருசிலவற்றிற்கு நிகழ்காலம் பொருந்துமேனும் பெரும்பாலான நிகழ்ச்சிகள் கூறிமுடிக்கு முன் இறந்தகால எல்லையை அடைந்து விடுகின்றன. இறப்பில் நிகழ்வு அடங்கவேண்டும் என்ற உண்மை விரைவில் நிறைவேற்றப் படுகிறது. 'நிகழ்வு' என்று சொல்லப்படுகின்ற ஒவ்வொரு விநாடியின் செயலும் அடுத்த விநாடி இறந்த கால எல்லையில் முடிவதை நம்மால் உணர முடிகின்றது. ஆனால் இறப்பும் எதிர்வும் இந்நிலைக்கு மாறுபட்டவையன்றோ! இறப்பு என்றும் இறப்பாகவே இருக்கும். எதிர்வும் சிலகாலமாவது அவ்வாறு இருந்து பின் நிகழ்வினை விரைந்து கடந்து இறப்பின் ஒன்றும். சில எதிர்கால நிலைகள் என்றும் எதிர்கால நிலைகளோ என்னுமாறு வாழ்வது உண்டு. இவற்றை நோக்க 'நிகழ்வு' என்பது நிலையற்ற ஒன்றே என்பது தெளிவு. இந்த அடிப்படையில் 'இன்று' என்ற ஒன்றே வேண்டாம், இறப்பும் எதிர்வுமே போதும் என்பர் சிலர். ஆயினும் இந்த நிகழ்வு சிறந்த ஒன்றற்குப் பயன்படுகின்றது.

பின் நிகழ்வுதான் எதற்காக? எல்லாக் காலத்திலும் வாழ்கின்ற பொருளை எக்காலக் குறியீட்டால் உணர்வது? 'கடவுள் இருந்தார்' என்றால், 'இப்போது இல்லையா?' என்ற வினா எழும். 'இருப்பார்' என்றாலும் அப்படியே. ஆனால் 'இருக்கிறார்' என்றால் முன் இல்லையா? பின் இாரா? என்ற வினாக்கள் எழுவதில்லை. அப்படியே காற்று இருக்கிறது-கடல்

இருக்கிறது— ஆறு ஓடுகிறது என்பன போன்ற நிகழ்கால முடிவுகள் அவை கால எல்லையைக் கடந்து வாழ்ந்து ஒத்து இயங்குகின்றன என்ற உண்மையை நமக்கு உணர்த்து கின்றன. இந்த உணர்வினைப் பெறவே—என்றும் வாழ்வன இவை என்ற தன்மையைக் காணவே இந்த நிகழ் காலம் பயன்படும் என்பர். இந்த அடிப்படையில்தானே இலக்கண அறிஞர்,

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே (நன். 383)

என விதி செய்தனர் என நினைக்க வேண்டியுள்ளது. இவ்வாறு ஆராய்ந்து காணும் நிலையில் இலக்கண மரபினோர் ஒரு வகையில் செல்ல, சமுதாய வாழ்விலும் சமய உணர் விலும் தம்மை மறந்த நல்லவர்கள், சென்ற காலத்தையும் வருங்காலத்தையும் பிணைத்து, அவற்றின் வாழ்க்கை நிலைகளை யெல்லாம் நமக்கு உணர்த்துவது நிகழ்காலமே என்பர். இந்த உண்மையினைத்தான் சேக்கிழார்,

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனியெதிர்
காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனால் என்றைக்கும்
திருவரு ளுடையேம் (திருஞான 659)

என்று பாண்டி நாட்டை வாழவைக்கும் வகையில் பாட்டி சைத்துள்ளார். எனவே காலம் மூன்றாகத் தெளிவு படுத்தி யிருப்பது தேவையானதே என்ற அமைவோடு மேலே செல் வோம்.

இவ்வெள்ளி விழா நிகழ்ச்சியில் அமைந்துள்ள நமது பேச்சு வரிசையில் இஃது இறுதியாக உள்ளது. தொல் காப்பியர் காலந் தொடங்கிப் பாரதியார் காலம் வரையில் தமிழ் இலக்கியம் வளர்ச்சியடைந்த வகையினை ஓரளவு கண்ட

நாம் அத்துறையில் மட்டுமன்றிப் பொதுவாக அனைத்து நெறியிலும் இன்றைய எல்லையில் நின்று இருபுறமும்-நேற்றையும் நாளையினையும்—திரும்பிப் பார்க்கக் கடமைப் பட்டவர்களாவோம். 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்'லிக் கொண்டிருப்பதிலும் பயனில்லை. 'பழமை அனைத்தும் பாழ்; புதுமை குலுங்கப் பூரிப்போம்' எனக் கண் மூடிக் கொண்டு செல்வதும் தவறாக முடியும். எனவே இரண்டுக்கும் இடையிலே சென்ற காலத்தையும் வருங் காலத்தையும் நாம் தற்போது நின்று நிலைத்து நினைத்துச் செயலாற்றக் கடமைப்பட்டவராவோம்.

உரிமை பெற்ற நம் பாரத நாட்டில் இன்று நாம் எத்தனையோ வகையில் முன்னேற்றம் காண்கின்றோம். சமுதாய நெறியிலே, அரசியல் வாழ்விலே, கல்வியிலே, கைத்தொழிலிலே, கலை இலக்கிய வளர்ச்சியிலே, இன்ன பிறவற்றிலே எத்தனை எத்தனையோ வகையான வளர்ச்சியை நம்மால் காணமுடிகின்றது. அவற்றுள் ஒவ்வொன்றையும் எடுத்து ஆராயின் எல்லை காண முடியாது. எனவே அவற்றுள் இலக்கிய வளர்ச்சி அடிப்படையில் கடந்த கால நிலையையும் இன்றைய நிலையையும் எண்ணி, வருங்காலத்துக்கு வழிகோலுவோமாக!

உலக வரலாற்றையும் சிறப்பாகப் பாரத நாட்டு வரலாற்றையும் தமிழக வரலாற்றையும் நாம் எண்ணிப் பார்க்கின்றபோதோ, சென்ற காலத்தின் எல்லை எண்ண எண்ண விரிவடைந்து கொண்டே போவதைக் காண்கின்றோம். உலகம் உண்டான காலத்தையும் அதில் உயிரினம் தோன்றிய வரலாற்றையும் அறுதியிட முனைந்து ஆராய்வாளர் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர். எனினும் அந்தத் தொடக்க காலத்திலிருந்து இன்று வரையில் வாழ்ந்த உயிரின வாழ்வையும் அதன் வரலாற்றையும் யாராலும் வரையறுக்க முடியவில்லை. எங்கோ தோன்றி எப்படியோ வளர்ந்து ஏதோ வாழ்கின்ற வாழ்வாகத்தான் உயிரினத்தின் வாழ்க்கைமுறை கழிகின்றது. ஆகவே மிக அண்மையில் உள்ள கால

எல்லையைக் கண்டே நாம் அமைதிபெற வேண்டியுள்ளது. அப்படியே எதிரே நமக்குமுன் நிற்பன எத்தனை எத்தனை பேரூழிகள் என நினைக்கும்போது நமக்குத் தடுமாற்றந்தான் உண்டாகின்றது. எனவே எல்லையற்ற கால வளர்ச்சிக் கிடையில் ஒரு நொடிப்பொழுதில் வாழ்ந்து கழியும் நாம் இவ் வாழ்வின் அடிப்படையில் அமையவேண்டிய எத்தனையோ முறைகளை எண்ணி எண்ணி அப்பொற் காலத்தை வீணுக்கு கின்றோம். ஆயினும் அந்த எண்ண அலைகளே மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுகின்றன.

பிற உயிரினங்களிலும் வேறுபட்டவனாகிய மனிதன் தன் பகுத்தறிவின் திறத்தினால் இந்த உண்மைகளையெல்லாம் உணர்ந்துகொள்ளுகின்றான். அவனது ஆய்வின் திறமே இன்று நாம் இத்துணை வகைகளில் உலகையும் பிறவாழ் வியற் கூறுகளையும் எண்ணிப் பார்க்க வழியும் வகையும் செய் கின்றது. அவ்வாழ்வின் துணைகொண்டு மண்ணைமட்டுமன்றி விண்ணையும் கூட ஆராயத்தொடங்கி விட்டான் மனிதன். நாம் அத்துணைப் பெருநிலையில் செல்லத் தேவையில்லை. எனவே நாம் நம் நல்லறத்தின் அடிப்படையில் தமிழ்ச் சமுதா யத்தின் வாழ்வு, மொழி, கலை, நாகரிகம், பண்பாடு இவற்றின் நேற்றைய வரலாற்றை இன்று ஆராய்ந்து அவை வருங் கால வாழ்விற்கு எவ்வாறு வழிகாட்டியாக அமைவன என் பதை மட்டும் காட்டி அமையலாம். இதன்வழி ஓரளவு உலகச் சூழலையும் உணர்ந்து கொள்ளலாம் என்பதும் உறுதி.

தமிழ்ச் சமுதாயம் என்னும்போது நேற்று அது யாதொரு வேறுபாடும் இல்லாமல் வாழ்ந்தது. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்பதுதான் அச்சமுதாயத்தின் வாழ்க்கை நெறி. அதில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாழ்வின்அடிப்படையைத்தான் காணமுடியும். அங்கு மனித இனத்தில் மட்டுமன்றி உயிரினத்திலேயே வேறுபாடு காணவில்லை என்பதை முந்தைய பேச்சுக்களில் கண்டிருக்கி றோம். இந்த "உயிரினம் ஒன்றேனும்' உயரிய குறிக்கோள் வாழ்வின் அடிப்படைக் குறிக்கோளாக அன்று அமைந்தது.

ஆனால் இன்றோ? எண்ணிப் பார்க்க இயலுமா? எத்தனை எத்தனை வேறுபாடுகள் நாட்டை அரிக்கின்றன. சாதியாலும் சமயத்தாலும், நீதியாலும் நிறத்தாலும், கட்சியாலும் கருத்தாலும் எத்தனை எத்தனை வேறுபாடுகளைக் கற்பித்துக் கொண்டு மனிதன் வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளுகிறான். தேர்தல் போட்டியிலே அண்ணனும் தம்பியும்—ஏன், கணவனும் மனைவியும்கூட—களத்தில் இறங்குவதைக் காணுகிறோம். தந்தையும் மகனும் மாறுபடக் காண்கின்றோம். நீதிமன்றங்களில் எத்தனையோ வழக்குகள் குடும்ப வழக்குகளாகவே உள்ளமை அறிகிறோம். சமுதாயமே ஒன்றி வாழ வேண்டிய உணர்வு நெறி போய், வீட்டுக்குள்ளேயே வேறுபாடு கற்பித்துக்கொண்டு வாழும் அளவுக்கு மனிதனின் நாகரிகமும் பண்பாடும் மங்கிவிட்டதென்றால் நல்லவர் வருந்தாது என் செய்வர்? அரசியலிலே, ஆட்சிநெறியிலே, சமூக அமைப்பிலே, பிறவாழ்வின் அமைப்புக்களிலே எத்தனையோ வேறுபாடுகளைக் காண்கின்றோம். இத்தனைக்கும் அரசியல் தலைவர்களும் அறநெறிப் போதகரும் ஒற்றுமையினைப் பற்றியும், ஒருமை வாழ்வு மலரவேண்டிய இன்றியமையா நிலைபற்றியும், ஓர் உலக வாழ்வுபற்றியும் பேசாத நாளில்லை; எழுதாத நாளில்லை; சட்டமும் திட்டமும் தீட்டாத நாளில்லை. இருந்தும் ஏன் இந்தக் கொடுமை? இதனால் நாளை நாம் என்னாவோம் என எண்ணின் அதன் பயங்கர நிலை புலனாகும். நாளை வாழ வேண்டாமா? வேண்டும்—எப்படி?

உலகில் வாழும் மக்கள் பிற உயிர்கள் பெறாத ஒப்பற்ற தனி இயல்பினைப் பெற்றுள்ளனர். அதுதான்—மன அறிவு—உற்று உய்த்து உணரும் நல்லறிவு. அந்த நல்லறிவு திறம்படச் செயல்படுமானால் எந்த வேற்றுமையும் இல்லா தொழியும். ஆனால் அவ்வாறு செயலாற்றும் சிறந்த வீரர்கள் எப்போதோ பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறைதான் தோன்றுவர் போலும். நம் நூற்றாண்டில் அண்ணல் காந்தியடிகளார் அத்தகைய தூய உள்ளத்தோடு வாழ்ந்தார். அதனால்தான் நாமெல்லாம் வீறுபெற்று விடுதலையுற்று வாழ வழியும் உண்டாயிற்று.

பாரதியார் தனி மனிதன் சமுதாயத்துக்குக் கட்டுப் பட்டவனே என்பதை விளக்கி, அந்த உணர்வில் தனி மனிதன் தன் வாழ்வைச் சமுதாயத்தோடு ஒட்டி உறவாடும் வகையில் அமைத்துக்கொள்வாளுயின், அவனுக்குத் தாழ்வு வரும் காலத்தில் சமுதாயமே அவன் பின் நின்று காக்கும் என்ற உண்மையையும் எடுத்துக் காட்டுகின்ருர். இந்த உண்மையினை உணர்ந்து தனி மனிதன்தான் சமுதாயத்துக் காக வாழ்கின்ருன் என்ற அடிப்படையிலும் சமுதாயம் தனி மனிதர் கூட்டுறவே என்ற அடிப்படையிலும் வாழ்வினை அமைத்துக்கொள்ளின் பல தொல்லைகள் அகன்றுபோம். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாத' வேறு நிலை மக்கள் வாழ்வில் இடம்பெறலாகாது.

தமிழ்ச் சமுதாயத்தே இந்த வாழ்வு மலரத்தக்க வகை யில் பழங்காலந்தொட்டு, பல்வேறு வழிதுறைகளை ஆய்ந்து, அவற்றின் வழியே சிறந்த இலக்கியங்களையும் படைத்துள்ள னர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பழம் பாட்டும், 'எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் நிறை' என்று பாரதி யாரின் புதுப்பாட்டும் அவ்விலக்கியப் பெருவழியில் இரண்டு எடுத்துக்காட்டுக்கள். இவைபோன்று இன்னும் எத்தனை எத்தனையோ அறிஞர்கள் சமுதாய வாழ்வு செம்மைப்படும் நெறியில் பல்லாயிரக்கணக்கான இலக்கியங்களைத் தமிழிலும் பிற உலக மொழிகளிலும் எழுதியுள்ளார்கள்—எழுதிக் கொண்டும் வருகிருர்கள். நாம் சற்றே நின்று நிலைத்து எண்ணிப் பார்ப்போமானல் அதுபோது நாடும் நாமும் உலகும் பிறவும் செம்மையுறும்.

இங்கே மாணவர்கள் பெரும்பாலாகக் கூடியுள்ளீர்கள். இன்று குடியரசு நாள்—நாம் கொடியேற்றி விழாவினைக் கொண்டாடினேம். மாணவர்களாகிய உங்களுக்கெனவே இத்தலைப்பை இன்றைய நிகழ்ச்சியாக அமைத்தனர் சங்கத் தார். எனவே மாணவர் வாழ்வைப்பற்றியும் எண்ணக் கடமைப்பட்டவராவோம். மாணவர் எல்லாக் காலத்தும் உள்ளனர். மிகப் பழங்காலத்திலும் மாணவர் சிறந்திருந்

தமை உணர்வோம். இன்றும் மாணவர் திரளாக உள்ளனர்—எதிர்காலத்திலும் மாணவர் குழாம் சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்று மாணவர் ஒழுங்கு நிலை சரியாக இல்லையெனவும்; எங்கும் அமைதியின்மையே காணப்படுகிறது எனவும், நாட்டில் மாணவர் மரபு சிதைகின்றது எனவும் அரசியல் தலைவர்களும் பிறரும் நாள்தோறும் மேடைமீது பேசிக்கொண்டும் ஏடுகளில் எழுதிக்கொண்டும் வருகின்றனர். எனினும் ஆய்ந்து பார்க்கின்றபோது 'மாணவர் நல்லவரே' என்ற உண்மை புலப்படாமற் போகாது. மாணவர் உள்ளம் கண்ணாடி போன்றது என்று அடிக்கடி நான் சொல்வது வழக்கம். அதையே ஈண்டும் சொல்லுகிறேன். கண்ணாடிமுன் எதைக் காட்டினாலும் அது அப்பொருளை அப்படியே மாற்றிக் காட்டும். மாணவர் உள்ளமும் அப்படியே. மாறுபடு சூழலும் பிற அமைப்புக்களும் மாணவரைச் சுற்றி உள்ளமையே அவர்தம் இன்றைய நிலைக்குக் காரணமாகும்.

பழங்காலத்தில் மாணவர் 'குருகுலவாசம்' என்ற முறையில் வாழ்ந்து கல்வி கற்று வந்தனர். ஒவ்வொரு துறையில் தனித்தனி வல்ல நல்லாசிரியர்கள்வழி, அவர்களிடமே சார்ந்து, அவர்தம் ஆணைவழியே செயலாற்றி, 'இரு என இருந்து சொல்லெனச் சொல்லி'க் கல்வி கற்று வந்தனர். அறிவியல் துறை அறிய அத்துறையில் வல்லவரை நாடுவர். கலைத் துறைக்கு அதன் திறமறிந்தாரை நாடுவர். அங்கே செல்வர் வறியர் என்ற வேறுபாடு இல்லை; ஆண்டி அரசன் என்ற வேறுபாடு இல்லை. குசேலரும் கண்ணனும் ஒரே முனிவரிடம்—சாந்தீப முனிவரிடம் — அடைக்கலமாக இருந்து, அருங்கல்வி கற்றனர். செங்குட்டுவன் தன்னைப் பாடிய பரணரிடம் தன் மகன் 'குட்டுவன்கோ'வையே ஒப்படைத்தான். துரோணரிடம் பலரும் ஒருங்கே விற்கலை கற்றனர். ஏகலைவன் உடனில்லையாயினும் உருவத்தின் முன்னின்று கற்றான். இந்த நிலையில் இன்றேனும், சென்ற தலைமுறை வரையில்—இக்குருகுலவாச அடிப்படையில்—கல்வி அமைந்திருந்தது.

விடியற் காலையில் அனைவரும் ஆசிரியர் வீடு தேடிச் செல்வர். குருகுல வாசத்தில் ஆசான் இல்லமே மாணவர் கல்விக் கூடமாக இலங்கிற்று. சில ஆண்டுகளுக்கு முன்வரை மாணவர் ஆசிரியர் வீடுகளை விடியற் காலையில் நாடிச் சென்றனர். முறைப்படி நூலின்றெனினும் 'முறையம் சொல்லும்' வகையில் பல இலக்கியங்கள் கற்றனர். 'ஏடாயிரங் கோடி எழுதாமற் படித்த விரகர்' பலர் இருந்தனர். இந்த வகையில் கல்வி உளத்தொடு பொருந்தி நன்கு வளர்ந்தது. அது மட்டுமன்றி ஒவ்வொரு துறையிலும் வல்லவர் பலர் வளர்ந்து வந்தனர். வட மொழியிலும் இத்தகைய நிலையிலேயே கல்விநலம் கண்டனர். ஆனால் இன்றைய கல்வி நிலை என்ன?

நல்லாசிரியருடன் நாள் முழுதும்—இளமைக்காலமெல்லாம் இருந்து பழகின் படிப்புமட்டுமன்றிப் பண்பும் வளரும் என்ற நிலையில் அன்றைய குருகுலவாசம் அமைந்திருந்தது. அதனால் கல்வியொடு ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு முதலிய நல்லியல்புகள் அனைத்தும் நாடொறும் வளர்வுற்று வந்தன. இன்றைய கல்விமுறையில் நல்லாசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அத்துணை நெருங்கிய தொடர்பு இல்லை ஒரு நாளைக்கு ஏழு அல்லது ஐந்து ஆசிரியர்களை மாணவர்கள் காணவேண்டும். ஆண்டுதோறும் வேறு வேறு ஆசிரியர்கள் முகம் காணவேண்டும். ஆசிரியர் அனைவரும் பண்டைய ஆசிரியர் மரபைக் காக்கின்றார்கள் என்றும் கூறமுடியாது. இந்த நிலையில் மாணவர்தம் இன்றைய வாழ்வில் அமைதியைக் காணமுயல்கிறார்களோ?

மேலும் அக்காலத்தில் கல்விக் கூடத்தில் கல்விக்கே முதலிடம் கொடுக்கப்பெற்றிருந்தது. ஆனால் இன்று படிப்பு இரண்டாவதாகவே உள்ளது, ஏதோ ஆண்டுக்கொரு தேர்வு என்று இருப்பினும், படிக்கும் நேரம் மிகக் குறைவே. வேடிக்கை, விளையாட்டு, சுற்றுலா, கண்காட்சி என்று இந்த வகையிலேயே அவர்தம் நேரத்தின் பெரும்பகுதி வீணாக்கப் பெறுகின்றது. மாணவர்தம் பேச்சுத்திறனையும் கலை ஆர்வத்தையும் வளர்க்கத் தோற்றுவிக்கப் பெற்ற மன்றங்கள் அர

சியல் மேடைகளாகவும் மாறிப் பல அரசியல் தலைவர்கள் வந்து வந்து பேசும் நிலையில் பணியாற்றுகின்றன. இந்த வகையில் அரசியல் வாடையும் வாழ்வும் பிற கொடுமைகளும் மாணவரிடையில் புகாமல் என்ன செய்யும்? அரசியல் தலைவர்கள்—எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும்—கல்விக் கூடங்களில் 'கால் வைப்பதில்லை' என்று உறுதிபூண்டாலொழியக் கல்விக் கூடங்கள் உருப்படா. அடிமை நாளில் அண்ணல் காந்தி அடிகள் மாணவரையும் உரிமைப் போராட்டத்தில் குதிக்க அழைத்தார் என்றால், இன்று எதற்கெடுத்தாலும் மாணவர் சமூகமே முதலில் அழைக்கப்பெறுகின்றது. இந்த நிலையில் இன்று மாணவர் உலகில் அமைதி காண்பது எங்கே?

எனவே நாளை உலகாள இருக்கும் இளைஞராக—மாணவராக உள்ள உங்களுக்கு ஒன்றுகூற விரும்புகிறேன். இன்றைய அரசியல் தலைவர் என்ன சொன்னாலும் திருந்தாத நிலையிலேயே உள்ளார்கள். எனவே நீங்கள் வருங்காலத்தில் அரசியல் தலைவராக வர நேர்ந்தால் திருத்திய வாழ்வை நாட்டுக்கும் உலகுக்கும் அளிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். எத்தகைய சூழலிலும் அரசியலில் இறங்கி விட்டவர் கல்விக்கூடத்தில் கால் வைக்க வேண்டாம். உங்கள் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டிய நிலைவரின் 'பெற்றோர்' என்ற நிலையில் உள் செல்லுங்கள். கல்விக் கூடங்களில் மாணவர், ஆசிரியர், பெற்றோர் இவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் என்று செல்ல அனுமதிக்கப் பெறாது விலக்கப்பெறுகிறார்களோ—அல்லது விலகி நிற்கிறார்களோ—அன்றுதான் கல்விக் கூடங்கள் செம்மையாகும்; கல்வியின் தரம் உயரும்; மாணவரிடையேயும் அமைதி நிலவும். நாளை இந்த நல்ல பணியைச் செய்ய நாடு உங்களை அழைக்கின்றது என்று கூறி மேலே செல்கிறேன்.

நாட்டிலும் உலகிலும் எத்தனையோ புதுப்புது நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. விண்ணை முட்டும் பணிகள்—ஆய்வுகள் வெற்றி பெறக் காண்கின்றோம். நேற்றைய நிலையில்

காணாத பல இன்று காணப் பெறுகின்றன. ஆனால் இவை பற்றி யெல்லாம் நேற்று அறிந்தோர் கூறினால் நாம் எள்ளி நகையாடினோம். 'இராவணன் விண்ணிலே பறந்தான்' என்றால் 'எத்தனை பெரும் பொய்' என்று ஏளனஞ் செய்தோர், இன்னும் தமிழ்நாட்டில் வாழ்கின்றனர். 'வலவன் ஏவா வானவூர்தி' என்ற புறப்பாட்டைப் பொய்ப் பாட்டு என்று பேசியவாய் இன்னும் நாட்டில் சுவைத்துக்கொண் டிருக்கிறது. இப்படியே இன்னும் எத்தனை எத்தனையோ. இவற்றையெல்லாம் ஆராயும்போது பழைய அனைத்தும் பொய் யென்றோ கொள்ளத் தகாதவை என்றோ அன்றி அப்படியே போற்றப்படவேண்டுவன என்றோ நாம் நம்ப முடியாது. அப்படியே நாளைபற்றிக் காணும் கனவும் நனவும் அனைத்தும் சிறந்தன என்றோ அல்லது பயனற்றன என்றோ கொள்ளவும் முடியாது. எனவே நேற்றைய வாழ்வையும் நாளைய வாழ்வையும் இன்றைய வாழ்வொடு இணைத்துப் பார்க்கின்றபோது எத்தனையோ உண்மைகளைக் காண இயலும். எண்ணிப் பார்த்து ஏற்பன செய்ய உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ் மொழி இலக்கிய வழியே ஒரு சிறிது எண்ணிப் பார்க்கலாம். பாரதி தமிழ்ச் சங்கத்தாருக்கு அதை எண்ணிப் பார்க்க முழு உரிமை உண்டல்லவா? தமிழ் இலக்கிய மரபில் பழமைக்கும் புதுமைக்கும்—நேற்றைக்கும் நாளைக்கும் பாலம் அமைத்த பெருமை பாரதியாருக்கே உண்டு. அவர் வாழ்ந்த காலத்தில் அவர்தம் பாடல் களில் பிழை கண்ட பெரியோர்களும் இருந்தனர். ஆனால் இன்று அவர் தம் பெயரும் அறியா வகையில் மறையப் பாரதி பார் உள்ளளவும் வாழும் தெய்வக்கவியாகி விட்டாரல்லவா! இலக்கண மரபு காக்கப்படவேண்டிய ஒன்று. எனினும் அதற்காக இல்லாத மரபையும் பொல்லாத மரபையும் கட்டிக் காப்பதாகச் சொல்லிக்கொண்டு வளரும் இலக்கியத்தை—கலையை—வாழ்வைத் தடை செய்வது பொருத்தமானதாகுமா? ஆழ்ந்து நோக்கின் 'இலக்கியங்

கண்டதற் கிலக்கணம் இயம்பலே' மரபு. எனவே வளரும் இலக்கிய நெறிபற்றி வளமான இலக்கண மரபினைப் போற்றலே சிறந்த நெறியாகும். இவற்றின் அடிப்படை யாவும் மொழி இயலின் அடிப்படை மரபைக் கெடுக்காதிருக்கின்றனவா என்ற ஒன்றையே ஊன்றி நோக்கல் வேண்டும். தொல்காப்பியர் காட்டிய மொழி இயல் அடிப்படை கெடாத நிலையில் தமிழில் எத்தனை நூற்றுண்டுகள் கழித்தும் புதுப்புது இலக்கியங்கள் தோன்றினும்—அவற்றின் அடிப்படையில் இலக்கணங்கள் தோன்றினும்-அவை என்றென்றும் வாழும் என்பது உறுதி. ஆனால் இந்த அடிப்படை நிலையை மறந்து, மனம்போன வகையில் இலக்கியம் செய்வதாகச் சொல்லி அந்தப் பெயரையே கொலை செய்வதும் அதற்கேற்ற இலக்கண விளக்கங்கள் எழுதுவதும் நிலைகெட்டுக் காலத்தேவன் கையில் சிக்குண்டு சிதறுண்டு போகும். முன்னதற்கு எடுத்துக்காட்டுப் பாரதியின் கவிதைகள். பின்னதற்கு நாம் எடுத்துக்காட்டினைத் தரவேண்டா. தமிழ் இலக்கிய வரலாறு உங்கட்குப் பதில் சொல்லும்.

பாரதி பழமையான நேற்றைய இலக்கியங்களோடு நாளையும் வாழவேண்டிய இலக்கியங்களை எண்ணி, இன்று நாம் ஆற்றவேண்டிய பணியினை எடுத்துக் காட்டுகிறார்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
    வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
    உண்மைவெறும் புகழ்ச்சி இல்லை

என்று நேற்றுத்தமிழ் நாட்டில் வாழ்ந்த பெரும் புலவர்களை நம் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் பாரதி. ஆனால் இப்பழமையை எண்ணிக் கொண்டு இன்று வாழும் நாம் நம் கடமையை மறந்து விடுவோமே யானால் நாளைய தமிழ் நாடு என்னாகும் என்பதையும் எண்ணிப் பார்க்கிறார்; உள்ளம் உணர்த்துகிறது. வாய்பாடுகிறது-நாமும் பாடுவோம்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
    தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
    தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
    சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமைஎனில் வெளிநாட்டோர்
    அதைவணக்கம் செய்தல் வேண்டும்

என்பது பாரதியின் வாக்கு. இது தமிழ் இலக்கியத்துக்கு மட்டுமன்றி உலகமொழிகளுக்கும் அவற்றின்வழி உருவாகும் இலக்கியங்கள் அனைத்துக்கும் பொருந்துவதாகும். எனவே தமிழ் மாணவர்களாக உள்ள உங்கள் பணிவழியேதான் எதிர் காலத்தில் தமிழ் இலக்கியம் சிறக்கவழி உண்டு என்பதை உணர்த்தி மேலே செல்கின்றேன்.

கலை, கல்வி, இவற்றொரு பண்பாடு, நாகரிகம் என்ற சொற்களும் அடிக்கடி நாட்டில் பழக்கத்தில் உள்ளதைக் காண்கின்றோம். இந்தச் சொற்களுக்கு நேற்றுத் தமிழில் வழங்கிய பொருளைக் காணின் இன்று நாம் எவ்வளவு தூரம் அவற்றை விட்டு அப்பாலே சென்று விட்டோம் என்ற உண்மை புலனாகும். புறக்கோலத்தையும் புற ஒழுக்கத்தை யுமே நாம் நாகரிகம் என நம்புகிறோம். சென்னை, கல்கத்தா முதலிய நகரங்களில் நாம் அப்புற நிலைகளையே பெரிதாகப் போற்றுகிறோம். ஆயினும் எண்ணிப் பார்க்கின்றபோது தமிழர்தம் பண்பாடும் நாகரிகமும் எந்த அளவில் இவற்றினும் மாறுபட்டுள்ளன என்பது புலனாகும். தமிழர் இப் புறக்கோலத்தை என்றும் வெறுக்கவில்லை. சங்ககாலப் பாடல்களைக் காணும்போது அவர்தம் உடையும் உணவும் பிற உயிர்நிலை பற்றிய வாழ்க்கை வசதிகளும் இன்று இருக்கும் நிலையினும் உயர்ந்தே இருந்தமையை அறிய முடிகின்றது. ஆனால் நாம் இன்று நினைப்பது போன்று அவர்கள் அவற்றையே நாகரிகம் என அறுதியிடவில்லை. அவையும் நாகரிக

மாகலாம்; ஆனால் அவற்றினும் மேலாக உள்ள நிலையே நாகரிகத்துக்கு அடிப்படையாகின்றது.

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் (குறள், 580)

நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் (நற். 355)

என்பன போன்ற நேற்றைய பழந்தமிழ் அடிகள் நமக்கு உண்மை நாகரிகத்தை உணர்த்தவில்லையா? பண்பாடும் இத் தகையது.

பண்புடையாப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன் (குறள், 996)

என்று வள்ளுவர் இவ்வுலக வாழ்வுக்கே அப்பண்பினை அடிப் படையாகக் காட்டுவர். இன்று இப்பண்பும் நாகரிகமும் நாட் டிலும் உலகிலும் பெருகி வருகின்ற காரணத்தினாலேதான் மக்கள் விலங்காகி மாள்கின்றனர். நாளைய சமுதாயத்தை உருவாக்க நிற்கும் மாணவர்களாகிய உங்களது இன்றைய பணி இத்தகைய பண்பாட்டையும் நாகரிகத்தையும் உலகி லும் நாட்டிலும் வாழ வழி வகுப்பதுதான். வகுத்து ஆக்கப் பணி புரியுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

இப்படியே வாழ்வியலில் ஒவ்வொரு கூறுபாட்டினை முக் கால எல்லையிலிருந்து ஆராய்ந்துகொண்டே போகலாம். கலை யின் பெயரால் மக்கள் இன்று நிலைகெட்டு வருவதைக் கண்டு நல்லவர் உள்ளம் நலிகின்றனர்; அல்லார் செம்மாகின்றனர். உடலெல்லாம் தெரியக் காட்டியும் உரக்கக் கூக்குரலிட்டும் ஆடியும் பாடியும், தேவை இல்லாத வகையிலெல்லாம் கலை வளர்க்கும் கண் அருக்காட்சி நாட்டில் நாள்தோறும் நடக் கும் காட்சிகளாகி விட்டன. நாளைய சமுதாய வாழ்வு நல்ல வாழ்வாக-உலகம் போற்றும் வாழ்வாக-செம்மை வாழ்வாகச் சிறக்க வேண்டுமாயின் இவை அனைத்தும் இன்றே செம்மை யாக்கப் பெறல் வேண்டும்.

கடந்ததை எண்ணி மகிழ்ந்தோ கவலை கொண்டோ காலத்தைக் கழிக்க வேண்டாம். கடந்தது கடந்ததே; சென்றது மீளாது. எனவே அதை நினைத்துக் கொண்டு ஏங்கல் வேண்டா! தனிவாழ்வாயினும் பொது வாழ்வாயினும் சென்றதை எண்ணி வாடலாகாது. சென்ற காலச் செய்திகள் நம் வருங்கால வாழ்விற்கு வழிகாட்டியாக இயங்கலாம்; நம் வருங் காலச் சமுதாயத்தைச் செம்மையாக்கப் பயன்படலாம். இந்த வகையில் கடந்ததை எண்ணி, நாளை நல் வாழ்வுக்கு இன்றைக்குரிய ஆக்கப் பணியைச் செய்ய மக்களினம் முன் வரவேண்டும். பாரதியார் இந்த உண்மையை நன்கு விளக்கித் தீமை நீக்கி நன்மை காணும் நெறியைக் காட்டுகிறார். பழங்காலப் பெருமையினையும் சிறுமையினையும் எண்ணிப் பார்த்த அவர் பழைமையில் நல்லதைக் கொண்டு, அல்லதை எண்ணி அல்லலுறுது புதிய உயிர் வாழ்வு பெற்ற நிலையில் நம்மையெல்லாம் மகிழ்ந்து வாழக் கட்டளையிடுகிறார். ஆம்! அம் மகிழ்ச்சியில் நாளை எந்தத் தீமையும் நம்மை அணுகாது. 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற அப்பர் வாக்கு மெய்யாகும்.

இந்த உணர்வோடு உலகில் வாழும் மக்கள் அனைவரும் இன்று செயல் படுவார்களாயின் நாளை நம்மை வெல்ல வல்ல சக்தி—மனித இனத்தின் ஒருமை உணர்வினும் மேம்பட்ட சக்தி—உலகில் இருக்காது. மனிதன் மனிதனாக வாழ்வான். இவ்வங்க நாட்டில் வாழும் மக்கள் சிறப்பாகத் தமிழ்மக்கள் இவ்வாக்கப் பணிக்கு வழிகாட்டிகளாக அமையுமாறு வேண்டிக் கொண்டு விடைபெறுகின்றேன். பண்பாட்டின் அடிப்படையில் பணியாற்றும் இக் கல்கத்தா பாரதி தமிழ்ச்சங்கம் ஆக்கப்பணி பல புரிந்து மக்கள் வாழ்வைச் செம்மை நெறியில் சிறக்க வைக்கும் என்ற உறுதியோடு-உணர்வோடு விடைபெறுகின்றேன். வணக்கம்.

## ஆசிரியர் அ. மு. ப. வின் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய முதற் சட்டம் | ... | 2 50 |
| 2. | சாதி வெறி | ... | 1 00 |
| 3. | கவிதை உள்ளம் I & II | ... | 1 50 |
| 4. | பாசம் | ... | 1 75 |
| 5. | கரை படிந்த உள்ளம் | ... | 1 37 |
| 6. | கண்டதும் கருத்தும் | ... | 1 00 |
| 7. | மலேயாச் சொற்பொழிவுகள் | ... | 1 50 |
| 8. | கட்டுரைப் பத்து | ... | 1 25 |
| 9. | தமிழன் கண்ட மலேயா | ... | 2 00 |
| 10. | வாழ்வுப் பாதை | ... | 4 50 |
| 11. | துன்பச் சுழல் | ... | 2 00 |
| 12. | காப்பியக் கதைகள் (மூன்றும்) | ... | 5 00 |
| 13. | தமிழ் நாட்டு விழாக்கள் | ... | 1 50 |
| 14. | மனிதன் எங்கே செல்கின்றான்? | ... | 1 50 |
| 15. | கவிதையும் வாழ்க்கையும் | ... | 8 00 |
| 16 | கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | ... | 2 50 |
| 17. | வையைத் தமிழ் | ... | 2 50 |
| 18. | தமிழக வரலாறு | ... | 7 00 |
| 19. | தமிழ் உரை நடை | ... | 3 50 |
| 20. | பாட்டும் பாணும் | ... | 2 50 |
| 21. | இளமையின் நினைவுகள் | ... | 2 50 |
| 22. | கொய்த மலர்கள் | ... | 3 50 |
| 23. | நல்ல தமிழ் | ... | 2 00 |
| 24. | சமயமும் சமூகமும் | ... | 2 00 |
| 25. | மணிபல்லவம் | ... | 1 50 |
| 26. | பெண் | ... | 1 50 |
| 27. | மக்கட் செல்வம் | ... | 2 00 |
| 28. | வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும் | ... | 3 00 |
| 29 | சமுதாயமும் பண்பாடும் | ... | 7 00 |
| 30. | எல்லோரும் வாழவேண்டும் | ... | 3 00 |
| 31. | அறிவு வளர | ... | 3 00 |
| 32. | தொழில் வளம் | ... | 5 00 |
| 33 | வாய்மொழி இலக்கியம் | ... | 3 00 |
| 34. | மானுடம் வென்றது | ... | 3 00 |
| 35. | பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடை | ... | 4 00 |

### ஆங்கில நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | Gleanings of Tamil Culture | 1 50 |
| 2. | Tamilnad Through Ages | 3 50 |
| 3. | Temples and legends of Tamiland (in Print) | |

தமிழ்க்கலைப் பதிப்பகம். சென்னை-30.